ஸ்ரீமத்

# இராமாயணச் சிந்து.

தூத்துக்குடி காரப்பேட்டை நாடார்

ஆண்பாடசாலை

ஆசிரியர்

பால் எதல்பட் கோனாரவர்களால்

இயற்றப்பெற்று



தூத்துக்குடி நாடார் பிரிண்டிங் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1932.

rved.] [விலை அணா 12.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 25 | தண்டக்காருணியத்தில்- | தண்டக்காரணியத்தில் |
| 14 | 31 | அனறன்னே | அன்றன்னே |
| 16 | 12 | அருந்த்வம் | அருந்தவம் |
| 18 | 2 | அவளை | அவனை |
| ,, | 3 | ஈந்தால் | ஈந்தார் |
| ,, | 36 | புக்கானர் | புக்கனர் |
| 21 | 20 | சென்ருள் | சென்ருன் |
| 46 | 2 | சொல்லி | சொல்ல |
| 99 | 32 | எழுந்ததைபும் | எழுந்ததையும் |
| 100 | 24 | புக்தி | புத்தி |
| 101 | 14 | காகட்டுமென்று | தாகட்டுமென்று |
| ,, | 28 | மாகலி | மாதலி |
| 102 | 5 | களைகெளிந்து | களைதெளிந்து |
| ,, | 14 | அறிய | அரிய |

# ஸ்ரீமத்

# இராமாயணச் சிந்து.

## காப்பு—நொண்டிச்சிந்து

தெந்தன தெனதெனஞ—தெனஞ
தெந்தன தெனதென தென தெனஞ

உலகத்துக்குயிராகவும்—எவரேனும்
உள்ளிஞலுளங்கனி தண்ணளியாகவும்
பொலம் ஒன்றும் அண்டிடாமற்—சிந்துவைப்
பொழிநாவருளிறைவன் பாதங் காப்பே.

## அவையடக்கம்

கானமருமயிலாட—வான்கோழி
கண்டுகொண்டு தானதுவா யுட்கொண்டு
ஈண்முறவாடும் விதமா—மென்சிந்துவி
லெக்குற்றமும் போற்றியாதரிப்பீர் புலவீர்

கம்பர்என்னில் சதகோடியும்—சங்கீதக்
கவி அருணசலமும் அன்னேமிகுவர்
இம்பர்புகழ் ராமர்சரிதை—சிந்தாகும்
என்கவிப்பிழை பொறுப்பீர் மகாசபையீர்.

## ஈஸ்வரன் துதி

தன்னருள் வெளிக்குள்ளே—அகண்டமும்
தங்கும்படியாய் மிகுத்த தயாசொரூபி
என்னிதயந் தன்னுள்ளமைய—இதயங்கொண்ட
ஏகமூலத்தச்சொரூபன் பாதம்போற்றி.

## கதையின் வரலாறு

### நெடிலடியாசிரிய விருத்தம்

தயரதனின் மகர்ராம லக்குமணர் ஜானகியாள் தவமேபூண்டு
துயர்வின்றி அடவியான தண்டக்காருணியத்தில் பஞ்சவடி தன்னில்
நயந்திருந்து துட்டநிக்ர ஹத்துக்குக் காரியகாரணமேயாகுஞ்
சயத்திருமால் அமளிமனை தாரணியில் அவதரித்த தன்மை
சொல்வாம் [அமளி—படுக்கை]

## சம்பவம் — நொண்டிச்சிந்து

சூரியகுலத்தரசர்-ஆண்டார்கள்
சுகம்வளம்மிகுந்த வயோத்திதன்னில்
சீரியல்புடையவந்த-அரசர்களில்
செம்மைமிகுத்தவர் தசரதராவார்

மணந்தனர்மூவர்களை-அவர்களுள்
மாவளக்கோசலை நாட்டரசர்மகள்
கனமுள்ளகௌசலையென்று-மற்றிருவர்
கைகேயி சுமித்திரையென்பவர்கள்—தெந்

## ஒன்பது சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

புத்திரப்பேறில்லாமற்றசரதர்செய் புத்திரகாமேஷ்டியாகப்
புண்ணியத்தின்பயனுகப் பீடுடையமக்களுல்வர்
இத்தரையிலுற்றதுவு மெழிலாகவளர்ந்ததுவுமிசைந்தகல்வி
ஏனையவாயுதப்பயிற்சி பரியேற்றங்கரியினேற்றம்
மெத்தவிருப்புடன்கற்று மேன்மையுறுகுணங்களெல்லாம்
[பொருந்தவெய்தி
மிகுதவத்தையுடைய முனிகோசிகனின்யாகந்தன்னைப்
பத்திரமாய்க்காப்பதற்குச்செலும்பொழுது தாடகையைச்
[சங்கரித்துப்
பதங்கொடுகல்அகலிகையை விமோக்ஷித்தல் பகாலுற்றும்.

## நொண்டிச்சிந்து

புத்திரப்பேறில்லாமல்-தசரதர்
புத்திரகாமேஷ்டி யாகம்செய்துவைத்தார்
அத்தன்கிருபைசெய்தார்-கௌசலைக்கு
அதியழகுள்ள ஸ்ரீராமர்பிறந்தார்

இகத்தினிற்புகழ்படைத்த-பரதனை
எழிலாகக்கைகேயி ஈன்றெடுத்தனள்
மகத்தானலக்குமணர்-சத்ருக்கனனை
மாட்சியுறு சுமித்திரை மகராய்ப்பெற்றாள்

சீராட்டிப்பாராட்டி-நால்வரையும்
சிறந்தவசிஷ்டரிடம் பள்ளிக்குவைத்தார்
ஆராயும்நூல்களுடன்-அரசர்க்கு
ஆனவித்தைசகலமும் விரைவிற்கற்றார்

# ஸ்ரீமத் இராமாயணச் சிந்து.

வசிஷ்டர்ஓர்பெரியரிஷி-அவர்தான்
வமிசபரம்பரையாய் குருவானவர்
சிஷியர்கள்யாரையேனும்-அவரும்
சிறிதுமேபேதமின்றி யொன்றாய்மதிப்பார்

காமதேனுவென்னும்-தெய்வீகக்
கறவை யொன்றிருந்தது அவரிடத்தில்
ஆமதிலெந்தநேரமும்-வேண்டிய
அரும்பொருள் யாவையும் பெற்றுக்கொள்ளலாம்

இந்தப்பசுவைக்கௌசிகர்-அரசனாய்
இருக்கும்போது வசிஷ்டரிடம் கேட்டார்
தந்திலமென்றதனால்-கௌசிகர் (தந்திலம்—தாமாட்டோம்)
தருசேனை யொன்றோடு கவரவந்தார்

தபபல மகிமைதன்னை-கௌசிகர்
சற்றேனுமறியாமல் இப்படிச்செய்தார்
உபபல மொன்றுமின்றி-வசிஷ்டரும்
உட்கார்ந்தபடியே வெற்றியடைந்தார்

விஸ்வாமித்திரர் என்னுங்-கௌசிகர்
விழுமிய தபத்தினின் மகிமைகண்டு
விஸ்வாசமாகப் புத்திரர்-கள்இடம்
வியன் அரசாட்சியை ஒப்புவித்திட்டு

கடுமையாய்த் தபஞ்செய்து-முனிவரின்
கனமகிமைப்பலன் தானும்பெறவே
உடுப்பு மரத்தோலாய்க்-கொண்டு
உடனே வனத்துக்குப் பயணமாகி

வனத்தினில் ரிஷியாக-வசிக்கும்போது
வளம்பெறும் யாகம்ஒன்று முடிக்கவெண்ணி
அனர்த்தங்கள் செய்துவரும்-ராட்சதரின்
அட்டூழியத்தினின்றும் யாகத்தைக்காக்க

தானேபோர் செய்தல்தகாது-என்றும்
தகுந்துணை ஒன்று தேடவேண்டும் என்றும்
கோனேறுந் தசரதரின்-அரண்மனையைக்
குறுகினர் கால்நடை யாகநடந்து

விஸ்வாமித்திரர் வந்தது-காதில்
விழுமுன் தசரதர் எழுந்தோடி
விஸ்வாஸ பக்தியோடு-அடிபணிந்து
வேண்டும் பணிவிடைகள் செய்தபின்பு

# ஸ்ரீமத் இராமயாணச் சிந்து.

அடியேன் சிறுகுடிசை-தாங்கள்
அடைந்த தேனென்று தசரதர்கேட்க
கடிதினில் ஸ்ரீராமனை-என்னுடன்
காட்டுக்கனுப்பெனக் கௌஸிகர் கேட்க

தசரதர்துடி துடித்து-சிறுவனைத்
தயவாக மன்னியும் மஹானுபாவா
வசமாகக் குற்றேவல்கள்-செய்வதற்கு
வருகிறேன் யானொரு சேனையோடு

எனத் தசரதர் பணிவாய்-இயம்பிட
என்னென்று சொல்ல முடியாதகோப
மனதுடன் கௌசிகரும்-உன்னை
மறுத்துரையாத மன்னனென்று நினைத்தேன்

இனத்தை நான் கண்டுகொண்டேன்-நீயும்
இணையில்லாப் பொய்யர்களில் முதல்வனுைய்
குணமாக யெல்லாந்தருவேன்-என்றுநீ
குதூகலமாய் முதலிற் சொன்னையல்லவா

என்று புறப்படவே-வசிஷ்டரின்
ஏற்றமுள்ள சமாதான வார்த்தையின் பேரில்
தன்மகன் ஸ்ரீராமனை-தசரதர்
சமாதானத் தோடவரோ டனுப்பி வைத்தார்

ஒருநிமிஷம் எனும்-லக்குமணர்
ஒண்டியாய் ராமரைவிட்டு இருப்பாரோ
இருவரும் ஒன்ருக-உடனே
இருடி விஸ்வாமித்திர ருடன்சென்ருர்

போகும் வழியில் அனேக-புண்ணிய
புனல் தீர்த்தம் க்ஷேத்திரம் தெரிசித்து
ஏகும் வழியிலேயே-ராமருக்கும்
லக்குமர்க்கும் அஸ்திரசஸ்திரங் கற்பித்தார்

துட்டநிக் கிரஹமதும்-அரசர்க்குத்
தொன்றுதொட்டு வரும் சாஸ்திரங்களிலே
சிட்டர் பரிபாலனம்-என்பதும்
சிறந்த குணங்களாகு மெனப்போதித்தார்

## தாடகை சம்ஹாரம்

தாடகை வனம் வந்தார்-அப்போது
தடித்தமலை யொன்றுவருவதுபோல்

தாடகை வருகின்ருள்-அவள் தான்
சதாமிருகம் மனிதர் தின்னுமாக்கி

பெண்பால் என்று இராதே-ஸ்ரீராமா
பெரிய துஷ்கிருத்தியம் உள்ளவள் இவள்
ஒன்ரும் பாணத்திஞல்-ஸ்ரீராமா
உயிரை யெடுத்திடென்று கௌசிகர்சொல்ல

சண்டைக் காரம்பித்தார்-தாடகையும்
தக்கதசரதர்மகன் ஸ்ரீராமரும் (சண்)
கொண்டாள் அனேகரூபம்-தாடகை
கூடுமான விதத்தில் தன்மாயவித்தையால் (கொண்)

என்றும் புகழ்நிலைக்க-ஸ்ரீராமர்
எழிலான அஸ்திரம் ஒன்றுபயோகித்து
கொன்றிட்டார் தாடகையை-அவளும்
குதித்துக் குதித்துவிழுந் தாவியைவிட்டாள்

ஸித்தாசிரமம் சேர்ந்தார்-அதுதான்
சிறந்த விஸ்வாமித்திரர் வசிக்குமிடம்
சித்திபெற யாகந்தன்னைக்-கௌசிகர்
திரண்ட ரிஷிகளோ டாரம்பித்தார்

பத்திரமா யதைக்காக்க-பலமுள்ள
பார்த்திபரின் மக்கள் ராமர் லக்குமர்நின்ருர்
எத்தகை யானஇடைஞ்சல்-ஐந்துநாளாய்
இல்லாம லிருந்தது ஆரும்நாள்

மாரீசன் சுபாகுவென்னும்-பேர்கொண்ட
மனிதர் தின்னுமரக்கர் சேனையோடு
பேரீர உதிரமதை-யாகத்தில்
பெருந்திரளா யிறைக்க ஆரம்பித்தனர்

ராமரும் லக்குமணரும்-இனிமேல்
ராக்கதரைச் சுமமாவிடல் தவறென்று
மாமழை போல அஸ்திரம்-விட்டிட
மாரீசன் போய்த்தூரக் கடலில் வீழ்ந்தான்

தூரத்தில் நின்ற சுபாகை-இரண்டாகத்
துணித்தது ராமலக்மர் விட்ட அம்பொன்று
பார அரக்கர் சேனை-ஒன்றுமின்றி
பட்டது தவிர மற்ற தோடினது

யாகம் முடிந்த தினிதாய்-ராமலக்குமர்
யாதொரு விக்கினமும் வராமற் காத்ததால்
சாகர முழக்கம்போல-பார்த்திபரைச்
சகலரும் மகிழ்ந்தார வாரித்தாசித்தார்

மகரிஷிக் கணமெல்லாம்-மிதிலைக்கு
மகிழ்வுடன் புறப்பட்டுப் போகும்போது
சகஜமாய் இவர்களையுங்-கௌசிகர்
தண்ணளி யுடனழைத்துச் சென்றூர்காண்-தெந்

## அகலிகை சாபவிமோக்ஷணம்

போகிற வழிநடுவில்-இருந்த
பெரிய வனமொன்றிற் புகுந்தார்கள்
ஆகிற காலமொன்றும்-மற்றும்
அழிகிற காலம்ஒன்றும் உண்டல்லவா

ராமர்கால் பட்டடாறை-ஒன்றின்
நடுவிருந் தோர்பெண் நாற்குணங்கள்
ஆமமர் குணங்களோடு-தோன்றியே
அதிக விநயத்தோடு ஒதுங்கிநின்றாள்

ஈதென்ன புதுமையென்று-ராமரும்
எழிலாகக் கௌசிகரை வினவிடவே
கோதொன்றும் இல்லாக்கௌதமர்-வனமிது
குணங்கெட்ட அவர்பன்னி இவளாவாள்

கௌதமர் இவளோடு-இவ்வனத்தில்
கனகளிப் புடன்வாழ்ந்து வருங்காலை
சௌந்திர்ய முள்ளஇவளை-இந்திரன்
தகைபெருங் கௌதமரைப் பார்ப்பதற்கு

நண்ணியபோ திச்சித்தான்-அன்றிரவே
நடுநிசி யோர்சேவல் போலேகூவினான்
நண்ணிற்று உதயமென்று-கௌதமரும்
நற்றீர்த்த ஸ்நானமாடச் சென்றிடவே

புகுந்தா னிந்திரன் ரிஷிபோல்-இவளிடம்
போகமனுபவித்துக் கொண்டிருக்க
தகுதி யுடைய கௌதமர்-அவ்வாறு
சற்று முறக்கந்தெளி யாததுகண்டு

ஞான திட்டியால் தெரிந்தார்-தன்வீட்டில்
நடக்கும் விஷயங்கள் சம்பூரணமாய்

மானத்தால் கோபத்தோடு-வந்து
மறுத்தோட எத்தனித்த இந்திரனுக்கு

ஒன்றுக்கே ஆசைப்பட்டாய்-உனது
உடம்பெல்லாம் ஆயிரம் உறுப்பாயக்கொள்வாய்
என்றோர் சாபங் கொடுத்து-இவளுக்கு
எல்லோரும் மிதித்திடுங் கல்லாவாய்

என்பதாய்ச் சாபங் கொடுத்தார்-இவளும்
எப்போது சாப விமோக்ஷனம்என்ன
மன்னன் ஸ்ரீராமர் கால்படும்-அப்போது
மறுபடி பெண்ணாக வருவாய்என்றார்

இவள்பேர் அகலிகையாம்-இவளும்
இப்போதுன் கருணையால்பெண்ணானாள்
பவளம் உன்கால்வண்ணங் கண்டேன்-இப்போது
பாவிதாடகையால் உன்கைவண்ணங் கண்டேன்

என்று கௌசிகர் துதிக்க-ஒருபுறமாய்
எழிலான அகலிகை நின்று துதிக்க
மன்னுதவக் கௌதமரை-அழைப்பித்து
மறுத்து மவர்பன்னியை ஒப்புவித்திட

கௌதமர் ஆசிசொன்னார்-இவரும்
கடியவனம் பலவுந்தாண்டிச் சென்று
கௌசிகருடன்கூடி-மகிழ்ச்சியோடு
கனவள மிதிலைமா நகரடைந்தார்-தெங்

## ஜானகிசுயவரம்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

பின்னர்படைச் சாலிலெழ சீதைதானே பிரியமணை
யாகத் தன்றிறமுங் காட்ட
மன்னாவை தனிற்றனிவில் முறித்துவீசிமாண்புறுசீர்ச்
சுயவரத்தின் மன்றலெய்தி
மன்னியசீ ரய்யோத்தி நெறியெதிர்த்த மழுப்பரசு
ராமனையே வெற்றிகொண்டு
பின்னமிலா ராகவர் தன்தந்தை தம்பிமாரொடும்
பத்தினியருட னுற்றவாறே

நொண்டிச்சிந்து

மிதிலா நகரமதில்-அரசாண்ட
மிகுபுகழ் ஜனக ராஜனுமோர்

அதியாகஞ் செய்வதற்கு-உழுதிட்ட
அலவன் படைச்சாலி லோர்பெண்கண்டு

எடுத்து நாளொரு மேனியாய்-வளர்த்த
எழில் சீதை சுயவரம் சாற்றினதால்
அடுத்தனர் மிதிலைநகர்-இந்த
அகிலத்திலுள்ள அரசர் இருடிகள் (அடு)

இதனை யறியார் ராமர்-ஆனாலும்
இணையில்லாக் கௌசிகர் கூடவே வந்தார்
மதிமுகச் சீதையோடு-வளர்ந்தவர்
மறுவில் ஊர்மிளை மாண்ட்வி சுதகீர்த்தி

பின்னவர் மூவருக்கும்-சீதைக்கும்
பெருமையாய்க் கலியாணம் செய்யும் பருவம்
நண்ணின காரணத்தால்-ஜனகரும்
நாடெங்கும் சுயவர வோலை விடுத்தார்

நண்ணினர் மிதிலைநகர்-அரசர்கள்
நமக்கழகான சீதை கிடைக்குமென்று [நண்]
எண்ணியே சிலர் வந்தார்-சுயவரத்தில்
இசைவாய்ப் பூரிபோனகங் கிடைக்குமென்று [எண்]

அண்டினர் மிதிலை சிலர்-ஜனகரின்
அருமைமக்களை ஆசி செய்யவென்று [அண்]
எண்டிசை யிலுமிருந்து-மானிடர்
எள்ளளவும் இடமின்றிக் குழுமினர்கள்

சுயவரப் பந்தல் நரப்பண்-நார்பலர்
சுமந்து வந்து போட்டாரோர் பெரும்வில்லை
அயல்இடம் சிலர்தேடினர்-அந்த
அரும்வில் கண்டதினால் முன் இடம் விட்டு [அயல்]

சீதையின் கைப்பந்து-மறைந்தபோது
தேடிப் பார்க்கச் சீதை ஓர்கைகொண்டு
ஓதைகொள் இந்தவில்லை-தூக்கினதால்
உரித்தாவள் இவள் வில்முறிப்பவருக்கே

என்று மனதில் குறித்தே-ஜனகரும்
எழிற்சுய வரமவ் வண்ணஞ் சாற்றினார்
மன்வில் முறிப்பவரையே-மணப்பனென
மன்னன் ஜனகர் அந்தமன்னவை சொன்னார்

அய்யய்யா சீதைவேண்டாம்-எனக்கு
அதிகப் பிராயந்தான் ஆயிற்றேயென்று
பய்யப்பய்யப் பின்போனார்-பலர்கள்
பார்க்கலாம் வேடிக்கை யென்றே வந்தோமிங்கென்றார்

சிலவீரர் துணிந்தார்கள்-ஆனாலும்
சிவனளித்த வில்லென்று அறியார்கள்
பலவிதமாக முயன்றும்-வில்தூக்கப்
பலமில்லை யென்றுசீதை ஆசைதுறந்தார்

மஹரிஷிக் கூட்டமிருந்து-இருவர்கள்
மகிழ்வுடன் இளஞ்சிங்க ஏறுகள்போலே
கஹன நிறத்திேனாடு-வந்து
கனசபையில் நின்றனர் ராமர் லக்குமர்

தன்வில்லைத் தம்பிகையினில்-கொடுத்திட்டு
தகுசுய வரச்சிலை எடுத்தொடித்தார்
மன்னர்கள் மனம் வெம்பினார்-ஆனாலும்
மலைபோல் பெரிதாய் ராமர் பலம்மெச்சினார்

கௌசிகர் வாய்திறந்தார்-ராமரின்
கனம் குலம் இனம் திருவாய்மலர்ந்தார்
பௌசினன் ஜனகராசன்-இதைக்கேட்டு
பண்பா யோலைபோக்கினன் தசரதர்க்கு

தசரதர் ஓலைபார்த்த-தட்சணம்
தன்மைந்த ரிருவரோடுஞ் சேனையோடும்
அசலாம் பரிகள்பூட்டி-தேரினில்
அணிஅணி யாகவந்து சேர்ந்தார்மிதிலை

சம்மந்தி யாகநேர்ந்த-தசரதர்
ஜனகர் இருபேர்களும் அன்பாக
சம்மதம் ஒன்றாகி-ராமருக்குத்
தகுதியாம் சீதையை மன்றல்முடித்தார்

பரதர்க்கு மாண்டவியைச்-செய்வித்து
பத்தினியாம் ஊர்மிளையை லக்குமணர்க்கும்
காம்சேர்த்தார் அன்றைக்கே-சுதகீர்த்தியை
கனமுள்ள சத்துருக்க ணர்க்குச்செய்தார்

மன்றல் முடிந்த தினிதாய்-கௌசிகர்
மனமொடு ஆசிபல கொடுத்தபின்னர்
மன்னன் தசரதர்தான்-பிரியமாய்
மக்கள்மரு மக்களோ டயோத்திக்காயினார்

## பரசுராமர் வழிமறித்தல்

போகிற வழிநடுவில்-பரசுராமர்
பொருந்திய வில்லோ டெதிராகநின்றார்
சாகிற காலம் கிட்டிற்று-என்று
தசரதர் கீழிறங்கிக் காலில்விழுந்தார்

பிச்சைதா பிள்ளைகள் உயிர்-என்று
பெரிதாகத் தசரதர் விரும்பிக் கேட்டும்
அச்சணம் முகந்திருப்பி-ஹேராமா
ஆதியில் மேருவிலோர் ஜோதி யெழும்பி

அதினின்று இரண்டு வில்கள்-எழும்பின
அவைகளைத் தேவர்கூடி சிவனுக்கொன்றும்
மதிபெரும் விஷ்டுணு வுக்கு-ஒன்றுமாய்
மனமொத்துத் தக்கவர்க ளென்றுகொடுக்க

இடையில் இருந்தபிரமன்-இவர்களுக்குள்
எவர்வலு வுள்ளவர்தான் என்றுதெரிய
அடைவாகக் காணவேண்டும்-என்று
அவர்கள் இருவருக்கும் சண்டைவிளைக்க

சண்டையும் வெகுகாலம்-ஓயாது
தரும்விஷ்ணு வால்சிவனின் வில்லுமொடிய
சண்டையும் நின்றுவிட்டது-அப்போது
தகவில வென்றுசிவன் கீழேவீசிட

மிதிலையில் வந்துவீழ்ந்தது-அதுதான்
மிதிலை ஜனகன் வீட்டில் நீயொடித்தவில்
அதிலென்ன பெருமையப்பா-ஒடிந்ததை
அதிகபலம் கொண்டுநீ ஒடித்திட்டது

இந்தவில் லென்கை பார்ப்பாய்-இதுவும்
இதமாக இருஷிக் ரிஷிக்கு விஷ்ணு
தந்திட்ட வில்லாகும்-ரிஷியுமென்
தந்தைக் களித்ததாலென் பிதிரார்ஜ்ஜிதம்

சூரிய குலத்துக் கார்த்த-வீரியனும்
துணிவாக என்தந்தையைக் கொன்றுவிட்டதால்
கூரிய விரதம் பூண்டேன்-யானும்
கொடிமுதல் சூரியகுலவேர்த் தோண்ட (கூரி)

ஆனாலுங் கங்கணக் கையர்-ஆயிருந்தால்
அதிபாவங் கொல்வதென்றோர் உறுதிகொண்டேன்

தானுக அறிந்து கொண்டார்-உன் தந்தை
தந்திரமாய்ப் பத்தாயிரம் மணம்முடித்தார்

வருடத்திற் கொவ்வொன்ருய்-இவ்விதம்யான்
வரும்பொழுதெல்லாங் கங்கணங் கட்டியிருந்தார்
புருடாத்தினம் போலே-அதனுல்
பொருந்த உடலுயிரொன் ருயிருக்கிருர்

ஒடித்தவில் நேர்மை யறிவேன்-நீயும்
வதைத்த தாடகையோ பெண்பாலென் றறிவேன்
அடிபடை வீரன்போலே-நீயும்
அதிபேரிகை முழக்கி வருவதேனே

இந்தவில் தருகிறேன்பார்-இதனை
எழிலாக வளைத்திடு அல்லாதவரை
வந்துபார் யுத்தத்திற்கு-என்று
வாய்மதங்கள் பேசினர் பரசுராமர்

அந்தவில் கைக்கொண்டார்-ராமரும்
அதிகப் புன்னகைகொண்டு நீர் தபசி
எந்த விதத்தினுலும்-உம்கையில்
இருந் தனுஸிருப்பது தவருகும்

ஆகையால் வில்லைத்தாரும்-எனவாங்கி
அரைக்கணத்தில் ரதத்திலேயே வளைத்து
ஏதையா லக்கிதற்கென்று-வினவவும்
இன்னுயிர் தொலையுமென்று பரசுராமர்

உள்ளம்மெய்ந் நடுங்கினர்காண்-உடனே
விழுந்துசாஷ் டாங்கமாய்த் தண்டம்பண்ணினர்
மெள்ளவே நான் தபசி-என்தவறை
மிகமன்னித் துயிர்ப்பிச்சை தந்தருள்வாய்

இந்த நாணுக் கிலக்காய்-என்தவத்தை
இறுத்திடுவது முன்றன் அருளேதான்
வந்தது மதியீனம்-என்று
வாய்குளறி வந்தித்து நின்றதாலே

எய்தார் இராமர் பாணத்தை-உடனே
இறந்தது பரசு ராமன்தவமும்
செய்யினிப் போய்த்தவமே-என்று
செம்மனக் கருணையாற் போக்கியபின்

வருணனுக் கொப்புவித்தார்-அந்தவில்லை (வரு
வாளரசன் தசரதன் உள்ளம்பூரித்தார்
பெரும்வளச் சீதனத்தோடு-எல்லோரும்
பெருக்கமா யய்யோத்தி போயடைந்தனர்-தெந்

## யுவராஜ் பட்டாபிஷேகம்—மந்திரை சூழ்ச்சி

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

மந்திரையின் சூழ்ச்சியினாற் கைகேசிதன் மன்னனளி
வரமிரண்டுங் கருவியாக
சொந்தமகன் பரதனுக்குப் பட்டமென்றுந்
தோள்வலி ராமனும் பதினான்காண்டு காட்டில்

வெந்தழல் மாதவரிஷியரோடு வாழ்ந்து வியாமற்
றிரும்பிடிலே பட்டமென்றும்
பந்தனையாற் சீராமன் குகன்நட்பும் பஞ்சவடி
அடைதலுமே பகாலுற்றும்

நொண்டிச்சிந்து

அரசர்கட் கிதுவழக்கம்-தமக்கு
அரச காரியங்களின் சடவாற
சிரஇஷ்ட மகன் தகுந்த-வயதாகித்
திறமுட னிருந்தா லவர்கொண்டு

ராஜ காரியங்கள் பார்க்க-யுவராஜ
ரமணீகரப் பட்டம் அவர்க்குக் கட்டி
ராஜன்தான் உபபலமாய்-இருந்துகொண்டு
ராஜ்ஜியம் நடத்துவதோர் சம்பிரதாயம்

இதன்முறை தவறாமல்-தசரதரும்
எழில் ராமருக்கு யுவராஜப் பட்டம்
இதமாகக் கட்டுவதற்கு-தசரதர்
இனிதாக உத்திரவு பண்ணினதினால்

அய்யோத்தி நகர்முழுதும்-மிகவும்
அலங்காரப் படுத்தினர் தோரணங்கட்டி
மெய்யான விசுவாசக்-குடிகளன்றி
மேல்வெதும்பி உட்குளிருங் குடிகளில்லை

ஆதலால் ராமர்பட்டம்-பார்ப்பதற்கும்
அழகாய்ப் பவனிவரக் காண்பதற்கும்
காதலித் தாசித்தனர்-ஆனாலும்
கடவுள் செயலல்லால் வேறொன்றும் நடவா

என்பதற் கிதுவேசாட்சி-இவ்வைபவம்
எழில்பெற நடப்பதற் கெல்லாந் தயாராய்
மன்னிய சீரையெல்லாம்-மாற்றிவைக்க
மந்திரைக் கூனி கங்கணங் கட்டினுள்

கூனினில் ஸ்ரீராமர்-சிறுவயதில்
குறிப்பாய்க் களிமண் ணுண்டை வில்லாலடிப்பார்
ஆணியாய் வந்ததம்மா-விளையாட்டும்
அரசருக்கும் பெருங்கஷ்டம் வந்தது

மன்னன் ராமருக்கு-எவ்விதம்
மாறுபாடு செய்யலா மென்றுநினைத்து
கன்னத்திற் கிரட்டைஒன்றை-ஒதுக்கிய
கஜமொத்து நல்லவள்போல் திரிந்துவந்தாள்

மந்திரை கைகேயியின்-வேலையாள்
மந்திரம் உச்சாடனம் செய்வதுபோல்
தந்திரமாய்ச் சமயம்பார்த்து-கைகேயியின்
தருமனங் கொடிய நஞ்சாக்க முயன்று

ராமர்க்குப் பட்டங் கட்டினுல்-கௌசலை
ராணியாவாள் உனக்கதால் என்னபெருமை
ராமர்க்கு நீயுமுன் மகன்-பரதனும்
சாமளவும் ஆளடிமை யாவீரல்லவா

உன்மகன் பரதருக்குப்-பட்டங்கட்ட
உடனே தடுத்துத் தசரதர்க்குச் சொல்லு
மன்னன் உன்மேல் அன்புடையவர்-இதையுன்
மணஞ்செய்யும் போதுன்தந்தை சொன்னதுமுண்டு

என்று மந்திரைசொல்ல-கைகேயி
என்னடி அறிவிலிநீ யிப்படிச் சொன்னுய்
மன்னன் இட்சுவாகுவின் குல-மகிமையை
மாற்றும்படி என்னிடம் இவ்வார்த்தை சொல்வையோ

என்று கனன்றுசொல்ல-மந்திரை
எப்படியானு லெனக்கென் உன்றன்தந்தையை
மன்னன் ஜனக னெதிர்ப்பான்-அப்போது
மருகன் ராமனுபபலமாவான் என்ன

ஆம்அடி மந்திரைநிஜம்-அதற்கு
ஆம்உபாயம் எனக்குச் சொல்லடிஎன்ன
தாம்தேருக் கச்சாய்க் கையிட்டு-சம்பரன்கொன்று
தருவதாய்க்கோசொன்ன வரம்இரண்டுங்கேள்

ஒருவரம் பரதன்பட்டம்-மற்றொன்று
உன்மகன் கலகமின்றி யாள்வதற்குப்
பெருவரம் பதினான்கு-வருடங்களாய்ப்
பெரியமகன் ராமர் காட்டில் வசித்தல்

என்றனள் கூனிமந்திரை-இதற்கு
இசைந்துமே கைகேயி ராஜனிடம்போய்
முன்வரம ரண்டும் கேட்டாள்-தசரதர்
மொழிகேட்கா முன்மூர்ச்சையாய்க் கீழேவிழுந்தார்

தேரில்வெளிச் சென்றிருந்த-ஸ்ரீராமர்
தெருவலங் காரத்தின் இடைவரவும்
நேரில் கண்டவ ரனேகர்-இனிமேல்
நீணிலம் எல்லார்க்கும் பொதுவென்றார்

தேரை நிறுத்தி யிறங்கி-உடனே
திடுதிடென்று மன்னன் கோவில்புகவும்
ஆரையுங் காணாமல்-அச்சணமே
அன்னை கைகேயியின் கோயில்புகுந்தார்

நாயகன் சோர்ந்திருக்கின்றார்-ஆகையால்
நானேயிச் சங்கதியை யுரைப்பேன்என்று
ஆயென நினைத்திருக்கும்-ராமருக்கு
அந்தகனாய்க் கைகேயி எதிரில்நின்றாள்

அன்னையைப் பாதம்வணங்கி-ஸ்ரீராமர்
அரசரின் விஷயமே தென்றுவினவ
பின்னவன் பரதனுக்கு-பட்டமும்
பெருமா உனக்குத்தவ வாழ்க்கையுமாய்

பதினான்கு சம்வத்சரம்-காடேக (சம்வத்சரம்-வருஷம்)
பார்த்திபன் மனசினில் எண்ணங் கொண்டார்
அதினால் சோர்வுற்று-சற்று
அவசமாய்ப் படுத்திருக்கிறார் அறிவாய்

என்று கைகேயி என்பாள்-இயம்பிட
எழில்ராமர் அந்தவாசகம் கேட்கவும்
அனறன்னே மலர்ந்திருந்த-செந்தாமரை
ஆனமலரினும் ஆயிரம்பொலிவாய்

தந்தை கட்டளை யன்றேனும்-யானும்
தாயேநின் கட்டளையேனும் மறுப்பேனோ
எந்தன் பின்னவன் பெற்றிடும்-செல்வமும்
என்செல்வ மாகாதோ அன்னையே யென்றும்

கானமின்றே செல்கின்றேன்யான்-அம்மாநீர்
கடுகவிடை தந்திடும் என்றுவணங்க
தீனக் கைகேயி உடனே-போய்வாயென்ன
தீரன்மகிழ் வாகதாதை பாதம்வணங்கி

எய்தினர் அன்னைகோயில்-அப்போது
எழில்மகுடம் கவரி குடையுமின்றி
மய்யின்றி மஞ்சனமின்றி-வந்திறைஞ்சும்
மகனைக் கண்டன்னைவாழ்த்தி யேதெனக்கேட்க

செம்பவளக் கைகொண்டு-சிரஞ்சேர்த்து
தீதில்நின் மகன்பரதன் மகுடஞ்சூடும்
இம்மண்ணும் பரதனன்றி-எவருக்கு
ஏற்றதாகும் என்றுராமர் கனிந்திடவே

நான்கு மக்களுந் தனதாய்-நினைத்திடும்
நலமான கோசலை நாட்டரசன்மகள்
நான்குபேரிலும் பரதன்-நல்லவனல்
நன்றவனி யர்குப்நீங்கள் பலமாவீர்

என்று கனிவாய் திறந்தாள்-அப்போது
இன்னோர் பணி யுண்டெனக்கென் ராமரியம்ப
இன்னேஎன் னுயிரேயுரையாய்-என்னவும்
ஈரேழாண்டு காட்டில்தவஞ் செய்தலென்றார்

இந்தஉரை காதில்விழாமுன்-கௌசலை
எங்கினள் இளைத்தாள் வெம்பிக் கீழேவிழுந்தாள்
இந்த அவனியைத் தாங்க-உனைச்சொன்னது
என்நாயகர் வஞ்சகமோ நஞ்சங்கொல்லோ

நானுயிர் கொண்டிருக்கேன்-என்று
நைய வயிற்றினைப்பிசைந் தழுதுகொண்டு
கானுக்கெப்போது போகின்றாய்-என்மகனே
காவலர்க்கு நீயிழைத்த பிழையென்கொல்

என்று கதறிவிழுந்த—அன்னையை
எழில்கை களால்தாங்கித் தேற்றல்செய்து
மன்னன்வார்த்தை கடப்பதற்கோ-என் அன்னை
மருவினாய்இந்தநிலை என்று வருந்தி

தம்பிக்கு நாடுகொடுத்து-தந்தையின்
தனிக்கட்டளை சிரத்தில் தாங்கிக்கொண்டு
அம்புவியின் புகழ்பெற்று-அடவியில்
அருந்தவஞ் செயும்பே றெவர்பெற்றார்

ஈரேழ் பதினான்கு-உலகங்களும்
இறந்துபடினும் என்றன் அண்ணல்ஏவலை
சோரேன் நான்அம்மா-இதற்காய்நீ
சோர்ந்து மனம்வருந்தி அழவேண்டாம்

என்று இராமர்சொல்ல-கௌசலை
யானு மரசர்சொல்லை மீறவே சொல்லேன்
இன்னுயிர் இங்குகொண்டிரேன்-ஆதலால்
என்னையும் அழைத்தேகு என்றுசொல்லவும்

எம்பிபரதன் பட்டம்-பெற்றபின்
எம்அண்ணல் தவத்துக்குச் செல்லும்பொழுது
அம்மாநீ அரசரோடு-கூடப்போய்
அருந்தவம் மன்னிடுவாய் என்றன்அன்னையே

மனமேன் கலங்குகின்றாய்-அன்னையே
மண்ணில்தவஞ் செய்தேவர் கெட்டார்கள்
எனக்குச்சொல் பதினான்கு-வருஷங்களும்
இலேசான பகல்பதி னான்குதானன்றோ

என்றுசொல்லி ராமர்தேற்ற-கௌசலை
இளையவள் கைகேயி அரண்மனைக்கு
சென்றுமே மன்னரைக்கண்டு-தரைமேலே
திடீரென வேரற்ற மரமானாள்

விம்மினாள் அழுதாள் பொங்கி-கௌசலை
வெம்பினாள் அனலுற்ற மெழுகானாள்
அம்மாஎன் வாழ்வும் உயிரும்-அய்யய்யோ
அழிந்ததே அனியாயம் என்றலறினாள்

இங்கு இவ்வாறிருக்க-ஸ்ரீராமர்
எழிலன்னை சுமித்திரை யரண்மனைபோய்
பொங்கிய மகிழ்ச்சியோடு-அன்னையை
போற்றியடி தொழுது வீற்றிருந்து

தம்பிலக்குமனை நோக்கி-ஸ்ரீராமர்
சங்கதி விண்டிடவும் ஆரவாரித்து
வெம்பி வில்கையிலெடுத்து-ஈரேழு
உலகத்தை வென்றுமக்குப் பட்டங்கட்டுவேன்

என்று கனன்ற தம்பியை-ஸ்ரீராமர்
என்னவெலாஞ் சொல்லியும் கேட்டிடாததால்
மன்னன் ஆணையைமீறி-யானிருக்கில்
மறுத்து என்னைமீறுதல் உன்றன் குற்றமோ

நற்றண்ணீர் இல்லாததுநதிபிழையோ
நமைப்புரந்தாளின் பிழையும் ஈதன்று
கொற்றவர் பிழையும் அன்று-நமைப்படைத்துக்
குறிப்பிட்ட அயன்பிழை இதுவாகும்

என்று ஸ்ரீராமர்சொல்ல-அப்போது
எழிலான லக்குமர் கோபத்தையமர்த்தி
மன்னன் ராமருடன்-வனமேக
மரவுரி முதலான தரிக்கப்போக

சுமித்திரை சோர்ந்துவீழ்ந்தாள்-அப்போது
தூய கரங்களினால் ராமர் ஏந்தி
அமிதமாய்த் துன்புறுகின்றாய்-யானுமென்
அன்னை தந்தையின் சொல்லைக் கடப்பதாமோ

எங்கேயான் சென்றிடினும்-அதுஎனக்கு
எழிலயோத்தி நகராய்இருக்குமென்று
பொங்கிய துயர் தணிவாய்-என்அம்மா
புனிதமாம் விடைதா வெனச்சொல்லவும்

அந்தவனமே யுனக்கு-லக்குமா
அயோத்தியாகும் அண்ணனே மன்னனாகும்
அந்தமுள்ள ஜானகியே-உன்அன்னை
அடவி சென் றண்ணனோடே திரும்பென்றும்

தங்குவாய் இருவரிடம்-நிழல்போல
தகவாய் இடருறாமல் காத்திடுவாய்
பொங்குபசி தனைத்தீர்த்து-அவர்களின்
புனித ஆசியைப்பெற்று வாழ்வாய்என்றாள்

உடன்வரத் துணிந்துநிற்கும்-லக்குமனை
உரிமைத்தம்பியேநீ யான்சொல்வதைக்கேளு
அடவிக்கு யான்செல்வதால்-ஆம்சோகத்தை
அன்னை தந்தைக்குத்தீர்க்க இருநீயென்ன

மச்சமும் நீலப்புஷ்பமும்-நீரன்றி
மன்னுமோ இவ்வுலகில் எவ்விடமேனும்
உச்சிதமாம் என்னுயிரும்-சீதைஉயிரும்
உய்ந்திடுமோ உம்மைநீங்கி இவ்வுலகில்

தணிப்பாய் கோபத்தையென்று-என்னை
தடுத்தாணை யிட்டதில் மிகக்கொடிதாய்
தனித்தென்னை யிருக்கவைத்துக்-காட்டேகல்
தர்மமோ இதிற்கொடி தேதுண்டென

அன்னே வசிஷ்டர்வந்து-ராமர்க்கு
அவளை விட்டுநீங்கி நீகாடேகில்
அன்னே உயிர் துறப்பன்-என்னவும்
அனுமதி ஈந்தால் ராமர் லக்குமணர்க்கு

அன்னை சுமித்திரைபாதம்-வணங்கிட
அவள்கன்று நீங்கிடும் கற்றுவினைப்போல்
மன்பெருந் துயருற்று-இருவர்க்கும்
மகிழ்வாய் விடைகொடுத் தனுப்பிடவும்

இருவரும் சீதைகோயில்-புகுந்திடவும்
இதயந்துடித் தவள்ஏ தென்றுகேட்கவும்
மருவுவான் பட்டம்பரதன்-யானும்
மருவினேன் கானில் தவம் ஈரேழ்வருஷம்

என்றுமே ராமர்சொல்ல-அப்போது
இணையில்லாத் துயருற்றாள் ஜானகியும்
மன்னன்ராமர் அவளைத்தேற்றி-அயோத்தியில்
மாமி கௌசலையிடம் இருக்கச்சொல்ல

புழுவாய்த் துடித்திட்டாள்-ஜானகி
புரவலன் காடேகற் காகவுமன்று
செழுநக ராட்சிக்காயன்று-புலம்பினாள்
செழுநக ரில்தன்னை இருக்கச் சொற்றற்காய் (புழு)

பால்கடலில் கூடியிருந்து-பின்பு
பண்பா யயோத்தியி லுதித்தபின்னும்
சேல்கண்ணாள் வந்துசேர்ந்தாள்-ஆகையால்
சீர்ராமர் தமைப்பார்த் தேயிவைசொற்றாள்

உயிரின்றி உடலேது-நாதனே
உங்களுக்குத் தெரியாத தொன்றுமேயில்லை
செயிர்த்துப்போர்க் கேகும்போது-அல்லாமல்
சேர்க்கை பிரிதல்கற்புக் கழகாமோ

காட்டினில் ஒன்றாய்வசிப்பேன்-அல்லது
கடுவிடம் உண்டுயிரை விடுவேன்இன்றேல்
கேட்டை யாவேன்என்று-சீரைசுற்றி (கேட்டை-மூதேவி)
கேள்வன் ஸ்ரீராமரின் பக்கத்தில் வந்தாள்

ராமர் சீதைலக்குமர்-மூவரும்
ராணி கைகேயிமன்னர் தசரதர்க்கு
எமன்போல்நின்றுகொண்டும்-கௌசலை
ஏங்கிக் கொண்டுமிருக்கும் கோயில்புக்கானர்

அன்னையர் பாதம்பணிந்தார்-சீதையும்
அன்பாக மாமியர்கள் பாதம்பணிந்தாள்
மன்னனைக் கவனியுங்கள்-எங்கட்கு
மகிழ்வாய் விடைகொடுங்கள் என்றபோது

அன்னை கௌசலையாள்-மக்கட்கும்
அருமை மருமகட்கும் ஆசிகள்சொல்லி
பின்னமில் லாமல்காருங்கள்-தெய்வங்களென்று
பிரார்த்திட்டு விடைகொடுத் திட்டபோது

## வனத்துக்கேகல்

முனிவர்வசிஷ்ட ரிடமும்-விடைபெற்று
மூவருஞ்சீரையே யன்றிவேறொன் றில்லாமல்
நனியணி தேரேறி-சுமந்திரன்
நடத்திடக் கோயில்வாயில்வந்து சேர்ந்து

கண்டகுடி களிடத்தில்-வந்தனம்சொல்லி
கடுவனம் சென்றுமீள்வேன் என்றபோது
குன்றாத மனமகிழ்ச்சி-ராமர்க்கு
குலாவும் முகத்தைக்கண்ட குடிகளெல்லாம்

முகத்தினி லறைந்தவரும்-முகத்தினில்
முக்காடு போட்டுக்கொண்டு அழுதவரும்
அகத்தினில் அடித்தவரும்-அய்யோவென்று
அடிவயிற்றினைப் பிசைந்தழுதவரும்

நிலத்தினி லுருண்டவரும்-நின்ற
நிலையிருந்து மூர்ச்சையாய் விழுந்தவரும்
அலைந்து அலைந்து விழுந்தும்-எழுந்தும்
அழுது கொண்டுபின்னாலே வந்தவரும்

மண்ணைத் தலையில்போட்டும்-குந்தியே
மண்டியிட்டு முட்டுப்போட்டு முட்டினவரும்
திண்ணையில் முட்டினவரும்-எங்கட்குத்
தீராது கட்டமென்றே யழுதவரும்

தெருவினில் அங்குமிங்கும்-நின்றுமே
தேம்பிக் கண்ணீராறாக அழுதவரும்
மருகினோர் ஒருகோடி-மற்றும்
மண்மேல் விழுந்தழுதோர் ஒருகோடி

இப்படி யானகாட்சி-அயோத்தியில்
என்றுங் கிடையாதிதற்கே முன்னும்பின்னும்

ஒப்பில்லா ஏழைக் குசும்பாள்-மந்திரை
உலகோர் யாருமிதைக்கேட் டழவேசெய்தாள்

குன்றிய கூனியல்லவா-அவளின்
குறுகுறுப் பாலுலகை அழவேசெய்தாள்
என்றுமே இன்னவர்களை-யாவரும்
எளிதினில் நம்பொணாத விதமேசெய்தாள்

லக்குமர் ராமர்சீதை-மூவரும்
யான்சொல்லும் வரிசையாய்ச் சென்றபோது
மிக்கவே மனம்உருகார்-அகிலத்தில்
மிலேச்சராய் இருப்பார்க ளில்லையானால்

மண்கல் மலையெனலாம்-அல்லது
மற்றப் பொருட்கெல்லாமோர் உணர்ச்சியுண்டால்
விண்மண்ணில் எங்கேனும்-இவ்வித
விபரீதச் சம்பவம் நிகழ்ந்ததுண்டோ

ஜலமுங் கூவத்தில்குன்றின-அன்றைக்கு
தக்ககறவைக் காம்பின்பால் ரத்தமாயின
பலமில்லாக் குழவிகளும்-அன்றைக்கு
பால் குடிக்காமலே யழுதிருந்தன

பால்குடி மகவுடைய-பெண்கட்கும்
பருகாம லிருந்தும்பால் திவலையில்லை
பால்குடி கன்றுகளும்-தாயாகும்
பசுவைத் தேடாமற்கண்ணீர் விட்டிருந்தன

கற்று வினங்களுமே-அன்றைக்கு
கன்றுகள் தேடாதுகண்ணீர் விட்டிருந்தன
மற்றுங் குடிபடையின்-கஷ்டத்தை
மாற்றங்களாற் சொல்வதற்கா யிரநாவேண்டும்

பட்சி ஜாதிகளும்-அன்றைக்கு
பகல்முழுவதும்இரை கொத்தவேயில்லை
இச்சித்தாள் கைகேயி-முறைதவறி
எழில்ராமர் சுதந்தரம் தன்மகனுக்கு

பத்தா யிரம்வருஷம்-ஆண்டுவந்த
பார்த்திபன் தசரதரும் மூர்ச்சையாயினர்
சித்தமாய் ராமர் லக்குமர்-சீதையுடன்
சிற்றன்னையின் சொற்படியே காட்டுக்கேகினர்

என்றயிந்த விஷயங்களே-அயோத்தியில்
எங்கும் பரவினதால் பெருங்கூக்குரல்
என்றைக்கும் எங்குங்கேளா-அழுங்குரல்
எழிலான அயோத்தியில் எழும்பிற்றம்மா

வசிஷ்டர் முதலானோர்-வெகுதூரம்
வழிவிட் டனுப்புதற்குச் சென்றபேரை
கசிந்துமே பாதம்பணிந்து-நீர்சற்றும்
கலங்காதீர் பதினான்கு வருஷம்சென்று

வருவேன்யான் என்றுராமரும்-வெகுதூரம்
வந்துவிட்டீர் திரும்புங்கள் தசரதற்கு
அருமையாய்ச் சிகிச்சை செய்ய-நீங்களும்
அரண்மனைக் கவசரம் ஏகுங்களென்று

ஆசிகள் பெற்றுக் குகனின்-நட்புக்கொண்டு
அடைந்தார் பரத்துவாசர் ஆசிரமம்
ஆசித்த கைகேயி-தசரதரின்
அருகினில் நின்றிடச் சிந்தைதெளிந்து

அய்யா ஸ்ரீராமாவா-என்றுமே
அன்பாகத் தசரதர் கூப்பிடவும்
அய்யோ பரிதாபம்-கைகேயி
அடவி சென்றுள்ராமன் என்றுசொல்லவும்

## தசரதர் மரணம்

அந்தகனைக் கூப்பிட்டு-அய்யாநீ
அரும்பாவி உயிரையே கையில்பெற்றுக்கொள்
இந்தஉலகு வேண்டாம்-என்று
எமனிடம் உயிரையே கொடுத்ததுபோல்

மறுநிமிஷத்தில் இறந்தார்-அயோத்தியில்
மகிழ்வாய்ப் பத்தாயிரம் வருஷம்ஆண்டவர்
சிறுவன் சத்துருக்கனோடு—கேகயம்
சீர்பரதன் மாமன்அகம் சென்றிருக்கிறார்

இந்த நிலைமையாக-அயோத்தியில்
எழில்தசரதர்முடி வானவுடனே
அந்தண்மனப் பரதருக்கு-வசிஷ்டரும்
அழைத்தார் தசரதரென் ஓலைவிடவும்

வந்தார் பரதர்உடனே-விஷயங்களை
வகையாகக் கேட்டுமுற்றுந் தெரிந்தபின்னர்

நிந்தித்தார் தன்தாயை-கௌசலைக்கு
நெடுநேரஞ் சமாதானஞ் சொல்லித்தேற்றினர்

வந்தனை யுடன்செய்தார்-தசாதற்கு
வகையுடன் உத்தர கிரியைகளை
தந்தைதன் மகன்சோகத்தால்-இறந்துவிடும்
தாழ்ச்சி தசாதர்க்கு வந்தவிபரம்

ஆவலாய்க் கேளம்மா-உனக்கு
அறைகுவேன் தசாதர் ஓர்சமயம்
காவளம் மிகுந்தவொரு-காட்டினில்
கனவேட்டை யாடித்தாக விடாயாகி

மேவினரோர் குளக்கரையில்-அவ்விடத்தில்
மிகுதியாய்ச் சம்படார்ந்து யிருந்ததினல்
தாவில்லா தோர்சத்தம்-குடகுடென்று
தன்செவிப் படவும்அதை யானையென்று

எவினர் அம்பொன்று-அய்யய்யோ
ஏழைப்பார்ப் பாளுெருவன் அலறிவந்து
கோவின் பாதத்தில்விழுந்து-குற்றமில்லை
கோட்பாடு ஏதொன்றும் இல்லாத செய்கை

மேவினே னிவ்விடம் பெற்றோர்-விருத்தாப்பியர்
மிக்கவிடாய் தீர்ப்பதற்காய் ஜலம்திரட்ட
ஆவியோ போகிறது-என்னுடைய
அருமைப் பெற்றோர்க்குத் தண்ணீர் கொடுத்திடென்றான்

தசாதர் தண்ணீரெடுத்து-அவ்விடம்செல்ல
தந்தைதாயர் எங்கள்மகன் எங்கேஎன்ன
கசந்த விஷயமேசொல்ல-அவர்களும்
கதறிஉயிர்விடும் போதுனக்கெம்கதி

என்றுமோர் சாபங்கொடுத்தார்-அதன்படியே
ஏற்பட்டது தசாத சக்ரவர்த்திக்கு
ஒன்றும் விடாமற் கேளம்மா-உனக்கு
உள்ளபடி சொல்லுகிறேன் ராமர்விஷயம்

காட்டுக்குப் போனரென்ற-விஷயத்தை
கடுகளவு சற்றுமே கவனியுங்கள்
காட்டினிற் கல்கறடுகள்-உருத்திடக்
காவலனின் கால்களென்ன பாடுபட்டிடும்

பூவினிற் காம்பொன்று-உருத்துமென்று
புகல்சீதை கால்கள்என்ன பாடுபட்டிடும்

தாவில்லா இலக்குமணர்-கால்களும்
தாங்கமுடி யாதநோவை அடைந்திருக்கும்

ஆனாலும் சொல்லுகிறேன்-இவர்களும்
அந்தமுள்ள நாடுவிட்டுக் காடுபோகிறோம்
கோனும் பட்டாபிஷேகம்-இழந்துமே
கூரியமுட் களடர்ந்த காடுபோகிறோம்

பந்துக் களையும்இழந்தோம்-நாமும்
பரிவாரத் தார்கள்பணி தன்னையிழந்தோம்
சிந்தனை யில்லாத போகம்-நாமும்
சீர்சிறப்புச் செல்வம்விட்டுக் காடுபோகிறோம்

என்றென்றும் நினையாமல்-ராமர்க்கு
இட்டவழி யேதமக்கும் இஷ்டமேயென்று
மன்னனுடன் சீதைலக்குமர்-காட்டுக்கு
மகிழ்வாய்த் தபோதனரை வணங்கிச்சென்றார்

## பரதர் துயரம்

இங்கிவ ரிவ்வாறிருக்க-அயோத்தியில்
எல்லாப் பிதிர்க்கடனுங் கழித்தவுடன்
பொங்குபுகழ் பரதன் செய்த-விஷயங்களை
பிரியமாய்ச் சொல்லுகிறேன் கவனமாய்க்கேள்

கேகயன் மகளைக் கண்டார்-பரதர்
கேடுசெய்தாய் எனக்குமென் தந்தைதனக்கும்
வேகமாய்க் காடேக-என் அண்ணனை
வினைசெய் தனுப்பினாய்நீ இந்தப்பழியை

எல்லாமே என் தலையில்-சேரும்படி
ஏற்காத பொல்லாச்செயல் எண்ணினாய்நீ
புல்லர்க ளேனும்உண்ணாப்-புல்லடகு
புவியாள்வோன் கானில்போய் உண்டிருக்க

சோடச உபசாரம்-நிறைந்த
சுகவமுதம் உண்பதற் கிசைவேனோ
காடல்லால் உறைவதற்குக்-கழிவான
கடையர்கள் சேரிகூடக் காணக்கிடையா

அரக்கர்கள் அதிர்விலங்கு-நடமாடும்
அருங்கானகத்திலவர் வசிப்பதெங்ஙன்
அரசனைக் கொன்றதன்றி-அண்ணனையும்
அழியும் படியாய்ச்செய்த சூழ்ச்சியன்றோ

இப்படிச் செய்தவளை-யானும்
என் இனிய தாயென்று இன்னும்நினைத்தால்
ஒப்பில்லா அவள்பழியில்-என்பழி
ஓராயிர மடங்கு அதிகமாகும்

குடிபடை யிங்குதங்கார்-அரண்மனையில்
கோளரவா முன்னையன்றி யாரிருப்பார்
அடியோடே நகர்நாசம்-ஆம்போது
அரவுகள் தான்வந்திங்கே தங்கவேண்டும்

உண்ணாத விடம் யாரையும்-ஒருக்காலும்
உயிர்விட் டழியும்படி செய்யாது என்னும்
எண்ணத்தோ டின்னுமுயிர்-கொண்டேனல்லால்
எள்ளளவும் இப்புவியில் ஆசையேயில்லை

உன்றன் பாபக்கும்பியில்-யானும்
உருவா யமைந்தபெரும் பாதகந்தன்னை
மன்னும் பெருந்தவத்தால்-தொலைப்பதற்கே
மனதினில் ஓர்மைகொண்டே உயிர்கொண்டேன்

உன்னை இன்னே கொன்றிடுவேன்-ஆனாலும்
உத்தமராமராம் அண்ணன் என்னைக்கோபிப்பார்
என்னும்இந்த எண்ணம்கொண்டே-இப்போது
இன்னுயிரோ டுன்றனையான் மன்னிடச் செய்தேன்

என்று பாதர் சொல்லி-உடனே
எழுந்தார் கௌசலை யரண்மனைக்கு
கன்றைப் போற்கதறினார்-கௌசலை
காலில் விழுந்து தரைமேல் புரண்டு (கன்றை)

அண்ணன் போகும்பொழுது-எல்லீரும்
அவரைத்தடுக்காம லிருந்தீரன்றோ
மண்ணிற் புரண்டழுது-யானும்
மருகிட எல்லீர்க்குந் திருவுளமோ

சூரிய குலத்துதித்த-அரசரெல்லாம்
சுடரினு மிகவோங்கப் படைத்தபுகழ்
காரி கைகேயியின் மகன்-பரதனால் (காரி-நஞ்சு)
கழிந்திட எல்லீர்க்குந் திருவுளமே

அறத்தையே கெடுத்தவனும்-அயலானின்
அரும்பன்னி யின்கற்பினை யழித்தவனும்
மறங்கொண் டயலானை-வதைத்தவனும்
மாதவரை வருந்தச் செய்தவனும்

சேருங்கதியிற் சேருவே-ஞகவும்
ஸ்ரீராமர் *பேருக்கோ றூற்றிற்
சாருவேன் பெருநெருப்பாம்-‡நிரயமதை
சத்தியம் ராகவர் பதம் பற்றவென்சித்தம்

குரவரைக் கொன்றவனும்-கொடுமையாய்க்
குலத்துதித்தபிள்ளையைக் கொன்றவனும்
இரவலர்யாசித்ததைக் கவர்ந்தவனும்
எளியாரகத்தில்தீ யூட்டியவனும் (சேருங்)

தன்தாய் பசித்திருக்க-உண்டவனும்
தன்தஞ்ச மானவனை விண்டவனும்
மன்பெருமை தானடைய-மற்றவரின்
மகிமை குறையும்படிப் பேசுபவனும் (சேருங்)

மூத்தவன் சுதந்தரத்தைக்-கவர்ந்துகொண்டு
முனைந்தவ னேடுபோருக் கெழுந்தவனும்
ஆத்தாள் அப்பனை இழந்த-சிறுவயதில்
ஆதரித்த மாமன்குடி கெடுத்தவனும் (சேருங்)

குடும்பத்தி லுள்ளவர்களை-ஒற்றுமையாய்க்
கூடி யிருக்காவண்ணம் யோஜனைசெய்து
கெடும்பே செய்துவந்த-காதகத்தால்
கீழான நரகம்போ யடைபவனும் (சேருங்)

கன்றுக்குப் பால்விடாமல்-கறப்பவனும்
கடுமை யானசொற்களே பேசுபவனும்
நன்றி மறந்தவனும்-மற்றவர்மேல்
நலமில்லாக் காரியத்தைச் சொல்லுபவனும் (சேருங்)

பொய்யை நிசம்போலச்-சொல்பவனும்
பிறர்பசி யோடுபார்க்க உண்ணுபவனும்
அய்யமிட் டுண்ணாத-பாதகரை
அரும் நட்பினராகக் கொள்ளுபவனும் (சேருங்)

பிச்சை யெடுப்பவன்மேல்-கோபித்து
பெறுகின்ற ஓட்டையே உடைப்பவனும்
சிச்சைகள் செய்தகுருவின்-பத்தினியை
சிற்றின்ப போகத்துக்கு நயந்தவனும் (சேருங்)

குருவைப் பழித்தவனும்-குவலயத்தார்
கும்பிடுந் தெய்வத்தைப் பழித்தவனும்

---

* கீர்த்திக்கு இடையூறுசெய்தால்—‡நரகத்தை

நிருபனைப் போரில்விட்டு-தன்னுயிர்
நீங்கிடு மெனப்பயந்து ஓடியவனும் (சேருங்)

தன்னையே நம்பிவந்த-மாதர்கட்கு
தகுதியில்லாக் காதகம் செய்தவனும்
அன்னியன் கெடும்வகையாய்-அரசரின்
அவைக்கேகிப் பொய்ச்சாக்ஷியுரைப்பவனும் (சேருங்)

மண்ணினில் வழக்கோரம்-கைக்கூலிக்கு
மனதாரப் பிடிவாதம் பேசுபவனும்
பெண்ணுக்குப் பிழைகள்சொல்லி-இவ்வுலகில்
பேரைக் கெடுக்கும்பெரும் பாதகனும் (சேருங்)

அந்தகனை வழிதப்பி-அலையச்செய்து
அவனைப் பார்த்து ஆனந்தங் கொள்ளுபவனும்
மந்திகள் தன்னைக்கண்டு-கும்பிட்டும்
மாமிசத் தின் நசையால் கொல்லுபவனும் (சேருங்)

வழியினில் குழிதோண்டி-அந்தவழி
வருபவர் விழவென்று வைத்திடுவோனும்
பழியென் றஞ்சாமல்-வழிமறித்து
பாட்டைக்கொள்ளை செய்துகொலை செய்திடுவோனும் (சே)

சிசுக்களைக் கொல்லுபவனும்-அவர்கட்கு
தீமை யுண்டாம்பொருளை யூட்டுபவனும்
பசுக்களை வதைப்போனும்-கன்றுகளைப்
பாற்பசுக்கள் சோரவண்ணந் தடுப்போனும் (சேருங்)

பயிர்களை அழிப்போனும்-பக்கத்துப்
பழனத்தி னத்தழித்து உழுவோனும்
உயிர்களை வதைப்போனும்-உலகத்தில்
ஒன்றுமில்லா யேழையைப்பார்த் திகழ்வோனும் (சேருங்)

குடும்பத்தில் மூத்தவர்களாய்-இருந்துகொண்டு
கும்பிட்டுச் சொற்பேச்சுக்கேட்கும் இளையோரின்
கடும்பாட்டால் வந்தபொருளைக்—கடுகடுத்து
கனவழக் கிட்டலைத்துக் கவர்ந்தவரும் (சேருங்)

மகளை ஒருவிதமும்-மகன்மனையாம்
மருமகளை யொரு விதமாயும்
அகங்கொண்டு அனியாயமாய்-அன்னத்திலும்
அருங்கொடுமை செய்யும் பெரும்பாவி (சேருங்)

மகன்மரு மகள்வாழ்க்கை-பொருமலே
மற்றவர்க ளோடுகூடி நகையாடும்
அகமுடை யானுந்தானும்-உறவாடியே
அந்தமகன் வந்தவிதம் மறந்தபாவி (சேருங்)

குடும்பத்தைப் பிரியச்செய்து-அங்குமிங்கும்
குண்டுணிகள் எப்போதுஞ் சொல்லிக்கொண்டு
கெடுதல்கள் செய்வதையே-தொழிலாக
கீழ்மேல்ப் புரட்டிப்பேசும் பொய்வாயர் (சேருங்)

பக்கத்தி லிருப்பவர்கள்-வாழ்ந்திடப்
பார்த்திடமனம்பொருத படுபாவியர்
அக்கம்பக்கம் விளையாடும்-பிள்ளைகள்மேல்
அதிகப்பொருமை கொள்ளும்மலடியர்கள் (சேருங்)

பரதன்நான் பசிஆறேன்-என்றன்
பண்பானதமயன் பட்டினியிருக்க (பசி)
அரண்மனை ராஜபோஜனம்-எனக்கு
ஆகாதாகாது நானுங் காடுபோகிறேன்

பாபியாய் முளைத்தனளே-என்தாயென்னை
பாபியாகச் செய்துமேதான் ராணியாயினள்
கோபிப்ப தாரையேநான்-எங்கள்
குலத்துக் கனர்த்தம்வந்த தென்தாயால்

தாயென நான்நினையேன்-இனிமேல்
தாங்கொணு விஷமுடைய பாம்பாய்நினைப்பேன்
சேயென நினைத்தாள்போலும்-என்னைமட்டும்
சிராமனைச் சேயென நினைத்தாளில்லை

காட்டினிற் பசியாற-லக்குமணன்
கடுங்கஷ்டப் பட்டுக்காய்கள் பறிக்கவேண்டும்
வீட்டினி லிருந்துகொண்டு-யான்மட்டும்
வேண்டிய தனுபவிப்ப தர்மமன்றே

காட்டுக்கு நான்போவேன்-அண்ணனுக்கே
கனத்த பட்டாபிஷேகம் செய்துவைப்பேன்
நாட்டுக்கு வரமாட்டேன்-என்பாராகில்
நாட்டைத் திரும்பநானும் பார்ப்பதில்லை

## பரதர் ராமரைத் திரும்பிவரும்படி கேட்கச்செல்லல்

என்றுமே புலம்பிக்கொண்டு-பரதரும்
இஷ்டகுரு வசிஷ்டரைத் தொழுதுகூவி

இன்னுங்குடி படையோடு-ராமருக்கு
எழிலான கொற்றக்குடை விருதுடனே

கங்கைக் கரையையடைந்து-நின்றுகொண்டு
கடக்க நாவாய்கள்சித்தஞ் செய்யத்தூதரை
அங்குள்ள குகனிடத்தில்-அனுப்பிவைக்க
அவன்கங்கைக் குள்ளிறங்கக் கூடாதெனவும்

கங்கையுஞ் சுமப்பனளோ-காதகர்க்கு
கனநாவாய் களுமேறுங்கலங்களாமோ
இங்குவந்தா லுங்களையெல்லாம்-இச்சணமே
என்கைவில்லாற் கொன்றிடுவேன் என்றுசொல்லவும்

எண்ணில்லா ஜனங்கள்படை-யில்வசிஷ்டர்
இளையதம்பி தான்தாய்மார் தனித்துவர
மண்புரண்ட மேனியையும்-பரதனின்
மாளாத் துயர்முகமும் மாவுரியும்

தம்பியின் தவவேடமும்-பரதனின்
தனிராமர் திசைநோக்கித் தொழுகுதலும்
அம்புநாவாய்க் குகன்கண்டு-பரதனிடம்
அண்ணனைக் காட்டில்செலுத்தக் காரணமென்ன

என்றுமே கேட்டிடவும்-அப்போது
எரிச்சலாய்க் கைகேயியைச் சுட்டியேகாட்டி
என்அன்னை இவள்செய்தாள்-இவளும்
எனக்கிதஞ் செய்கிறுப்போ லென்னைக்கெடுத்தாள்

என்று அழுதுபுலம்ப-குகனும்
எழிற்கௌ சலைசுமித்ரை யாரெனக்கேட்டு
அன்னையர் காலில்விழுந்து-வணங்கியபின்
அழகிய நாவாயேற்றி யக்கரைசேர்த்து

இன்மொழியால் மன்னன்ராமர்-இருக்குமிடம்
எழிலான விரலொன்றுற் குறிப்பிட்டான்
இன்னவை யிங்குநடக்க-இலக்குமணர்
எழிற் சித்ரகூடமலை மேலேநின்று

பொங்குகடல் திரைபோலே-தெரிகின்ற
போர்த்தேர்க் கரிபரிகா லாட்களான
அங்குள்ள கூட்டமதைக்-கண்ணுற்று
அண்ணர்க் குரைத்தவித முனக்குச்சொல்வேன்

தாயுமைக் காட்டுக்கேகென்றுள்-அப்போது
தடிந்திட வெழுந்தேனைத் தாமேதடுத்தீர்

சேயுமின்னே போருக்கெழுந்தான்-இப்போதேனும்
செருச்செய்ய யனுமதி தந்திடுமையா

என்று லக்குமர் சொல்ல-ராமரும்
ஏதுதம்பி யுன்றன்புத்தி யிப்படியாமா
மன்னுஞ் சூரியகுலத்துத்-தோன்றல்களில்
மனுமுறை தப்பியவ ரெவருமுண்டோ

இன்னும்பார் பரதன்வந்து-என்னை
எழிற்பட்டம் வகியென்று அழப்போகின்றான்
அன்னையுன் புத்தியளவை-லக்குமா
அறிந்துகொள் ளௌராமர் சொல்லியதுபோல்

சொன்னசொற்காய் லக்குமணர் துக்கிக்க
தொழுது கொண்டும் பரதர் அழுதுகொண்டும்
கன்றிய மனதுடனே-ராமரின்
கனமுள்ள கால்களிற் போய்வீழ்ந்து

அய்யோத்தி வரவேண்டும்-அண்ணாவே
அரசாட்சிதனைக்கையிற்கொளல்வேண்டும்
அய்யனீர் வாராவிட்டால்-யானும்
அய்யோத்தியில் திரும்ப மிதிப்பதில்லை

சக்ரவர்த் திதகப்பனார்-சாயூச்வ
சாம்ராஜ்ய பதவியை யடைந்துவிட்டார்
மிக்கநம் ராஜ்ஜியத்துக்கு-அரசில்லாமல்
மேன்மைகெட்டுப் போகாவண்ணம் காத்திடும்அண்ணா

என்றசொற்கள் காதிற்படவும்-மூவரும்
இடியுண்ட அரவுபோற் சோர்ந்துவிழுந்து
மண்மேற் புரண்டிடுவதைக்-கண்ணுற்ற
மற்றவரும் பொறுக்காமற் கோவென்றலறி

சற்றுக்கழிந்த பின்மற்றோர்-அமர்ந்து
தாங்கித் தேற்றமூவர்க்குஞ் சோகந்தெளிய
பற்றினார் ராமர்கால்களை-பரதரும்
பரிபவத் தோடுபின்னுஞ் சொல்லலுற்றார்

இப்படியாகப் பரதர்-ராமரின்
இருசேவடிகளையும் இறைஞ்சிநிற்க
எப்படியும் அன்னைசொல்லை-பரதா
எம்தந்தை சொல்லாய்ச்சிர மேற்றுக்கொண்டேன்

செப்புவதா லாம்பயனில்லை-பரதா
சீர்பதி னான்குவருஷம் கழிந்தபின்னால்

ஒப்புக்கொள்வேன் அரசாங்கம்-அதுவரையில்
ஓர்மையாக நீயேயர சாளவேண்டும்

என்றதோர் உறுதிசொன்னார்-ராமரும்
எழில் பாதனப்போது யேங்கிச்சொல்வார்
மன்னவா உன்பாதம்-எனக்கு
மகிழ்ச்சி பெருமிதமாய்த் தருவதினால்

பாதுகை கொடுத்தருள்வாய்-அதையே
பார்த்திப னேறுஞ்சிம்மா சனத்தில்வைப்பேன்
சாதுபோல் நந்திக்கிராமம்-தன்னிலே
தங்கியிருந் தரசாங்க காரியம்பார்ப்பேன்

அய்யோத்தி யரண்மனையில்-யானும்
அமர மனம்எனக்குப் பொருந்தவில்லை
அய்யன்ஸ்ரீ ராமரில்லா-அரண்மனைதான்
அடர்வனம் போலெனக்குத தோற்றுதய்யோ

தாயாம் கைகேயி யிருக்கை-எனக்குச்
சர்ப்பம் நிறைந்தகாடாய்த் தோற்றுதய்யோ
தாயாம் கௌசலைமுகம்-பார்த்திடச்
சஞ்சலம் பொறுத்திடவுந் தாளவேயில்லை

இருதலைக் கொள்ளி யெறும்பாய்-என் அண்ணாநான்
எங்கிநிற்குங் காலம்பார்க்கத் திருவுளமோ
அருமையாய்க் காட்டிலிருப்பேன்-என் அண்ணாநும்
அரும்பாதத் துணைக்கனம் கொள்வேன்சதாவாய்

என்றுமே பரதர்சொல்ல-ராமரும்
என்றும்வாழ்க என்றன்தம்பி பரதோத்தமா
மன்ன னில்லாத ராஜ்ஜியம்-பரதா
மாங்கில்ய மில்லாத பூஷணமாகும்

பாதுகை கைக்கொள்வாய்-பரதா
பக்கமிருந் தாயினும் அரசாள்வாய்
ஏதுவுங் கோபமில்லை-பரதா
இப்படிநாம் வருந்துதல் ஈசன்செயலே

ஆர்தானென் செய்யமுடியும்-அன்று
அமைத்த படியல்லால்வே றொன்றும்நடவா
கார்கெடும் வண்மைக்கையால்-பரதா
காத்திடவே வேண்டும்நம் பிரஜைகளை

என்றுபரதரை வாழ்த்தி-ராமரும்
எழிலாய்த்தன் பக்கத்தில்உட் காரவைத்து

சின்னவ னானதம்பியைச்-சிரஞ்சீவி
தேகந் தடவியேயுட் காரவைத்தார்

ஞானமாந் திருஷ்டியினால்-வசிஷ்டரும்
நன்மை பயக்கஇந்தச் சம்பவமென்று
மோனஞ் சாதித்தே யிருந்தார்-அவரை
முழுப்பக்த மாய்வணங்கி யவர்சொல்மேல்

உத்தர கிரியைகளை-ராமலக்குமர்
உத்தமத் துணைவர்களுங் கூடயிருக்க
சித்தத்தில் பத்தியுடனே-வசிஷ்டர்முன்னர்
செய்துமுடித் தெல்லாரையு மனுப்பிவைத்தார்

ஆனாலும் பரத ரொன்று-உறுதியாய்
அந்தமுள ராமருக்குச் சொன்னதுமுண்டு
மான பரணன் நீரே-சொன்னதுபோல்
மறுத்துவரே லன்றேதீக் குளிப்பேனென்றார்

போன பரத ரன்றே-எண்ணம்போல்
புகழ்பா துகையைச்சிம்மா சனமேற்றினார்
தானந்த நந்திக் கிராமந்-தன்னிலே
சந்யாசி போலிருந்தே யரசாண்டார்

இன்னவை நடந்தனவே-மிகவும்
எழிற்சித்ர கூடமெனு மிடந்தனிலே
தன்னந் தனியாக-இலக்குமணர்
தண்காய் கனிபறிக்கப் போனசமயம்

மன்னன் ஸ்ரீராமர்-சீதையின்
மடியினிற் றலைவைத்துப் படுத்திருக்க
கன்னல் கனியென்று-சீதையின்
கனஸ்தனங் காகாசுரன் கொத்தவரவும்

அருகாம் புல்லொன்றை-ஸ்ரீராமர்
அதன்மேற் பிடுங்கியே போடவுமது
உருவமை கணையாக-அவனை
உலகு பதினான்கும் விரட்டியதால்

கதிவே றொருவரின்றி-காகாசுரன்
கருணைசெய் யய்யாவென்று ராமர்கால்விழ
மதியில் லாதபயலே-உன்னை
மன்னித்தேன் என்றார்ஒற்றைக் கண்ணைப்பறித்தே

சித்திர கூடம்நீங்கி-மூவரும்
சென்றனர் தண்டகா ரணியத்துக்கு

மத்தகரி போன்றவரக்கன்-விராதனென்பான்
மாது ஜானகியை வந்துபற்றவும்
தொலைத்தனர் அந்தவம்பனை-அவனும்
தொல்லுலகில் அரக்கனாய் வந்தஜென்மமும்
தொலைந்தது இன்றோடு-என்று
துதித்துப் போற்றியபின்மே லுலகஞ்சென்றான்

அப்பால் சென்றிடவும்-இவரெதிரில்
அருந்தவ ஸரபங்கர் வந்துசேர்ந்து
அப்பன் ஸ்ரீராமரருளால்-பிறப்புநீங்கி
அரும்முத்தி தன்னையே அடைந்தனரே

அத்திரி ஸுத்தீக்ஷணர்-முதலானோர்
ஆனமகான்களின் ஆஸ்ரமத்தில்
முற்றும் அறிந்தவரால்-இவர்களை
முழுமனப் பக்தியுடன் விரும்பியதால்

ஒவ்வோர் நாள்தங்கி-அவர்களின்
உத்தம வாஸிகள்பெற்று நீங்கியபின்
பவ்வத்தைக் கையால்உண்ட-அகஸ்தியரின்
பண்பாந் திருவடிகள் தெரிசித்தனர்

அம்புராத் தூணியொன்று-வில்லொன்று
அளித்ததன் மந்திரமுஞ் சொல்லிவைத்தார்
வெம்புய வலிஜடாயும்-இவர்களும்
வெகுநட்புக் கொண்டுபஞ்ச வடியமர்ந்தார்—தெந்

## சூர்ப்பனகை பங்கம்

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

பஞ்சவடி தன்னிலொரு பர்ணசாலை பக்குவமா
யமைத்தங்கே யிருந்தபோது
நஞ்சனைய் பாதகனா மிலங்கேச னற்றங்கை
நமன்போலுஞ் சூர்ப்பனகை
பஞ்சபுஷ்ப பாணன்வதை பொறுக்காமற்
றுசாதி பரிவுபெற மிகவுநச்சிக்
கெஞ்சியுநெஞ் சொடுமூக்கை யரிந்தனுப்பக்
கேடிலங்கைக் குற்றகதை கிளத்தலுற்றாம்

### நொண்டிச்சிந்து

பாதகன் டத்தின்தெற்கே-தீவொன்று
பார்புகழ் இலங்கையென் றிருக்கிறது

அரச னதற்கிராவணன்-என்றொரு
அரக்க னவனோர்பிர பலதுஷ்டன்

கும்பகர் ணன்விபீஷணன்-என்பவர்
கூடப் பிறந்தஇரு சகோதரர்கள்
வெம்பழிச் சூர்ப்பனகை-என்றொரு
விதவைச் சகோதரியும் அவர்க்குண்டு

இந்திர ஜித்தென்றும்-அதிகாயன்
என்றும் பலபுத்திர ரவர்க்குண்டு
இந்தச்சூர்ப் பனகையின்-புருஷனை
இராவணன் திக்குவிஜ யத்தினில் கொன்றான்

தங்கைசூர்ப் பனகையின்-துக்கத்தை
தாங்க முடியாமற் பஞ்சவடிக்கு
அங்கிருக்கும் ஜனஸ்தானம்-என்றதோர்
அரிய விடமவளுக் கேற்படுத்தி

கான்தூ ஷணனென்ற-அரக்கர்களைக்
காவலரா யவளுக் கேற்படுத்தினான்
தாந்தர மாகமிருகம்-மனிதரைத்
தானே கொன்றுதின்று திரிகுவதும்

பெரியோரின் ஆசிரமம்-யாகங்கள்
பெருமித மாயவள் அழிப்பதுவும்
நரியது நாயில்லா-ஊர்களிலே
நாசம்செய் வதுபோற் பாழாக்குவதும்

இப்படி யாகத்திரியும்-சூர்ப்பனகை
எழிலான மூவரையும் ஒருநாளில்
செப்பமாம் பர்ணசாலை-முன்பாகச்
சீராய்விளை யாடக்கண் டதிசயித்தாள்

அரக்கர் செயலைமறந்தாள்-அவளும்
அதிகாதல் கொண்டுஇமை தட்டாமல்நின்றாள்
நார்கள் இருவர்களில்-ஒருவரை
நற்கலியா ணஞ்செய்ய வென்றுநினைத்தாள்

ஆனாலும் ராமர்லக்குமர்-இருவரும்
அணுவும் விலகாஎக பன்னிவிரதர்
ஆனாள் அவள்மாயத்தால்-கட்டழகு
அமைந்தஓர் பெண்போல்அவர் கண்முன்நின்றாள்

எண்ணத்தை வெளியிட்டாள்-அவர்கள்
ஏனென் றேதேனுஞ்சட்டை செய்யவேயில்லை

எண்ணினள் சீதைகவற-மற்றைநாள்
இங்குமங்கும் பார்த்தவளைத் தூக்கமுயன்றாள்
கண்டார் இலக்குமணர்-அவள்கபட்டை
காதும்மூக் கும்ஸ்தனமும் அறுத்துவிட்டார்
கொண்டாள் அவமானம்-கூக்குரல்போட்டு
கொடுமையாய் இவைஇவை புலம்பலுற்றாள்

நிலைபெற்று நீணிலத்தில்-நீயிருக்க
நிலையற்ற தாபதர்கள் சிலையெடுக்க
தலையெடுத் தெனைப்பாராயோ-ராவணாநீ
தனிமலை தூக்கியவா காணாயோ

புலியது பக்கமிருக்க-குட்டிகள்
பிலைழபடா தெனஉலகோர் இசைப்பார்
சலியாத மூவர்வானவர்-தானவர்க்கும்
தாழ்வில்லா வலியாய்என் வலிகாணாய்

*சந்திர காஸம்கொண்டாய்-ராவணாநீ
தண்புனல்கனல்கால்கூற் றெடுவிண்கோள்
வந்துனைப் பணிந்திருக்க-இந்த
வலியில்லா மானிடர்க்கும் ஆற்றாயோ

உன்செருப் படிப்பொடி யொவ்வா-மானுடரை
ஒருபொருட் டாகநீ மதித்துளாயோ
வன்மருப் பொசியக்கஜத்தை-முறுக்கிய
வன்மார்பா யெனைவந்து காணாயோ

சந்திரன்போல் தனிக்குடைக்கீழ்-நீயிருக்கும்
சபையில்வந் தெப்படிநான் முகங்காட்டுவேன்
இந்திரன் அயன்இமையோர்-ஏவல்செய்தும்
எனைக்கண் டிகழ்வாரய்யோ என்னசெய்குவேன்

உரம்நெரிந்து கீழேவிழுந்த-என்னையே
உதைத்து உருட்டிஎன்றன் மூக்கைஅரிந்த
நரன்பார்த்துச் சிரித்திடவும்-நான்கிடக்கும்
நாணமில்லாக் கோலம்பார்க்க வாராயோ அண்ணா

நசையால் நான் மூக்கிழந்து-இவ்விடமிங்ஙன்
நாணமில்லா திருள்வது உன்புகழுக்கு
வசையுள்ள தாகாதோ-என் அண்ணா
வாழ்வருள் அரன்மலையைத் தூக்கியதோளாய்

கானமதி னிடையிருவர்-என்றனின்
காதுமூக் கரிந்திவ்விடம் மடிவேனோ

* சந்திரகாஸம்—சிவன்வாள்

தானவரைக் கருவறுத்துச்-சதமகனைத்
தளையிட்ட என்மருகா இந்திரஜித்தா

கல்லுடைக்கும் தடக்கைகொள்-காதூஷணு
கானிலவ மானமுறும் என்னிலைகாணு
எல்லாருங் கும்பகர்ணன்போல்-இவ்வுலகில்
என்சத்தங் கேளா துறங்கிவிட்டீரோ

என்றுஇப் படிப்புலம்ப-ராமரும்
இதமாய் நதியில்கடன் முடித்துவா
உன்மேனிக் கன்புகொண்ட—என்பிழைக்காய்
உன்தம்பி சிட்சைகாணென் றலறிவீழ்ந்தாள்

மூக்குக்கா துகள்ஸ்தனங்கள்-லக்குமணன்
முனைந்து அருத்தான்இவள் பிழைத்தாள்பேரலும்
போக்கில்லா திங்குவந்த-நீயாரென
புலம்பியே சொல்லலுற்ருள் சூர்ப்பன்னகை

அறியாயோ நீயென்னை-யானும்
அணிநகர் லங்கைராஜன் தங்கையெனவும்
நெறியாய்யாம் தவமியற்றும்-இவ்விடம்
நெறியில்லாய் நீவந்த காரணம்என்னை

என்று இராமர்கேட்க-சூர்ப்பன்னகை
என்செய்வேன் என்னைமதன் வதைக்கிறதால்
நென்னலும்இங்குவந்துள்ளேன்-நின்மேனி (நென்னல்-நேற்று)
நேராய்க்கண் ணுறவந்தேன் இன்றும்என்ன

செங்கயல்போல் கண்களுடன்-நென்னலில்
சென்றவள்நீ தானோவென்ன மாதெவர்க்கும்
கொங்கைகளும் குழைக்காதும்-கொடிமூக்கும் (குழை-நகை)
குறைத்தழித் தாலழகு குன்ருதோஎன்ருள்

காதும் மூக்கும் ஸ்தனங்களும்-குறைத்திட
களபிழை யிவள்என்ன செய்தனள்என்ன
ஆதர வோடன்னையை-இவள்கவர்ந்தாள்
அருந்தவோ சோரத்திற்கோ யான்அறிகிலேன்

என்றுலக் குமர்சொல்லுமுன்-இகலரக்கி
எவளும் மாற்ருளைக்கண் டால்விடுவாளோ
உன்னையான் புணர்வதற்காய்-அலையும்போது
உருதடை யாம்அவளை விட்டுவைப்பனோ (உரு-பெரிய)

என்றுஅரக்கி சொல்லவும்-ஸ்ரீராமர்
இவ்வனத்தை விட்டுயிர் தப்பஓடுவாய்

என்று கனன்றுசொல்லவும்-சூர்ப்பனகை
இதமாக இன்னுமிவை சொல்லலுற்றாள்

இப்படி யிகழாதீர் என்னை-யானும்
இந்தக்கானில் உம்மைக்காக்க வல்லமையுள்ளேன்
ஒப்பில்லா ராவணன் தங்கை-சேரென்று
உம்தம்பி லக்குமணர்க் காகிலுஞ்சொல்வீர்

போரினிற் புறங்காப்பேன்-யானும்
பெயர்த் துங்களைவானம் சுமந்துசெல்வேன்
ஆர்என்னில் அழகுஉள்ளார்-அந்த
அமைந்தநும் மனைவியால் என்பயன்உண்டு

போக்கினீர் என்மூக்கை-ஆனாலும்
பொற்பமை வேன்ஒரு கணந்தனிலே
பாக்கியம் உளேல்பெண்மைக்குப்-பழுதுண்டோ
பார்க்கில் மூக்குமாதர்க்கு மிகைதானே

சிவன்அயன் திருமால்என-நின்றவனே
தினந்தினம் எனைக்காயும் பூங்கணையோன்
அவனும்உன் உடன்பிறப்போ-இவனைப்போல்
அருள்எதும் இன்றியெனை அழல்கின்றானே

நுன்தம்பி அன்பிலனோ-மூக்கிருந்தால்
நுணங்காமல் தன்னைவிட்டு நீங்கிடுவாள்என்
அன்னியரும் விரும்பாமல்—அமர்ந்திருக்க
அன்புமிக்கக் கொண்டல்லவோ இப்படிச்செய்தான்

ஆனாலும் இகல்அரக்கர்-இதைஅறிந்தால்
அழிக்கா திருக்கார்நும்மை யென்றறிந்திடும்
வீணாய்நீர் அழிந்திடாமல்-உம்தம்பியை
விரும்பி யென்னுடன்வாழச் சேர்த்திடுமென்ன

நின்னன்னை தன்னைநல்கிய-தாடகையை
நிமிஷத்தில் மாய்த்தசரம் கையினில்வைத்தும்
மன்னினேன் தவத்தினையே-மாதலர்வேண்ட
மல்லரக்கர் தொலைத்திட்டே நகர்செல்லுவேன்

அவுணர் இயக்கர்திறங்கள்-என்முன்னே
அமைந்தபோதி னில்நீயே அறிந்திடுவாய்
இவுளிபோல் இதழ்அதக்கும்-அரக்கியே
ஏகி நீ அவர்கொணர்தி என்றுசொல்லவும்

பாம்புக்கே பாம்பின்கால்-தடந்தெரியும்
பண்புபோ லரக்கர்போரில் மாயஞ்சொல்லுவேன்

காம்புநிகர் தோளாளே-கைவசம்
காத்திடினும் யான்மிகை யாகேனே
லக்ஷுமர்க்கு யானுவேன்-அவரை
ராவணனின் தங்கையைநீ மணப்பாய்என்னும்
லக்கணமின் ருல்மாட்டேன்-என்றுசொன்னுல்
லக்கண முளாளோடென்னுள் வாழ்ந்தாய்நீஎன்னும்
என்றுசூர்ப்பன் னகைசொல்ல-இலக்குமர்
இவளைத் தொலைத்திடேல் நமைவிடாள்என்ன
மன்னனும் சரிஎன்ன-மல்லரக்கி
மாய்ந்திடுவே னினிநின்று லென்றேகி
காதூ ஷணர்களிடம்-தன்நிலைமை
காட்டித்தன் னண்ணனுக்காய்ச் சீதையைத்தூக்க
உரத்துடன் பிடித்ததாயும்-நார்கள்வந்து
உடனே வெட்டினதாக அழுததின்மேல்
கானும் தூஷணனும்-கானில்உள்ள
காலாம் அரக்கர்களை ஒன்ருகச் சேர்த்து
பரபரப் பாய்க்கடலின்-முழக்கம்போல
பர்ணசாலை யின்முன்னுல் கோஷித்துக்கொண்டு
மண்டின தரக்கர்சேனை-அப்போது
மன்னன்ராமர் தன்னிடம் வருணன்முன்னுள்
கொண்டவில்லைத் தாச்சொல்லி-அதைக்கொண்டு
கொடிய அரக்கர்சேனை தொலையச்செய்தார்—தெங்

## சூர்ப்பன்னகை ராவணனிடஞ் சென்றுரைத்தல்

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

சண்டாளி சூர்ப்பன்னகை தன்றமய னிலங்கேசன் தவிசின்முன்
தரைமீதி லுருண்டேவீழ்ந்து
கண்டநா மடமயிலா டனக்கேற்ற மனைவியெனத் தான்கவருஞ்
சமயமதிற் றன்மேற்பாய்ந்து
கொண்டல்நிற மானிடர்க ளிருவருந்தம் வாள்கொண்டு
குறைத்திட்ட தன்மூக்குந் தனிமுங்காட்டிக்
கண்டுகொள்ளென் றழுதரற்றக் கடுங்கோபங் காமத்தீ
கரையின்றிப் புரண்டுவந்த கதையேசொல்வாம்

வனத்தில் திரியும்போது-யானும்
வளமுள்ள பஞ்சவடி தீரந்தன்னில்
வனப்புடன் ஓர்நங்கை-உன்றன்
வனப்புக்கேற் றவளெனக் குறிக்கொண்டு

அந்தரமாய்த் தூக்கமுயன்றேன்-அப்போது
அங்குள்ள நரர்இருவர் இருபக்கமும்
வந்துஎன்னை வாளால்வெட்டினர்-அதினல்
வனப்பாங் காதுமூக்கறுந் தோடிவந்துள்ளேன்

என்றுகாலில் வீழ்ந்துபுலம்ப-ராவணன்
இந்தப்பழி தீர்க்கவங் கரக்கரில்லையோ
என்னவும் சூர்ப்பன்னகை-அழுதுகொண்டே
இகலவு ணர்இறந்த விபரஞ்சொன்னுள்

காதூ ஷணர்கள்வந்தார்-சேனையோடும்
கடிந்தார் நரர்அரக்கர் சேரவேஒன்றாய்
அரன்மலை தூக்கிய அண்ணு-என்ன அவன்
அந்தச்சீதை கொள்ளநரர் கொல்லநினைத்தான்

ராவணன் வருகை

தீராதகோபமுங் கொண்டான்-ராவணன்
தெளியாத காமநோயு மத்துடன்கொண்டான்
*வாராநின்றான் ஆகாயமாய்க்-கடல்தாண்டி
வளமுள்ள பஞ்சவடி தீரத்தைநோக்கி

அருந்தேரின் மேலேநின்று-மாமனை
அந்தவன மெல்லாஞ்சுற்றிப் பார்க்கின்றான்
மருமக னைராவணன்-வழியெல்லாம்
மாமனுன மாரீசனைத் தேடிப்பார்க்கின்றான்

கண்டுகொண்டான் வழிதனிலே-தன்னுடைய
கருத்தெல்லாம் வெளியிட்டான் மாமனுக்கு
அண்டிடக் கூடாதையா-ராவணு
அற்பமென்று நரர்களை எண்ணிடவேண்டாம்

நான்பட்ட பாட்டை யறிவேன்-முன்னுளில்
நரர்கையில் கௌசிகரின் யாகசாலையில் (நான்)
கான்திரி அரக்கர் நாங்கள்-நரர்களின்
கண்களில் படாதொளித் தேயலைகின்றோம்

சுபாகு என்னும் அரக்கன்-அம்பொன்றால்
துணிபட் டிறந்தானந்த யாகசாலையில்
சபாஷ் எனுங் காதூஷணர்-தற்போதுன்
தங்கை சூர்ப் பன்னகையா லுயிர்துறந்தார்

தாடகை மலைபோலே-ஓரம்பால்
தலைவேறு துண்டம்வே றானுள்காண்

*வாராநின்றான்—வந்தான்

ஆடல் கூடல் களெல்லாம்-ராவணா
அந்த நாரின்முன்னே பலியாது

என்று மாரீசன் சொல்ல-ராவணன்
எப்படியும் சீதையைநான் கொள்ளவேண்டும்
பொன்மா ளுகிடுவாய்-மாரீசா
பொற்பாகச் சீதைமுன் ஆடிடுவாய்

எப்படியும் அந்தநாரை-சீதையைவிட்டு
இயன்ற மட்டும்தூரமாய்க் கொண்டுபோய்விடு
அப்படியும் இப்படியும்-துள்ளிநீ
அகப்பட்டுக் கொள்வதுபோல் பாவனைபண்ணு

சீதை நார்களிடம்-அந்தமானைச்
சீக்கிரம் பிடித்துவரச் சொல்லவேசெய்வாள்
தாதையாய் உனைஎண்ணுவேன்-மாரீசா
தந்தைக்குப்பின் தாய்மாமன் கார்டியனன்றோ

என்று ராவணன் வேண்ட-மாரீசன்
என்னாலே முடியாது அப்பாராவணா
வன்னரர் அவர்களய்யா-யானும்
வனப்புள்ள பர்ணசாலை போகவேமாட்டேன்

நார்களைக் கண்டவுடனே-என்னுயிர்
நடுக்கத்தா லுடல்விட்டுப் போய்விடுமென்ன
பரபரப்பான சொல்லொடும்-ராவணன்
படபடத்த விழிகள் மீசைகளோடும்

இன்னே கொல்லுவேன் உனை-என்சொற்படி
ஏகினாலும் ஒருக்கால்நீ பிழைத்திடுவாய்
கொன்னே அழிவானேன்-மாமாஉனைக்
கும்பிட்டேன் என்பேச்சைத் தட்டாதே

என்று இராவணன் சொல்ல-மாரீசன்
எண்ணித் தூக்கித்தான் தன்காலகதியை
இன்றை வரையும்நான்-இந்த
இராவணனுக் கெத்தனையோ தொண்டுகள் செய்தேன்

மருமகன் வாழ்ந்திருந்தால்-இந்த
மாமனுக்கும் வாழ்வென் றெண்ணியிருந்தேன்
திருத்தாதை யாய்நினைப்பேன்-என்றவன்
திரும்ப ஒருநொடியில் கொல்லுவேன்என்றான்

என்னே அநியாயம்-இவனுடைய
ஈனத் தொழிலுக்குநான் உடன்படுதல்

பொன்தள அரண்மனையில்-இவன்வாழப்
புன்தொழில் தொண்டுதான் புரிந்திடுதல்

புன்தொழில் ராவணனால்-என்னுயிர்
பொன்றிடில் பொல்லாத நரகந்தான்
வன்னரால்மாண்டால்-எனக்கு
வாய்க்காத முத்தியும் வாய்ப்பாகும்

தனயன் போல்நினைத்தே-யானும்
தடுத்தேன் வன்னரிடம்போதல்
ஜனகன் மகளாலே-இவனுக்குத்
தப்பாதுயிர்அரசாட்சிநாசம்

என்று இவ்வாறு நினைந்து-மாரீசன்
எழிலான பொன்மான் ரூபமெடுத்தான்
நன்னயமாய்ச்சற்றுநேரம்-ராவணன்முன்
நடித்தோடி னன்பர்ணசாலையைநோக்கி

அப்படி யிப்படியாடி-எளிதினில்
அகப்பட்டுக் கொள்வது போலநடித்து
துப்புரவாய்ச் சீதைமுன்னால்-பொன்மானும்
துள்ளித்துள்ளி விளையாடி நின்றதினால்

மானைப் பிடித்துத் தாருங்கள்-என்றுசீதை
மன்னர்க் குரைத்திடவும் அவர்மனசில்
ஏனைய மான்போலில்லை-இதுவும்
ராக்கதர் மாயம்போல்த் தெரிகிறது

பெண்ணே இதுவேண்டாம்-ஜானகிநீ
பிரியப் படுவதிது தகாதென்றார்
மண்ணினில் பெண்ணாலே-எவருக்கும்
மாட்சியும் தாழ்ச்சியும் ஏற்படுவதால்

தொந்தரை பொறுக்காமல்-ராமரும்
துணைவன் லக்குமணனைத் துணையாய்வைத்து
அந்த மானைத் தொடர்ந்தார்-அதுவும்
அப்படி யிப்படியாடி வெகுதூரம்

ராமரைக் கொண்டுபோனதால்-அவரும்
ராட்சதர் மாயமீதென்றுநினைத்து
தாமரைக் கைகொண்டு-ஓரம்பு
தாவுமான் தேகத்திலெய்துகொன்றார்

தீரம்மான் சாகும்போது-அதுவும்
திறமாய் மாயத்தைப்பூர்த்தி செய்யவென்று

சீதா லக்குமணா-அபயமென்று
செவிடு படஅலறி உயிர்விட்டது
கேட்டாள் சீதைஇதனை-உடனே
கொடுகஜம் விழுந்தவர் நடுங்குமாப்போல்
தாட்டிக லக்குமணா-உன்றன்
தமயர்க் கபாயமெதோ நேர்ந்ததையா

ஓடிப்போய்ப் பாருமய்யா-இல்லாவிடில்
உயிர்துறப் பேன்இன்னே தீயில்விழுந்து
கேடிழைத் தேன்நாதர்க்கு-நானுமென்
கேடான பெண்புத்தி பின்புத்தியால்

நாதனே வேண்டாமென்றார்-நானும்
நயந்து நயந்து கேட்டதாலே சென்றார்
பாதகம் இழைத்தே னய்யா-நாதர்க்கு
பார வபாயமெதோ யானறியேன்

என்றுமே சீதைபுலம்ப-லக்குமர்
இருதலைக் கொள்ளியிடை யெறும்பாகி
என்றன் தமயனுக்கு-யாரேனும்
ஏதேனுங் கேடுசெய்ய முடியாதம்மா

அண்ணன் சுகமாய் வருவார்-நீயும்
அழுது புலம்பாமல் அமர்ந்தேயிரு
திண்ணிய அரக்கர்களின்-மாயத்தில்
திறமான மாயமீ தொன்றாகும்

என்று இலக்குமர் சொல்ல-சீதையும்
இதுகொல் அவர்சமர்த்துப் பேசும்நோம் (கொல்-ஓ)
இன்னே ஓடுலக்மணா-அல்லாவிடில்
ஏதும் பகைவைத்துநீ செய்கிறாயா

இவ்வித மாய்க்கடிந்து-சீதையும்
எழிலான லக்குமணர் தமக்குச்சொல்ல
ஒவ்வா மனதுடனே-லக்குமணர்
உற்றசீதை காவல்நீக்கி வெளியேசென்றார்

ஜடாயுவைக் காவல்வைத்தார்-லக்குமர்
தமயனைத் தேடிப்பார்க்க வெளியேசென்றார்
ஆடாத செயல் ஈதென்று-லக்குமர்
அறிந்தும் அன்னையவட்குப் பயந்துசென்றார்

ராமரை வழியிற் கண்டார்-அவரும்
லக்குமா சீதையை விட்டேன் வந்தாயென்றார்

ஆமன்று அன்னை கண்டிப்பால்-வெளியேறினேன்
அபயக் குரலால்யானும் அலமந்தேன்

நிற்றியேல் நெருப்பிடையில்-வீழ்வனென்றாள்
நிருபாநும் ஆணையைநான் ஒப்பிநிற்கையில் (நிற்)
உற்றயிரு தலைக்கொள்ளி-எறும்பானயான்
உடன்றுயிர் வெறுத்தே வெளியானேன் என்றார்

இலக்குமர் பர்ணசாலையை-விட்டேகவும்
இலங்கும் முப்புரிப்பூணூல் மார்பிலிலங்க
இலங்கை ராவணனோர்-தவரிஷிபோல்
எழில்சீதை யைக்கவற நிர்ணயம் செய்தான்—தெந்

## இராவணன் சீதையைக் கவறல்

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

தன்மாமன் மாரீசன் றந்திரத்தால் ஜானகியைத் தனிக்கச்செய்து
தாசரதி லக்குமணரை யகலச்செய்து
மன்தபதி போல்வேடம் பூண்டுகொண்டு மகிழ்ச்சியுடன்
பிச்சையென்றுமன்னிய கமண்டலமுங் காதண்டுங் கொண்
டுன்னியெழு விருக்ஷனைப்போ லோடிமே லோடியாய்
வைத்தேவந்து உளக்காதல் மிகப்பொங்கி யுற்றேநோக்கி
தன்னினைவு பலித்திடும் நல்லமயமீதே தானென்று தன்னுட்
கொண்டு ஜானகியைக் கவர்ந்ததையே சாற்றல்செய்வாம்

பிக்ஷாம் தேஹியென்று-சீதைமுன்
பிரசன்ன மாகியொரு யோகிநின்றார்
இக்ஷா பொருளேதுவும்-அவர்க்கு
இவ்வுலகில் இல்லாதது போலேநின்றார்

கமண்டலம் ஒருகையில்-அவரும்
காதண்டம் பற்றோர்கையில் வைத்திருந்தார்
சமயம் தவறிற்றே-அய்யய்யோ
சரியாய் அதிதியம்செய்ய இவருக்கு (சம)

நாதரும் இங்கில்லையே-மற்றும்
நம்கொழுந்தர் இப்போதானே வெளியேசென்றார்
பாதகம் இல்லையிதனுல்-அவரும்
பசியால் துடிக்கிறதால் பிச்சையிடலாம்

என்றுமே மனதில் எண்ணி-சீதையும்
எழிற்பர்ண சாலைவாயிற் கிட்டிவந்தனள்

முன்னிய பசியினாலே-துவள்வதுபோல்
மாயப் பரதேசியும் வாயிலில் வந்தான்

சீதையைக் கண்ணுற்ற-ராவணன்
தீதாம் காதற்கடலின் நாப்பண் விழுந்து (நாப்பண்-நடுவில்)
ஓதைகொள் திரையடியால்-உடல் தளர்ந்து (ஓதை-ஒலி)
உலையிடு மெழுகென உருகிவிட்டான்

மயில்சாயல் இவளில்கண்டு-ராவணன்
மலர்மாலை போன்றனர் பத்துக்கண்ணுடன்
துயிலெழு காலைமலரும்-செடிகள்உள்ள
தூயநந்த வனம்போலே ஆகியேநின்றான்

செங்கமல மேனிகாணத்-தனக்குச்
சேர்ந்தயிரு பதுகண்கள் போதுமாயில்லை
பங்கமிலா ஆயிரங்கண்கள்-எனக்குப்
படைத்தனன் இல்லையே என்றெண்ணமிட்டான்

மூன்றரைக் கோடி ஆயுளும்-தவத்தினால்
முன்னாளில் யான்எனக்குப் பெற்றிடும்போது
மான்போன்ற இவளைஎன்றும்-பிரியாமல்
மகிழ்ந்து சுகிப்பதற்கோ என்றுநினைத்தான்

தேவர்களும் அவுணர்களும்-தேவியரோடு
தீழ்ப்பான குற்றேவல் செய்து வரும்யான்
ஆவலுடன் இவள்சொல்லைச்-சிரமேற்கொண்டு
ஆகுவேன் இவட்கோர்ஆளாய் என்றுநினைத்தான்

வணங்கியே ஆசனமிட-ராவணன்
வனப்புள்ள பர்ணசாலை வீற்றிருந்தான்
அணங்கினள் முன்நிற்க-அவன் இருக்க
அடங்கின பாம்புகள் படங்குறைத்து

மரங்கள் மலைகள்எல்லாம்-நடுங்கின
மட்டில் பறவைமாக்கள் நாவொடுங்கின
சிரம்பத் திருபதுகைகள்-உள அரக்கன்
தீரத் தவரிஷிபோ லிருக்கக்கண்டு (மாக்)

அருந்தவ ரிஷியார்நீர்-அதிதூரம்
அலுக்க நடந்தீரென்று சீதைசொல்லவும்
விருந்தினர் யாரும் இவ்வழி-என்னையே
விரகிலார் என இராவணன்சொன்னபின் (விரகிலார்-அறியார்)

இந்த ஆசிரமம்யார்க்கு-உரியது
இவர்கள் எங்கிருந்து வந்துள்ளார்கள்

சொர்க்கமாம் இடம்யாது-எனக்குத்
தெரியச் சொல்லும் அம்மணி என்றுசொல்லவும்

தசரதன் குலத்தலைவன்-நம்பியொடு
தன்சிற் றன்னைகைகேயி சொற்சிரங்கொண்டு
அசதி யிலா திவ்வடவி-மேவியே
அமர்ந்துளார் அவர்பெயர் அறிதியென்றாள்

நாட்டி லிலாமற் காட்டில்-இரவுபகல்
நலமாய்க் களிக்கின்றநீ யார்மகளென்ன
வாட்டமில் தவரிஷிகளை-வாக்கில்மனதில்
வரதெய்வ மாக்கொள்ஜன கர்மகளென்றாள்

விருத்தர் வெந்தவத்திர்-எங்கிருந்து
விரும்பி வினைகடக்க யிவ்வழிவந்திர்
அருந்தவத் திர்சொல்லுமென-அவனும்
அவனுறை நகரினை விரித்துரைத்தான்

பிரமன் மரபிற் றேன்றி-எவ்வுலகும்
பேர்பெற அரசாண்டு வருகின்றான்
அரன் கயிலையை யெடுத்தான்-அவனும்
ஆசை யானைகளின் மருப்பொசித்தான் (ஆசை-திசை)

கடை காவலர் தேவரே-அவனுக்கு
கற்பக தருக்களே நிதியாகும்
அடைப்பம் செருப்புக் கொளல்-அடிவருடல்
அமையும் ரம்பைமேனகை திலோத்தமைக்கு

சுடர்கள் இருவர்களும்-அவருக்குத்
தொண்டு பூண்டு ஓடுகின்ற வேலையாட்கள்
திடமா யரண்மனைக்குக்-காவலாளர்
தேவேந் திரன்முத லானஅமரர்

தேவலோகம் நாகலோகம்-எங்கணும்
தேடித்திரிந் தாலும்ஒப்பாய்க் காணமுடியா
அவனுடன் மேவியிருந்து-தவஞ்செய்யும்
அழகாம் இலங்கைநகர் ராவணன் ஆட்சி

நல்லொழுக்கம் நூற்கேள்வி-நலமுடையான்
நாவினி லெப்போதும்வேதம் கோஷித்தேயுள்ளான்
விற்கரும்பாய்க் கொள்ளும் மன்மதன்-இவனைக்கண்டு
விரும்பிடுந் தேஜஸ்பெற்ற பெருமையுற்றோன

அந்தமிலா ஆயுளைப்பெற்றோன்-அவன் மிதிக்க
அரிய நவக்கோள்களைப் படியாய்வைத்தோன்

மந்திர ரிஷி யெம்போல்வார்-அவரை
மாராவ ணேஸ்வர ரெனப்பெற்றவர்

அந்தருள ஆந்தநகரில்-யானும்
அருந்தவ ரிஷிகளில் ஒருவன்என்ன
விந்தையாக அரக்கருரை-விரும்பினீர்
வெவ்வனம் புனிதநாடு விட்டேயகன்றீர்

என்றுமே ஜானகிசொல்ல-அவனும்
எம்போ லருந்தவர்க்கு எவராகிலென்
மின்னிடையாய் அவர்தேவரில்-தீயரல்லர்
மிக்கநல்ல வர்அரக்கர் எம்போல் வார்க்கென்ன

சீதை இதைக்கேட்டு-இந்தரிஷி
செப்புவது முழுவிப ரீதமென்று
வாதை மனதில்ஆகி-ரிஷியிடத்தில்
வளநூற் பயன்றிரட்டி யுருட்டினாற்போல்

தீயரைத் தீயரேசேர்வர்-மேலும்
தீயரைத் தொடர்ந்தவருந் தீயரேயென்ன
மாய அரக்கன் அவட்குச்-சந்தேகம்
மனதுறு தவத்தர்தீ தூடற்றரென

தன்னுத னுங்கொழுந்தனும்-இவ்வனத்தில்
தவஞ்செய்து திருப்புவ தற்குள்ளாக
அன்ன அரக்கரெல்லாம்-அழியப்பெற்று
அவனி பூரணச்சுகம் பெறுமென்னவும்

மானே மானிடர் சேர்ந்து-அரக்கரை
மண்ணில் வேரில்லாமல் அறுத்திடுதல்
மானே சிங்கத்தைக் கொல்லுதல்-முயல்சேர்ந்து
மாணிபத்தைக் கொல்லுதலையொக்குமென்னவும்(இபம்-யானை

கானையும் விராதனையும்-கொன்றதை
காதினிற் றவத்தீர்நீர் கேட்டிலையோ
அான்மலை தூக்கியெடுத்த-அரக்கனாரும்
அரக்கர்கள் எல்லோரும் அழிவர்திண்ணம்

தருமத்தைப் பாவம் வெல்லுமோ-என்று
தர்க்கித்தா ளவளரக்கன் என்றறியாமல்
ஒருபூலை யாவர் இவர்கள்-இராவணர் (பூலோ-இலவமாம்)
ஓரிரு பதுதோட்கள் வாடைவீசினால் (ஒரு)

மேருவைப் பறிப்பன் கைபால்-விண்ணிடிப்பன்
மேவிய கடல்களெல் லாங்கலக்குவன்

பாரினைக் கையாலெடுப்பன்-ராவணன்போல்
பலமுளாரிப்பாரி லெவரெனச்சொல்லி

அரக்கனும் அவனரசும்-அழியும்படி
அவன் நாயகர் கொழுந்தார் செய்வாரென்னவும்
அரக்கனும் அந்தரிஷிக்கு-கோபம்வந்தது
அந்தரா வணன்தா னென்று தோற்றும்படியாய்

மேகம்போற் கர்ச்சித்தான்-ராவணன்
மேலெழும் படமுடைய பாம்பினையொத்தான்
பூகம்பம் போலவதிர்த்துச்-சீதைமுன்
பொங்குகட லென்னும்படி ஆரவாரித்து

மண்ணிடைப் புழுவின்வாழும்-மானிடர்
மாணாக் கர்களினும் வலியரென்றாய்
பெண்ணான தால்நீ பிழைத்தாய்-இன்றேல்
பிசைந்துன்னை யிதற்குள்ளே தின்றுமிருப்பேன்

அன்னமென் னடையினளே-உன்னை
அரும்மகு டம்போலென் சிரம்வைத்து
விண்ணரம்பை மாதர்கள்தொழ-என்னோடு
வீயாத செல்வத்துள் ளுறைதியென்றான்

செவிகளைக் கையாற்புதைத்துச்-சீதையும்
சிலைக்கை வென்றிக்காகுத்தர் கற்பினளை
அவியைநாய் விரும்புதல்போல்-அரக்கனே
அஞ்சாம லென்முன்வந்து என்னநீசொன்னாய்

நீரிற் குமிழி யாகும்-இந்தஉயிர்
நீத்தற்கஞ்சிக் கற்பினை யழிப்பதுண்டோ
போரில்வெங் கணைவிரவா-முன்னமே
போய்விடுஉன் உயிர்கொண்டு ஒளித்தோடி

என்று சினந்து சொல்லவும்-ராவணன்
இபங்கள் மருப்பொசித்த என்றன்மார்பினில்
உன்கண வனினப்புகள்-பட்டவுடன்
உதிருங் குன்றினிற்பட்ட கணையாமென்று

பெண்ணேநின் னாசைநோயால்-வருந்திடும்
பேதையாரு மென்னுயிர் காத்திடுவாய்
விண்ணக மாதர்க் கெல்லாம்-மேலாய
விருப்பத்தை நீபெறுவாய் நிஜமென்று

தாள்களில் தாழ்ந்து விழவும்-ஜானகி
தன்னுயிரை வாங்கவரும் வாளைக் கண்டாற்போல்

ஆள்யன்ன இளையோய்என்று-அலறவும்
அரக்க னினித்தாமிதம் கூடாதுஎன்று

மண்ணைப் பெயர்த்தெடுத்தான்-அதனோடு
மன்னன்பன்னி சீதையையும் கொண்டுபோனான்
விண்ணிற் பறக்குந் தேரொன்று-அவன்வந்தது
வெளித்தோற்றாச் சற்றப்பால் நிறுத்திவிருந்தான்

மாயமான் செய்திதன்னை-மிகவும்
மறைந்து கவனமாகப் பார்த்திருந்து
பாயும்புலி பசுத்தோலைப்-போர்த்துக்கொண்டு
பண்பாக வந்ததுபோல் யோகியாய்வந்தான்

தேருக்குக் கொண்டுசென்றான்-சீதையும்
திருட்டுத் தனமாகநீ தேரைவிடாதே
வீரனே நீயானால்-நாயகரை
வீழ்த்திவிட்டு என்னைநீ கொண்டுபோவாய்

அச்சத்தி னாலன்றோ-உன்னைப்போன்ற
அரக்கரைக் கொன்றுன்தங்கை கொங்கைமூக்கை
எச்ச மாக்கினவீரர்-எங்கேயென்று
எறிட்டுப் பார்க்காமலே என்னிடம்வந்தாய்

என்றின்னே யிகழ்ந்திடவும்-இராவணன்
இழிந்மா னுடருடன் யுத்தஞ்செய்தலில்
மன்பெரு மையையுடைத்து-மாயத்தால்
மன்னுவதும் அரக்கர்க் கதுசெயலேயாம்

என்று சொல்லிடச் சீதை-திரும்பவும்
ஏவுவாள்கொண் டிகல்வது நாணம்போலாம்
மன்பெருமைக் கற்பினேரை-ஏமாற்ற
மாயஞ்செய்தல் சீ அரக்கர் வீரம்போலாம்

போருக்கே நின்றும்போவாய்-இல்லையேல்
பூனைபோல் ஏனையிட்டோடிப் போவென்றுறுத்தாள்
தேருக்கே ஜடாயுகண்டார்-அவரும்
நீண்ட யுத்தம் செய்துசிறகறுந்து வீழ்ந்தார்—தெந்

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

ஜானகியைத்தசக்ரீவன் றன்விலாற்றீண்டாமற் கவர்ந்தேசெல்லத்
தக்கபல ஜடாயுவுந் தானறிந்தேயிதை
வானத்தின் மீதெழுந்து செல்லுகின்ற விமானத்தை யெதிர்த்தே
சென்று வன்மையொடு வல்லரக்கன் சிரத்திற்றாக்க

கோனரக்கன் வாட்கொண்டு குறைத்ததினாற் குற்றுயிராய்க்
கிடக்குங்கோலங் குறைவுற்ற ராகவருங்கண்டுகொண்டு
ஞானபர வீரசொர்க்கம் மாகழுகு ராஜனுக்கே மல்கச்செய்து
மனைசீதை தனைத்தேடுஞ் செயற்கை சொல்வாம்

நோண்டிச்சிந்து

ஜானகியோர் வரமீந்தாள்-ஜடாயுவுக்கு
தன்நாயகன் காணும்வரை உயிரிருக்க (ஜானகி)
கான அரக்கரெல்லாம்-இதனாலே
கருவழிந் தாலென்ன ராவணனுக்கு

தானினைத்த பெண் கிடைத்தது-இனிமேல்
தங்கைசூர்ப்பன் னகைகதி என்னவாயிலென்
தேனின் மொழிச்சீதையை-அசோகவனம்
சேர்த்துத் தேற்றல்செய்து மன்றல்செய்ய இருந்தான்

ராமர்லக்குமர் வந்தார்-பர்ணசாலை
ராவணன் ஜானகியைக் கொண்டுபோனபின்
காமர்பூப் பந்தல்போன்ற-சாலையில்
கற்பரசி சீதையைக் காணவேயில்லை

பரபரப் பாய்இருவரும்-சாலையின்
பக்கமெல்லாம் ஓடியாடிப் பார்த்தார்கள்
ஆற்றினார் சீதையென்றும்-அதற்கு
ஆனதொரு பதில்சத்தம் கேட்கவேயில்லை

பர்ண சாலையின் முன்னே-ஒருநாளும்
பார்க்காத காலடிகள் பார்த்தார்கள்
தர்ம மாகுமா தம்பி-சீதையைத்
தனியே வனத்தில் விட்டு என்பின்வந்தது (தர்)

உன்னையே நம்பிச் சென்றேன்-நீயும்
உறுதித் துணையெனக்கு ஆனபடியால் (உன்)
தன்னந்தனியாக-ஜானகியும்
தங்கும்படி நேரிட்டதால் வந்ததனர்த்தம்

என்றுசொல்லிக் கோபமுளவும்-அப்போது
எரிகள்நீர் மண்விண்வரை நடுங்கினது
மன்னவன் லக்குமணனும்-அண்ணாநீர்
மனது கலங்கவேண்டாம் தேடிப்பார்ப்போம்

அடிகளின் பின்னாலே-நாமும்
அடிவைத்துச் சென்றோமானால் கண்டுகொள்வோம்
கடிதினில் செல்வோம் நாம்-என்றுமே
கடுவேக மாய்த் தெற்கே சென்றார்கள்

வீணைக் கொடியைக் கண்டார்-ஜடாயுதான்
வெகுநேர மாகச்சண்டை செய்துள்ளார்என்றார்
கோணைவில் முறிந்தகொன்றைக்-கண்டராமர்
குலமலை போன்றதோள னவனென்றார்

சூலம் அம்பறாத் தூணிகள்-கிடப்பதையும்
தூய கவசமொன்று கிடப்பதையும்
காலறுந்த பரிசாரதி-ரத்தத்தில்
கால்மாடு தலைமாடாய்க் கண்டார்கள்

குண்டலங்கள் மணிக்குவியல்-மிகக்கண்டு
கோதண்டக் கையன்இங்கு யுத்தஞ்செய்தவர்
எண்ணத்திற் பலர்சொல்லென்ன-லக்குமர்
இல்லை தசக் கிரீவனவன் ஒருவனென்றார்

திருப்பாற் கடலுள்வரை போல்-ஜடாயுவும்
செவீரென் குருதியினில் மலைபோலே
உருமாறிக் கிடக்கக்கண்டு-ராமரும்
உடல்மே லஞ்சனமலை போல்வீழ்ந்தழுதார்

மூர்ச்சித்த ஸ்ரீராமரை-லக்குமர்
முனங்கை களால்தழுவி யெடுத்துவைத்து
நீர்கண் முகம்தெளித்து-தெளிந்தபின்னர்
நினைவோடே ராமரிவை புலம்பலுற்றார்

தந்தாதை யரைத்தனயர்-தணந்தோம்முன்
தக்கதந்தை எற்காக நீயுமிறந்தாய் (எற்காக-எனக்காக)
அந்தோயா ன் அரும்வினையேன்-உனைக்கொல்ல (அந்தோ-அய்யோ)
அந்தகனாய் நின்றேனே அந்தோ அந்தோ (அந்தகன்-யமன்)

பின்னுறுவ தோராதே-பேதுறுவேன்
பெண்பா லாசையைத் தீர்ப்பான் மான்பின்னேசென்றேன்
உன்னுறவை நீதீர்த்தாய்-இவ்வுலகில்
உள்ளதென் னுறுவான்வேண்டி உயிர்வைத்துள்ளேன்

மறையோர் குறையைத் தீர்க்க-விரதம்
மாட்சியுறப் பூண்டதினா லுயிர்பொறுத்தேன்
இறையும்யான் புன்தொழிலேன்-இனிமேலே
இம்மாயப் புன்பிறவி யென்றும்வேண்டேன்

சான்றோய்நீ பட்டிறக்கவும்-உன்னைத்
தணந்தவ னுயிர்கொண் டினிதுசெல்லவும்
வான்சிலை கையிலேந்தி-வாளியுடன்
வந்தேனே நின்றேனே நெடுமரம்போல்

என்போல் வசையுற்றோர்-இவ்வுலகில்
எவரேனு முண்டோஎற்காய் இறந்தளந்தாய்
மன்பல வுனைக்கொன்றவன்-அகன்றுபோக
மல்வில் தெரிந்தேனென் றிருப்பதிலென்

என்று புலம்பும் போது-ஜடாயுவும்
ராமர்சத்தங் கேட்டுச்சற்று மூர்ச்சைதெளிந்து
கண்ணைத் திறந்துபார்க்க-கடுஞ்சோகமாய்
கண்கலங்கி நிற்றும்ராம லக்ஷுமர்களை

கண்டே யருகிலழைத்து-அவர்களின்
கஉச்சி மோந்துமே மனமகிழவும்
எந்தாய் உமக்கென்ன-இந்த
இதமில்லாக் காரியம்வந் தேற்பட்டது

என்றுமே ராமர்கேட்க-அப்போது
என் அன்னை சீதையை ராவணன்வந்து
சென்றான் தேர்மேல் வைத்து-அவன்சென்ற
சீரான வழியினில் நான்வந் தெதிர்த்தேன்

திருட்டுப் பயலேஎன்று-சிறகினாலே
திரும்பத் திரும்ப அவன் சிரம்அடித்தேன்
திருவன்னை மீட்கலா மென்று-யானும்
திறம்பட வெகுநேரம் சண்டையும்செய்தேன்

ஆயுதம் யாதுமின்றி-இருந்ததினால்
அரக்கன் முறைதவறிச் சிறகறுத்தான்
ஆயுள் நம்மைக் காணும்வரை-எனக்கு
அறுந்து போகாமல் அன்னை வரங்கொடுத்தாள்

சங்கதி சொல்லச் சொன்னாள்-என் அன்னையும்
சங்கடந்தன் னாலெனவும் புலம்பிக்கொண்டாள்
பொங்கிக் கொதிக்கவேண்டாம்-நீங்கள்
புலம்புவ தாலும்ஒரு பயனுமில்லை

மன்னா ஸ்ரீராமா-நீர்தான்
மானைத் தொடர்ந்ததனாற் காரணமாவீர்
தென்திசை சென்றுநீங்கள்-சீதையைச்
சிறைமீட்டு வாழ்வீர்என்று உயிர்நீத்தார்

ஆகவே இருவர்களும்-அவர்க்கு
அன்பா யுத்தரகிரி யைகள்செய்து
ஏகினார் தெற்காக-ஜானகியை
இராவணன் கொண்டுசென்ற வழிபார்த்து

போகும் வழியில் இருட்ட-இருவரும்
பொங்கிய மனதொடோர் மலையினில்தங்க
தாகமே மிகுத்ததினால்-ராமரும்
தம்பிலக் குமாகொஞ்சம் ஜலமென்ன

இலக்குமர் ஜலமெடுக்கச்-சென்றபோது
இலாயக்கு முகம்நோக்க இல்லாத
அயமுகி யென்னுமரக்கி-இலக்குமனை
அணைய வேண்டுமென்று கையாற்பிடிக்க

வெகுநேரம் மல்லாக-இராமரும்
விரும்பித் தம்பியைத்தேடிச் செல்லும்போது
மிகுபல அயமுகியின்-விஷயமும்
மிகக்கேடா யவள்மூக்கை யறுத்ததுவும்

இளைய பெருமாள் சொல்ல-இராமரும்
இந்த அரக்கர்செய்யுங் கொடுமைகளை
தொலைத்திட வேண்டுமென்றும்-தம்பிக்கு
சுந்தரமாம் வார்த்தைகளால் தேற்றல்சொல்லியும்

கபந்தன்

போகும்வழியில் கபந்தன்-என்றொரு
பொல்லாத அரக்கன் வழியில் நின்றான்
வரும் வழியினில் நின்று-கைவிரித்து
இடையில் அகப்படும் பொருளையெல்லாம்

வாரியே வாயில் போடும்-இந்த
வல்லரக் கனுக்கோ தலையில்லை
காரிருள் போன்ற முண்டம்-இவன்உடம்பு
கழுத்திலே தான்வாய் அமைந்துள்ளது

அவன்வழக் கத்தின்படியே-அன்றும்
அகன்ற தன்இருகைகள் விரித்துக்கொண்டு
இவர்வரும் வழியில்நின்று-இவர்களை
இழுத்து வாயில்போடப்போம் சமயமதில்

அண்ணனோர் கைவெட்டினார்-லக்குமர்
ஆனதம்பி மற்றோர் கையை வெட்டினார்
திண்ணிய அரக்கன் கீழே-வீழ்ந்துமே
திரமற்றுத் தான்தகனம் ஆகவேண்டினான்

அப்படியே தகனம்செய்ய-அந்த
அட்டஇடத் தில்இருந்தோர் கந்தருவன் (அட்ட-சட்ட)

குப்பெனத் தோன்றி நின்ருன்-அவனும்
குறிப்பான சங்கதிகள் இவர்க்கு விண்டான்

ராவணனுக்கிலங்கை யென்றுப்-அவனும்
ராமரின் சீதைகொண்டு போகிருனென்றும்
ஆவலாய் ராவணனைக்-கொல்லவும்
அழகான ஜானகியைச் சிறை மீட்டவும்

அருகிலாம் மலையில் உள்ள-வானரமாம்
அழகான சுக்ரீவன் நட்புக் கொள்ளவும்
திருவருள் மூகத்திலுள்ள-சவரியென்பாள்
தேவர்க்கும் முனிவர்க்குமின் னடிசிவிட்டு

திருவரம் மிகப்பெற்றவள்-அவளே
நீதில்வழி யுங்களுக்குக் காட்டுவாளென்றும்
ஒருமட்ட மாகச்சொல்லி-இருவரையும்
உளம்வாக்குக் காயத்தால் போற்றி மறைந்தான்

இவனோர் சாபத்தினல்-இப்படி
இயல்பான தலையில்லா அரக்கனானன்
பவம்நீங்கும் காலம் முன்னம்-ஏற்பட்ட
படிராம லக்குமர் தொட்டபொழுதாம்

## சுக்ரீவன்—வாலி—அனுமார்

கபந்தன் குறித்த சுக்ரீவன்-கதையை
கவனமாய்க் கேள்உனக்குச் சொல்கிறேன் அம்மா
தபசி களுக்குத் துன்பமாய்-இருந்த
தாட்டீக ராவண சம்ஹார மூலமாய்

விஷ்ணு அவ்தாரம்-செய்தபோது
வேண்டுஞ் சிலதேவரைப் பிறக்கச்செய்தார்
ருஷ்ச விருஜன் புத்திரன்-ஆகவும்
ரூபலா வணியமாய்ச் சூரியாம்சமாய்ப்

பிறந்தவ னும்சுக்ரீவன்-இவன்தமையன்
பெலமுள்ள வாலிகிஷ் கிந்தையாசன்
திறம்பார்த்தார் வெகுகாலம்—வாலியும்
தீர வரக்கனுமோர் மலைக்குகையில்

வாலிதன் தம்பியையே-அக்குகையின்
வாயிலில் இருக்கும்படி ஆக்ஞாபித்தான்
வாலியும் வெகுகாலம்—வெளியிலே
வாராத தாற்றமையன் மாண்டிட்டானென்று

சுக்ரீவன் ஓர்கல்லால்—குகையடைத்தான்
ஜெயம்பெற்ற அசுரனை வரவொட்டாமல் (சுக்)
சுக்ரீவன் இதன்பின்னர்—ராஜனாகி
சுகமாய்த் தன்மனைவி உருமையோடு

மதன்ரதி போலேயிருக்க—வாலியும்
மாற்றானைக் கொன்றுவிட்டு வெளியில்வா
அதன் வாயில் தெரியாமல்—அங்கையால்
அணு அணு வாய்த்தடவி வரவாயிலில்

கல்லொன் றிருக்கக் கண்டு—உடனே
கபடநெஞ் சுடையவன் தம்பியென்று
கொல்லனுங் கோபத்தோடு—அக்கல்லைக்
குத்தித் தள்ளிப்போட்டு வெளியேவந்து

சுக்ரீவன் மனைவிபொருள்-எல்லாமே
தொருக்கக் கவர்ந்தவனைக் கொல்லமுயல
பக்குவ மாய்த்தப்பினான்—தன்னுடைய
பக்கபல ஹனுமான் முத லவரோடு

கிட்டின மலை யொன்றுக்கு—அதற்கு
கேடுசெய்ய வாலிவரான் ஓர்சாபத்தால்
தொட்டவிற் கணையோடு—ராமலக்குமர்
சுந்தாமா யந்தமலை நோக்கிநடந்தார்

இதற்கேகும் வழியினிலே—கபந்தன்
இதமாய்க் குறித்தபடி சவரிகண்டு
இசமா யிருவருக்கும்—அடிசில்இட்டு
எழில்வழி காட்டியபின் முத்தியும்பெற்றாள்

அதிகமாய்ப் பயந்துகொண்டே—சுக்ரீவன்
அண்ணன்வாலி என்செய்து வானோஎன்று
மதிபெறும் ஆயுதத்தோடு—எவருந்தன்
மனையிடம் வரக்கண்டால் ஒளித்துக்கொள்வான்

அதுபோல் ராமர்லக்குமர்-சேரவும்
அவன்ஒளித் தான்பார்ப்பான்போல் அனுமார்வந்து
இதுஎன்ன செய்தியென்றார்-ராமரும்
இயல்பாகத் தம்விஷயம் சொல்லிவிடவும்

சுக்ரீ வனைக்கொணர்ந்தார்-ஹனுமார்
சூதில்லா நட்பிவர்க்குட் செய்துவைத்தார்
சிக்கனமாய்க் கட்டியதோர்-முடிப்பினை
ஸ்ரீராம பிரான்முன்னர் வைத்தவிழ்த்தார்

முடிப்பை யவிழ்த்திடவும்-ஸ்ரீராமர்
மூர்ச்சையே யாகிக்கீழே விழுந்திடவும்
மடியினில் தூக்கிவைத்தார்-லக்குமர்
மற்றும்உப சாரமெல்லாம் ஹனுமார்செய்ய

ஸ்ரீராமர் கண்கள் விழித்தார்-தெளிந்தார்
சேதியென்ன வென்றுமற் றவர்கள்கேட்க
சீரான சீதையின் நகை-இவைகளே
திடீரெனப் பார்த்ததினற் சோர்ந்துவிட்டேன்

வேறேதும் இல்லை ஹனுமா-இப்போது
விளம்புஉன் கைக்குஇவை வந்ததெப்படி
கூறே ஒருமொழியில்-என்று
குன்றிய குரலால்ராமர் கேட்டிடவும்

ஹனுமார் வினயமாக-அய்யாவே
அடியே னேடேவசிக்கும் வானரங்கள்
மனுஷி அழகில் மிக்காள்-ஒருத்தி
மாகஹனத் தில்தெற்காகும் தேரிலிருந்து

இதையே வீசிவிட்டாள்-எங்கள்முன்
என்றெடுத்துக் கொண்டுவந்து தந்தனஅய்யா
அதையே நும்முன் வைத்தேன்-நும்முடைய
அரும்பன்னி நகையோவென் பார்க்குவீரென்று (அதையே)

இதனல் ஒருவேளை-நாதர்க்கு
இன்னவழி போனளென அறியலாகும்
இதமாகத் தனைத்தேடுங்கால்-நாதரும்
இதையே அறியலாகும் என்றுநினைத்தே

வீசினுள் போலும் என்றும்-இதுபோன்ற
வேண்டும்பல எண்ணங்களால் சற்றுகவிழ்ந்து
மாசில்லா மன்னர் ராமரும்-மனதுக்கு
மகிழ்வான துணையாகச் சுக்ரீவனை

ராவண சம்ஹாரம்-செய்வதற்கு
ராக்கதர்கள் சேனைகளில் பெருஞ்சேனை
ஆவலாய்க் கொண்டுவரவே-கேட்டதற்கு
அன்பாக அவரதற் குடன்பட்டார்

என்ன என்ன விதமான-உதவியையும்
இன்பமாகச் செய்யராமர் வாக்களிக்க
மன்னனும் பலமறிய-துந்திபியின்
மலைபோ லெலும்பையோர் விரலால் எத்துக

இன்னும் மேரும் ஏழுமரா-ஓம்பால்
எழிலாகத் துளைத்துநீர் காட்டிவிடுக
என்று சுக்ரீவர் சொல்ல-ராமரும்
எழுந்தார் ஒருநிமிஷத் தினிற்காட்டினர்

சுக்ரீவரும் உடனே-வாலியைத்
தொலைக்க உலைவிற்றுணை இவர்தாமே
மிக்க பலமுடையார்-என்றுகண்டு
மிகநய மாய் ராமரின் துணைகேட்டார்

ஒப்பந்தஞ் செய்து கொண்டார்-ராமரும்
உச்சித பலவானர சுக்கிரீவரும்
தப்பாமல் ராவணனும்-அவனரசும்
சர்வமாய் நாசமாகச் செய்வது என்றும்

சுக்ரீவன் கிஷ்கிந்தையை-ஆள்வதற்கும்
சுகமாய் வானரச்சேனை துணைவரவும்
மிக்கபல வாலியைக் கொன்று-சுக்ரீவர்க்கு
மிகுசீர்பட் டாபிஷேகம்செய்வது என்றும் (ஒப்)

அனுமார் துந்திபி யென்று-இதற்குமுன்
அருமையாய்க் கேட்டீர்கள் அவர்சரிதை
இனிமையாய்ச் சொல்லுகிறேன்-கேளுங்கள்
இவர்களில் அனுமார் என்பவர்தான்

அஞ்சனா தேவிபுத்திரன்-வாயுவின்
அதிபல அம்சத்திற் பிறந்தவராம்
வெஞ்சுடர்ப் பகவனிடம்-வித்தைகற்று
விளங்கும் நவவியாக ரணபண்டிதர்

துந்திபி விபரம் சொல்வேன்-இவனும்
தெய்வீகத் தச்சனான மயனின்மகன்
மண்டோ தரிக்கிளையோன்-வாலியால்
மாண்டபோ திவன்உதிரம் மதங்கமுனி

வாழும்ரிஷி முகமலையில்-விழுந்ததினால்
வாலிவா னரமிதற்குக் காரணமென்று
தாழுவன் தலை தெரித்து-என அவரின்
தாங்காச் சாபத்தால்வாலி அவ்விடம்வரான்

இந்தத் துந்திபி எலும்பை-எவரேனும்
எழிலாம் பெருவிரலால் எத்துவாரானல்
சந்தேக மின்றி வாலியை-அவர்தான்
ஜயிக்கலாம் என்றொரு திட்டமிருந்தால்

துந்துபி யின்பருமனை-நாமும்
சொல்வதற்கு இணையாகப் பொருள்களுண்டோ
அந்தமுள்ள ராமர்லக்குமர்-சுக்ரீவருக்கு
ஆன உதவிசெய்ய வேண்டுமென்று

சிந்தையிற் கொண்டார்கள்-உடனே
திறமுள்ள வாலியுடன் போருக்குப்போக
முந்தமுந்த ஆக்ஞாபித்தார்-ராமரும்
முழுதும் பொருளிழந்த சுக்ரீவரை (முந்)

எந்தஎந்த விதமாகிலும்-வாலியும்
இறந்தாற் றான் சுக்ரீவன் ஆளமுடியும்
இந்தஎண்ணம் தன்னைக்கொண்டு-ராமரும்
எவர்க்குந் தெரியாமல் மறைந்து நின்றார்

சுந்தரமாம் சுக்ரீவன்-வாலிக்குத்
தோற்று அகப் படும் நேரம் ராமர்பார்த்து
அந்தகர்க்கு வாலியுயிரை-அடைவாக
அளித்திடும் படியாய்ஓர் அம்புவிட்டார்

நிந்தித்தார் வாலி ராமரை-இப்படிநீர்
நிர்மலப் பரமாத்துமா செய்யலாமா
எந்தவித மேனும் நியாயமா-நீரும்
எம்வழக்கில் தலையிட்டுச் செய்யலாமா

வந்தவழி கல்லாலடைத்தான்-சுக்ரீவன்
வளமுள்ள என்ராஜ்ஜியம் தன்கையிற்கொண்டான்
இந்தவிதம் செய்யுமவனை-யானும்
எளிதில் விடவேண்டுமோ சொல்லுமேன்நீரே (எந்த)

வானரர்கட் குள்ளபழக்கம்-உம்மைப்போல்
வாளரசர் களுக்கொன்றுந் தெரியாது
ஆனதம்பி மனைவியை யான்-பெண்டாக
அடைவாய்க் கொண்டதுபெருங் குற்றம்என்று

மானபரணன் நினைத்தீர்-அக்குற்றம்
மனிதர் களுக்கல்லாமல் எங்களுக்கில்லை
தேனார் மொழிச்சீதை-அன்னையைச்
திருடின ராவணன்போல் என்னைநினைத்தீர் (எந்த)

காரணம் ஒன்றும் வேண்டாம்-எங்களுக்குள்
கருத்தொன்றே யானால்ஆண்பெண் கலந்துகொள்வோம்
ஆரணந்தான் சொல்லும் விதமாய்-அன்புடனே
ஆகுங்கலி யாணங்கள்தான் எட்டிருக்க (எந்த)

ஆனாலும் முடிந்த தாயுள்-அன்று
அயனெழுத் தன்றிவே றென்றும் நடவா
கோனுங் குருபரா நீர்-எனக்குக்
கொள்கையாய்த் தகனம்செய்து முத்தியளியும்

என்றுமே வாலிசொல்ல-ராமரும்
எல்லார்க்கும் போல்த்தகனம் செய்தபின்னர்
ஒன்றாக வானர ரெல்லாம்-அழைப்பித்து
உபகட்சி யையுஞ்சமா தானப்படுத்தி

சுக்ரீ வருக்குப் பட்டம்-கட்டினார்
தோன்றலாம் வாலிசுதன் அங்கதனுக்கு
மிக்கச்சீராய் யுவராஜ பட்டம்-கட்டினார்
மிகுமாரிக் குப்பின்சீதை தேடுகவென்றார்

மாரிக் காலங் கழிந்தது-சுக்ரீவர்
மட்டற்ற தூதர்மூலம் வானரச்சேனை
தேரியின் மணற்போல் வர-கிஷ்கிந்தையில்
திரண்டனர் எள்ளளவும் இடமேயின்றி

அந்தநா டெங்கினுமுள்ள-அழகான
அரசவா னார்தம்தம் சேனைகளுடன்
வந்துசேர்ந் தனர்அவரின்-பெயர்களை
வகையாகச் சொல்லுகிறேன் தெரிந்தமட்டில்—தெந்

வானரச்சேனை

சதவலி சுஷேஷணன் பனசன்-கவாட்சன்
தக்கஇல் உருமைதந்தை கேசரீ இடும்பன்
ததிமுகன் நீலன் துமுந்தன்-தீர்க்கபாதன்
சரபன் வினதன் கும்பன் சங்கன் குமுதன்

மற்கசன் மயிந்தன் இடபன்-பதுமன்
மாரு வன்புள்ள அனு மான்நளன் கயன்
இத்தகைய சேனைத் தலைவர்-கோடியுடன்
இரட்டி முப்பத்துமூன்று கோடியாகும் (67,00,00,000)

இத்தனை தலைவருக்கும்-உட்பட்ட
எழிற்சேனை யின்கணக்கைச் சொல்லுகிறேன்நான்
ஒற்றைக்கோடி இருபத்தோர்-லட்சவீரா
ஓராயிரத்தைந்நூற்றறுபத்நான்கோடி(12113564,00,00,000)

இன்னுந் துமுந்தன் சேனையும்-மேலும்
எழில்மற்கசன் மயிந்தன் தீர்க்கபாதன்

பின்னமில் வினதன் சரபன்-இவர்களின்
பெருமிதச் சேனையெண்ண முடியவில்லை

திருவுள நினைப்பென்னமோ-என்பதைத்
தெரிவதற் காய்ச்சுக்ரீவர் வந்துசேர்ந்தார்
அருமைச் சுக்ரீவா-சீதையைக்காண
ஆம்முயற்சி செய்யென்று ராகவர்சொன்னார்

சேனையின் எண்ணமும் பார்த்தார்-ராமரும்
சிந்தைமகி ழச்சுக்ரீவர்க் காசியும்சொன்னார்
தானையின் பலங்கொண்டு-லக்குமரும்
தண்டிக்க அரக்கனையும் சிந்தையிற்கொண்டார்

மேற்கில் சுஷேஷணனையும்-மேலும்
மிகுமலை யாம்வடக்கில் சதவலியும்
காற்கடல் கீழ்த்திசையில்-வினதனையும் (கால்-காற்று)
கடுகி யொருதிங்களில் மீளவுஞ் சொல்லி

மட்டற்ற பலம் வாய்ந்தவர்-இன்னும்
மன்னன்ராமர் மேல்அதிகப் பக்தியுள்ளவர்
திட்டமாய்த் தெய்வத்தன்மை-பொருந்தியே
சிறுதிரு வடியெனத் திருப்பேர்பெற்றும்

திருவுளக் கருத்தறிந்தும்-செய்பவர்
சீரான ஹனுமந்தன் தானென்று
பெருமான் அறிந் தவரைப்-பிரியமாய்
பேர்சொல்லிக் கூப்பிட்டுப் பக்கம்நிறுத்தி—தெ

## இராமர் அனுமார்க்குச் சொல்லியனுப்பிய அடையாளங்கள்

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

ஜானகியின் அடையாளம்தாசரதிஅனுமார்க்குத்தனித்துச்சொல்லி
தக்கதூதனிவன்றானென்றனுமானித்து
வேணவரமாசிகளு மாருதிக்கு மனமுவந்து அருளேசெய்து
விரற்றரித்த கணையாழியவன்கையிட்டு
ஆனபெரும்முயற்சியிறு லன்னைதன்னை அதிவிரைவிற்
கண்டேசெய்தி அடைவாகத் தெரிவித்து அவளின்க்ஷேமம்
கோனரக்கன் குலத்தினரோ டுடற்றிடாமற்குணமாகத்
திரும்பிவந்துகொடும்போராற்சிறைமீட்போங்குறிக்கொள்ளென்றார்

### நொண்டிச்சிந்து

தேவியின் அடையாளம்-தேவியும்
திருப்தி காமாய்த்தூதன் என்றுநினைக்க

ஒலியமாம் சங்கதிகள்-மூற்றும்
ஒருமையாய் உரிமையாய்ச் சொன்னவிபரம்

பண்புடன் கேளம்மா-சொல்லுகிறேன்
பவளநிறக் கால்கள் நகம் மதியம்
கண்வாட் புருவம்மதன் வில்-காதும்
கத்திரிக்கோல் தோடுசெய்த புண்ணியமாகும்

வதனங் களங்கமில் மதி-மூக்கு
வளநீர்க் குமிழியுடன் எட்பூ ஒந்தியாம்
கதலியே துடையாகும்-ஸ்தனங்கள்
கனசூது சக்ரவாகம் செப்புக்கலசம்

மருங்கை ஸ்பரிச மறியும்-அல்லாமல்
மற்றெவ் விதத்திலுமே யாகாது
இருகணைக் கால்கள் நெற்சினை-சினைவிராலாம்
இனிதேன் கரும்பமிர்தம் குழல்யாழும்

கிள்ளைகுயில் மழலைச்சொற்கள்-சேர்த்ததாய்
கிரியைச் சிருஷ்டிகர்த்தா செய்ததாகும்
கிள்ளும்புஷ் பத்துக்கிதழும்-சோமனுக்குக்
கேடாம் மறுவுண்டவை யிவளுக்கில்லை

கார்மே கத்தைப்பிடித்து-அகில்புகைத்து
கார் இருள் தொகுதியை மேலேதடவி
பார்புகழ் §சும்மையாக-அவள் தலையில் (சும்மை-சுமை)
படிய வைத்ததுஆகும் அவள்கூந்தல்

நடைக் கன்னம் பிடி வெட்கும்-என்பதாய்
நற்புலவோர் ஒப்பனையாய்ச் சொல்லுவார்கள்
தடையில்லா தியான் சொல்வேன்-அவள்நடை
தகுபுல வோர்புரைதீர் கவிநடையாம்

மாவிள நிறமுமல்ல-மாற்றறியா
மற்றபசும பொன்னவள்முன் கறுப்பாகும்
தாவில்மா ணிக்கம்நிகர்க்கா-ஆதலால்
தன்னிறமே தன்னிறத்தின் சான்றாகும்

என்றயிவ் வடையாளங்கள்-சொன்னபின்
இயல்பாக ஜானகிக்கும் லக்குமணர்க்கும்
இன்னுந் தனக்கு மன்றித்-தெரியாமல்
ஏற்பட்ட வைகள்சொற்றார் அவைகள்சொல்வேன்

வனத்திற்கு வந்த பொழுது-ஜானகி
வரிசையாய்த் தொடாமற் பின்னிட்டபோது

வனப்புள புனக்கிளியே-நீயும்
வனத்தில் தீராத்துயரம் தருங்கொல்லென்றேன்

மற்றைநாள் அரசிழந்து-அடவியில்
மறைந்து நானிருப்பதுன் களிப்போவென்
சொற்றிடக்துத் துயருற்று-ஜானகி
சோர்ந்ததை அவட்கடையாளஞ்சொல்லுவாய்

பதினன்கு வருஷங்களாய்க்-காடலைய
பதிவிட் டெழுந்துஅந்த நகர்அந்தத்தில்
அதியழ கெயில்வாயிலில்-வந்ததும்
அடவியெங் குளதெனக் கேட்டதுணர்த்தி

முன்னைநான் முனியோடு-மிதிலைக்கு
முற்றுயாகம் கண்டிடநான் உற்றபோது
அன்னமாடுந் துறையினுள்ளே-கண்டவளை
அழகாங் கன்னிமாடத்துக் கண்டதுணர்த்தி

அரசரி னவைதனிலே-அவள்கண்ணும்
அள்புள்ள என்கண்ணும் உற்றுநோர்ந்ததும்
காங்கொண்டு வில்லிருப்பவர்-யான்இன்றேல்
கனநெருப்பிடைவீழ்வள் என்றதுணர்த்தி

என்றிந்தக் குறிப்பான-விஷயங்களும்
எடுத்தனு மார்க்கிங்கித மாகவோதி
மன்னன் ஸ்ரீராமர்-மனதுடனே
மாருதிக்கு வேண்டும்பல ஆசிகள்சொல்லி

கணையாளி கையில் கொடுத்து-ஹனுமா
கண்போலக் காத்துநீ கொடுத்திடுவாய்
துணையாய்எம் அருள்கொண்டு-ஹனுமா
சூடா மணியைப்பெற்று வந்திடுவாய்

அன்னையாம் ஜானகியைக்-கண்டேதான்
அமர்செய்யா வருவாயென் றருள்செய்து
பின்னமில் எம்கருணையே-ஹனுமா
பெருந்துணை யாய்த்திரும்ப வருவாயென்றார்

கணையாளி கையிற்கொண்டு-அனுமார்
கருணாகரா உந்தன்பாதம் பணிந்தேன்
துணையாய்உம் அருள்கொண்டேன்-பெருமா
சூடா மணியுடனே திரும்பிடுவேன்

என்றுசே வடிபணிந்து-மேலும்
இதமாக லக்குமணர் அருளும்பெற்று

மன்னன்சுக் ரீவரினிடம்-வந்து
மௌனமாய் ஓர்பக்கமாய் அமர்ந்திருந்தார்

## சீதையைத்தேடல்

வானரச் சேனைதன்னை-சுக்ரீவர்
வகையாய் ராமர்சொற்படி பிரிவாக்கி
கானம் எங்குமே சென்று-சீதையைக்
கண்டு தெரியுமென் றனுப்பிவைத்தார்

வடக்கு கிழக்கு மேற்கு-திசைகளில்
வகையாய் வனத்தில்தேடி யலைந்தவர்கள்
திடமாய் எவ்விடமும்-தேடிப்பார்த்தும்
சீதையைக் காணேமென்று திரும்பிவந்தார்

தெற்கே சென்றவர்களில்-முக்கியர்
தீரஅங்கு தன்அனுமார் ஜாம்புவன்என்பார்
பற்பலநாடு காடுகள்-தேடினார்
பலவாய அவற்றின்பேர் சொல்லுகிறேன்கேள்

நருமதை ஏமகூடம்-குலிந்தம்
நற்சக் கரதீர்த்தம் விந்தம்விதர்ப்பம்
அருந்ததி மலைதண்டகம்-வேங்கிடகிரி
அழகு சுவர்ணத்துறை முண்டகத்துறை

தொண்டைநாடு சோளநாடு-தமிழ்நாடு
சூழ்தண்ட காருணியம் தஸ்நவநாடு
தண்கோதா விரிபாண்டு-கிரியுடனே
சாற்றுத மலைநதி நாடுகாடெல்லாம்

குன்றுகள் குகைகளெல்லாம்-குழிபோல
குழிந்த பிலங்கள்பாலை வனங்களெல்லாம்
இன்னவர் என்றுதெரியா-வண்ணமாய்
இடம்காலம் வேளைக்குத் தக்கவேடமாய்

சற்றும் அயர்வில்லாமல்-தேடினதில்
சாற்றவே வேண்டுஞ்சில முக்யவிஷயம்
மற்றவர் விதர்ப்ப நாட்டில்-தவஞ்செய்ய
மாவுரி தரித்திடும் முனிவரானார்

தண்டக நாட்டில் தேட-வானரர்
தகுந்தபார்ப் பனர்வேஷந் தரித்துக்கொண்டார்
தண்சக்ர தீர்த்தமதில்-துமிரனென்னும்
சதுரன் அரக்கனையே மடியவைத்தார்

ஏமகூ டத்துக்கடுத்த-பிலத்தினில்
எல்லாரும் அனுமாரின் வாலைப்பிடித்து
சாமட்டும் தேடுவோமென்று-உறுதிகொண்டு
தாங்க முடியாத கஷ்டமும் பட்டு

அங்கோரெழில் நகரம் கண்டார்-அதிலே
அதிக விநோதமான பெண்ணொன்று கண்டார்
அங்கவிகற்ப முடையாள்-அவளுடைய
அதிநீள மானமூக்கின் நுனியிற் கண்கள்

விந்தையாய்த் துடையிற்கைகள்-உள்ளவள்
வேண்டுங் கருணைகண் களிலுள்ளவள்
இந்தப்புது மையைக்கண்டு-அனுமார்
இவள்பெயர் காரியங்கள் இதமாய்க்கேட்க

தன்பெயர் சுயம்பிரபை-யென்பதும்
தருமயன் சொற்படிக்குத் தானிசைந்தொரு
விண்பெண்ணைக் கொண்டுவந்ததும்-அவளும்
விரும்பா திகன்றவளைக் கொன்றுவிட்டதும்

இந்திரன் அங்கு வந்ததும்-அவளை
எழில்மயற்காய்க் கோபித்துக் கூட்டிச்சென்றதும்
அந்தநகர் அவள்காவலாய்-அமைத்ததுவும்
அப்புறம் விமோக்ஷனம் அனுமாராலென்றும்

அந்தநகர் மயனுடைய-காதலால்
அவ்வமரப் பெண்ணமரச் சிஷ்டிப்பேயென்றும்
விந்தையுறச் சொல்லக்கேட்டதும்-அனுமார்
விஸ்வமாய் முகடுடைத்து வெளியேவந்தார்

வானரர் வாலில் தொற்றி-வடுவில்லாமல்
வந்தினர் சுயம்பிரபை விமோக்ஷனம்பெற்றாள்
ஆனகஷ் டங்களெல்லாம்-பட்டபின்னும்
அன்னை சீதையையெங்குங் கண்டிடாததால்

தெற்குக்கடற் கரைசேர்ந்து-இதற்குத்
தெற்கிருக்க லாம்இரா வணன்இலங்கை
பொற்பமை கடல்தாண்டி-லங்கைசென்று
புனிதஜா னகிபாதம் போற்றிவரவும்

அங்குசெல யெப்படியாகும்-இந்த
அகன்ற சமுத்திரத்தைத் தாண்டிக்கொண்டு (அங்)
அங்கு ஒருவர் இருவர்-சென்றாலும்
அசுரரின் ராஜ்ஜிய மதாய்அதாயிற்றே (அங்)

வாதையென்ன யேற்படுமோ-அந்த
வகையொன்றுந் தெரியாமல் என்னசெய்யலாம் (அவ்)
சீதையைக் காணுமல்-நாமும்
திரும்பு வதுபெருத்த அவமானம்

திரும்பவும் மனமே யில்லை-இதன்தெற்கே
செல்லவு மேதேனுமொரு மார்க்கமுமில்லை
அருள் அன்னை ஜானகியைக்-காணுமல்
ஆருயிர் இருப்பதிலோர் பயனுமில்லை

இருங்கடல் தாண்டிச் சென்றும்-இலங்கையில்
எழில்அன்னை ஜானகியைக் கண்டிலமானல்
பெருமான் திருவடிபோய்-நின்றுகொண்டு
பேடிகள்போற் காணேமெனச் சொல்வதுமில்லை

என்றோர் உறுதிசெய்து-வானரர்
எழிற்கடற் கரையிலோர் பக்கமிருந்தார்
மன்னன்ஸ்ரீ ராமர்பேரில்-மிகவும்
மனப்பத்தி யுடையஜாம் பவன்என்பவர்

காடி களுக்குக் காவலன்-அவரும்
காரியம்சித் திக்கஇது சமயம்என்றும்
தரணியில் வெகுகாலம்-இருந்து
சகல விஷயங்களும் அறிந்தவரால்

தன்பலம் இன்னதென்று-அறியாத
சதுரன் அனுமான்தன்மை விளம்பினர்காண்
சின்னஞ் சிறியவனய்-அனுமாநீ
தெரியாமல் விளையாட் டயர்காலை

சூரியன் மேற்பாய்ந்து-ஓர்நாள்
சுகமான கனியென்று கையாற்பிடித்தாய்
காரியம் அறியாமல்-ஹனுமா
கனரிஷி பெரியோர்க் கிடைஞ்சல்செய்தாய்

அவர்களில் ஒருவருன்னை-உன்பலம்
அறியாம லிருக்கவே சபித்துவிட்டார்
எவரேனும் விளம்பின கால்-உனக்கு
இதமான நினைப்பாகும் என்றுஞ்சொன்னர்

ஆதலால் அனுமந்தா-நீதான்
அருங்கடல் தாண்டவல் லமையுடையாய்
பாதகன் ராவணனின்-இலங்கையில்
பத்தினிஜா னகிகண்டு திரும்பிடுவாய்

என்றஇந்தச் சங்கதியை-ஜாம்புவான்
எழிலாகச் சொல்லியே முடித்தவுடன்
தன்பலன் தானறிந்து-ஹனுமார்
தாங்காத புளகிதம் உட்கொண்டார்

அய்யன்ஸ்ரீ ராமனருளைத்-துதித்து
அன்பாக ஆடிப்பாடிக் கூத்தாடினர்
மெய்யாய்என் அன்னைசீதையை-இலங்கையில்
மிகுலேசாய்க் கண்டுபாதம் தொழுதிடுவேன்

என்று அனுமார் ஆடிட-அவரோடு
இருந்த வானரரெல்லாம் கூடியாடினர்
அன்னை ஜானகியைக்-கண்டுவா
அனுமானே தகும்என்று ஆர்ப்பரித்தார்

இந்த இரைச்சல் கேட்டுச்-சம்பாதி
இதமாகப் பக்கமுள்ள குகையிருந்து
வந்தது வேட்டை யென்று-மெதுவாய்
வளர்ரோம மில்லாக்குஞ்சு போலநடந்து

உற்று உற்றுக் கேட்டிருந்தார்-வானரர்
உயர்வாக ராமரின்தாள் போற்றுவதும்
சற்றும்அச்சம் ஒன்றுமின்றி-ராவணன்
தாயாகும் ஜானகியைக் கவர்ந்ததுவும்

மாரீச அரக்கன் செய்த-மாயத்தால்
மன்ன ரிருவர்களும் அங்கில்லாததும்
போரா ருகவேகொண்ட-ஜடாயுவும்
புனிதமாம் வீரசொர்க்கம் அடைந்ததுவும் (உற்)

வந்தார்மெள்ளச் சம்பாதி-நெருங்கியே
வானரரின் கூட்டத்தில் அமர்ந்துகொண்டு
சிந்தா குலங்கொண்டார்-சகோதரன்
சிறந்த ஜடாயுராஜன் உயிருக்காய் (சிந்)

சொந்தமாகப் பாராட்டி-ராமரின்
துன்பத்துக் காகஅவர் புலம்பலுற்றார்
எந்தனுக்கு ஓர்முறையில்-இராமரும்
எழிலான என்மகனே ஆகவேண்டும்

அந்தரமாய்த் தேரொன்றில்-ராவணன்
அன்னையாம் ஜானகியைக் கொண்டுசெல்வதாய்
எந்தனின் மகன் சொன்னன்-அனுமா
இதைப்பற்றிச் சந்தேகம் கொள்ளவே வேண்டாம்

அந்தரம்நான் போகும்போது-சூரியன்
அவித்த ரெக்கைகள் முளைக்காததுவும்
விந்தையாக யிப்போது-ரெக்கைகள்
விரைவாய் முளைத்துவரத் தோற்றுவதும்

ராமரின் காரியமாக—என்று
ரகசிய மாயோர்ரிஷி சொன்னதுமுண்டு
ஆமய்யா அனுமந்தா-என்னைநீயும்
அழகாங் கடற்கரையிற் கொண்டுபோய்விடு

வந்துவிடும் ரெக்கையெனக்கு-அப்போது
வனப்பாக அந்தர மாகப்பறந்து
அந்தமுள ஜானகியாள்-இலங்கையில்
அமர்ந்த இடம் பார்த்துச் சொல்லுகிறேன்

என்றுமே சம்பாதிசொல்ல-அனுமாரும்
ஏனைய வானரர்கள் பின்னால்கொட
கொண்டுவிட்டார் கடற்கரையில்-அப்போது
குப்பென ரெக்கைளும் வந்துவிடவும்

அந்தரமாய்ப் பறந்துநின்று-சுற்றிப்பார்த்து
அசோக வனத்தில்அன்னை யிருக்கின்றாள்
இந்தவழிசெல்லவேண்டும்-அனுமா
எவருமே உன்னையன்றி ஆகவேமாட்டார்

நீயும்வெகு ஜாக்கிரதை-யாய்ச்சென்று
நெடுந்தூ ரமிருக்கும் அசோகவனம்
போயும்ஜா னகியைக்கண்டு-பொற்பான
புகழ்சூடா மணிவாங்கித் திரும்பிடுவாய்

என்றுமே ஆசீர்வதித்துச்-சம்பாதி
எழிலாய்ச் சாசசென்று கஹனமார்க்கம்
கண்களிமைப் பதற்குட்செல்ல-அனுமார்
கருத்தைச் சீதையருளில் ஊன்றவைத்தார்

## அனுமான் கடலைத் தாண்டல்

வானரர்கள் தம்மிடத்தில்-அனுமார்
வந்தனைகள் செலவுடன் பெற்றுக்கொண்டு
வான மளாவி நிற்கும்-பர்வத
மான மகேந்த்ர கிரிமேற் பாய்ந்தார்

அசன்ற சிகரம் ஒன்றில்-அனுமார்
அதிகப் பலமாக விரலூன்றி

கஹனத்தினூடு பாய்ந்தார்-இலங்கையின்
கடற்கரை யதனிற் போய் நின்றார்

கடற்கரை தனில்நின்று-அனுமார்
கனகச் சிகரம்நிறை லங்கைபார்க்க
இடமொன்றுந் தெரியவில்லை-ஆனால்
இடம்சற்று மில்லாமல் அடைத்துக்கொண்டு

தடம்போல் வாய்பிளந்து-கிடக்கின்ற
தடியரக்கி ஸுரஸவை தனைக்கண்டார்
கடம்புலால் நாறுமரக்கி-வாயன்றிக்
கடுகளவும் வேறே வழியில்லை

ஆனாலும் இவள்வாயின்-வழியாய்
அடைவாய்ப் புகுந்துகொன்று லங்கைசெல்லுவேன்
மாணு பரண ராமா-என்று
மாறினார் அதற்கேற்ற உருவமதாய்

புகுந்தார் வாயினுள்ளே-அவளின்
புலால்தின்ற குடலெல்லாம் அறுத்துவிட்டு
தகுதியாய் வெளியில் வந்தார்-அங்கும்
சண்டாளன் நகர் இன்னுந் தெரியவில்லை

மலைபோற் படுத்திருந்தாள்-சிம்ஹிகை
மறுத்தும் ஸுரஸவையைப்போ லிவளைக் கொன்றார்
அலைகடல் தாண்டிவந்தவர்-இலங்கையின்
அலங்கத்தைக் கண்டவுடன் அகமகிழ்ந்தார்

அஸ்தமித் திடும்வரையில்-அனுமார்
ஆரும்அறி யாமற்கடற் கரையிருந்தார்
அஸ்தமித் ததன்பின்னர்-அனுமார்
அரண்புகுந் துள்ளேசெல்ல முயன்றபோது
கோட்டையின் வாசலிலே-இருந்த
கொடிய இலங்கணியும் வந்து தடுத்தாள்
தாட்டகை முள்ள அரக்கி-ராவணன்
தகுங்காவல் என்றவளை வைத்திருந்தான்
சிங்கக் கர்ச்சனை போன்ற-சரவுடன்
சிறந்தவெண் ணிலாவீசுங் கோரைப்பற்களும்
அங்கங் காரிருளே-சேர்ந்து
அடைவாக ஒருருவாய்த் திரண்டதுபோல்
வந்து யாரடா என்றாள்-அனுமார்
வாரங் குழையப்போகும் சமயமதில்

தந்தத்தைப் பிடுங்கிடுவேன்-என்றும்
சரியுன் கதியும்சிங்கி கதியாகும்

ஸாரவையும் மடிந்தனள் காண்-என்கையால்
சும்மா இருந்தால்மட்டும் பிழைத்திடுவாய்
அரவம் செய்யாமற் போய்விடு-இல்லையேல்
ஆருயிர் இன்னேநீ இழந்திடுவாய்

என்றுமே அனுமார்சொல்ல-அரக்கிக்கும்
எண்ணம் பலவாறுய்ச் சிதைந்ததுகாண்
சொன்னது வாஸ்தவமே-இல்லையேல்
சுகமாய் இவன்எப்படி வரமுடியும்

ஆனாலும் நான் இவனைக்-கோட்டைக்குள்
அமர்புரி யப்பயந்து விட்டுவிட்டால்
கோனும் ராவணனும்-என்னைக்
கொல்லாமற் சும்மா விடுவானே

ஆதலால் இவனோடே-யானும்
அமர்புரி வதேமிக்கத் தகுதியாகும்
மோதமர் புரியாமல்-இவனை
மிகுலேசாய் விடுவது சரியல்ல

என்றுநிர் ணயம் பண்ணி-இலங்கணியும்
எழிலி போலேஒரு கர்ச்சனைசெய்து (எழிலி—மேகம்)
சொன்னவாய் இதுதானு-என்று
துடுக்காய் ஓர்குத்துக் குத்திடவும்

அடித்தார் அனுமாரும்-கால்கொண்டு
அந்தரத் தெழுந்து இலங்கணி வீழ்ந்து
துடித்தே உயிர்விட்டாள்-அனுமாரும்
சுகமாய் அரணுக்குள்ளே போய்ச்சேர்ந்தார்

## அனுமார் இலங்கைநகரில் சீதையைத்தேடல்

இலங்கை நகர்க்குட் புகுந்தார்-அனுமார்
எழில்அன்னை ஜானகியைத் தேடுவதற்காய் (இல)
அலங்கார மானதெருக்கள்-ஊடாக
அங்குமிங்கும் ஓடிஓடிப் போய்ப்பார்த்தார்

சந்து பொந்து களெல்லாம்—அனுமார்
தவற விடாமலெங்கும் நுழைந்து பார்த்தார்
அந்தமுள்ள ஜானகியை—அனுமார்
அவ்விடங் களிலெங்கேனுங் காணமல்

தீர்க்கம் மனதினிற் கொண்டு—அநுமார்
தெருக்களை விட்டுவீடு வீடாய்ப்புகுந்தார்
பார்க்கும் இடமெங்கும்—கோமான
பல்உதடு கள்உள்ள அரக்கர்கண்டார்

அரக்கியர் பிள்ளைகளும்—அநுமார்
அதிக விகாரரூபத் துடன்கண்டார்
நரஜென்மம் ஒருவரையும்—அநுமார்
நலமுறக் கண்களாற் கண்டிடாததால்

அரண்மனைக் குள்ளேபுகுந்தார்—அநுமார்
அதிபா தகஇரா வணனோடு
அரக்கர்கள் கணக்கின்றி-அயர்வதையும்
அங்கும்ஜா னகியாளில் லாததையும்

கண்டுமே கலங்கினர் காண்-அநுமார்
கருத்தினிற் பலபல விதம் எண்ணி (கண்)
புண்ணிய ஸ்ரீ ராமரின்-பன்னியை
புலால் தின்னு மரக்கர்கள் தின்றனரோ

காமன் கடுங்கணையால்-ராவணன்
கருத்துக் கிசையாததாற் கொன்றனனோ
தாமம் புனை ராமரை-நினைத்துத் (தாமம்—மாலை)
தானே உயிர்விட்டு இறந்தனளோ

என்றுமே இவ் விதமாய்-அநுமார்
ஏங்கி மனக்கலக்க முற்றிருந்தார்
இன்னவை இங்குநடக்கும்—சமயத்தில்
எழில் அசோக வனத்தில் ஜானகிக்கு

அன்னநடை ஜானகியாள்-லட்சுமியென்றும்
அவள்நாய கன்ராமர் விட்டுனுவென்றும்
இன்மொழியால் தேறுதல் சொல்லி-இருப்பதற்கு
இசைவு வீடணர்செய் தனுப்பியமகள்

## திரிச்சடை கனவு

அன்பான திரிச்சடையாள்-தூங்கிய
அவசத்தி லோர்கனவு கண்டதாக
அன்னமாம் ஜானகிக்கு-அக்கனவை
அவள்சொன்ன விபரத்தைக் கவனமாய்க்கேள்

எண்ணெ யொழுகத் தேய்த்து-ராவணன்
இரத்தநிற ஆடைமலர் அணிந்தவனாய்
மண்ணிற் கேவலமான-கழுதைபூண்ட
மண்புரண்ட தேரேறித் தென்புலஞ்சேர்ந்தான்

மக்களுஞ் சுற்றங்களும் - அவ்விடமே
மன்னனைப் போலவே போய்ச்சேர்ந்தார்
தொக்கத்தரு அசோகவனம் - அழிந்தது
சொக்கத்தங்க மாளிகையில் எரிமூண்டது

மண்டோதரி முதலானோர் - தலைவிரித்து
மங்கல மறுத்திடவும் யான்கண்டேன்
திண்சிங்கக் குறளைரெண்டு - தம்முடன் (குறளை—குட்டி)
சேர்ந்த புலிகளோடு திரண்டுவந்து

மத்தகஜம் கணக்கற்றதைக் - குருதிசிந்த
மாய்ந்திடச் செய்ததாகக் கனவுகண்டேன்
பத்திர மாகஓர்மயில் - பக்கமிருந்து
பறந்துபோய்ச் சிங்கஞ்சேரக் கனக்கண்டேன்

மங்கல மாதொருவள் - லட்சுமிபோல்
மன்னன் கோயிலிருந்தென் தந்தைகோயிற்கு
செங்கையிலோர் விளக்கேந்திச் - சுந்தரமாய்ச்
சேர்ந்திடவுங்கண்டேன்நீஉணர்த்திவிட்டாய் (உணர்த்தி-எழுப்பி)

என்றுசொல் லவும்ஜானகி - தனக்கு
இடது தோளுங்கண்ணுந் துடித்ததாயும்
மன்னனுடன் காடுசெல்கையில் - தனது
மாண்பாம் வலதுதோளே துடித்ததாயும்

சொன்னதைக் கேட்டுத்திரிசடை - என்காதில்
சுவர்ணவண் டொன்றுவந்து ஊதியதால்
மன்னரின் தூதுவரும் - மன்னரும்
மாண்லக்கு மணருமில் விடம்வந்து

மன்னன் ராவணனையும் - மற்றவரையும்
மாய்த்திட்டு உன்னை யழைத்தே போவார்
அன்னை ஜானகியே - நீயும்
அழவேண்டாம் அமர்ந்திரு என்றுமேசொன்னாள்

## அனுமார் அசோகவனம் செல்லல்

இன்னவை யிங்கு நடக்க - அரண்மனையில்
எங்கி யிருந்த அனு மார்மனதினில்
அன்னை ஜானகியாள் - அசோகவனம்
அமர்ந்துளா ளெனச்சம் பாதிசொன்னது

வந்தது ஞாபகத்துக்கு - உடனே
வளமுள்ள அரண்மனை விட்டுநீங்கி
வந்தார் ஓர் நொடியில் - அங்கே
வனப்புள்ள அன்னைஜானகியுங்கண்டார்

அருத்த ராத்திரி யாயிற்று-அப்போது
அரக்கியர் சூழ்ந்துபய முறுத்துகின்றார்
வருத்தம் நிறைந்த வதனத்-தொடுஜானகி
வார்த்தையொன்றுஞ் சொல்லாமற் கவிழ்ந்திருந்தாள்

அன்னை ஜானகியின்-நிலைமையை
அறிந்த வுடனனுமார்க் காக்ரோஷம்
இன்ன விதமென்றில்லை-ஆனாலும்
இப்போ பதஷ்டம்ஏதும் ஆகாதுஎன்று

சற்றே நிதானித்தார்-அனுமார்
தரும்புத்தி கிஞ்சித்துஞ் சிதறாமல்
மற்ற அரக்கரோடு-தன்னையும்
மாய அரக்கனென நினைத்திடுவாள்

அம்மன் பயந்துவிட்டால்-நாம்செய்த
அத்தனை முயற்சிகளும் வீணாகும்
சும்மா சற்றிருப்போம்-மரத்தினில்
சூழரக் கியர்செய் வதைப்பார்த்து (சும்மா)

என்று மறைவாய் அனுமார்-இருக்கையில்
இசைந்தகள் ளிரவில்ரா வணப்பாதகன்
மன்னினான் அசோகவனப்-மேலும்
மாதா ஜானகியின் முன் போய்நின்று

பெண்ணே ஜானகியே-உனக்குப்
புத்திசற் றேனும்இன்னும் வரவில்லை
கண்ணே காதலியே-உன்றன்
கணவன் வருவான்என நினையாதே

வாட்டம் உனக்காமோ-பெண்ணே
வான்இல்லா வேலைஉனைக் கொண்டுவந்தது (வாட்)
தாட்டிகன் யான்என் றறிவாய்-பெண்ணே
சகலமும் என்றன்செங் கோலுக்கடக்கம்

பெரியவன் ஈஸ்வரனே-அவனுக்குப்
பெரிதாய் அலதுசமம் எவருமில்லை
சரியாய்க் கேள்ஜானகி-அவன்வாழும்
தனிக்கயி லங்கிரியைப் பெயர்த்தவன்நான்

நெஞ்சைப் பார்சீதை-அங்கு
நிறைய மாணிக்க மேதென் றறிவாயோ
அஞ்சா நெஞ்சுடனே-யானும்
அஷ்டதிக்குக் கஜங்களை மோதினதால்

தந்தங்கள் என்மார்பில்-தைத்திட
சடசட வென்றவற்றை முறித்துவிட்டேன்
தந்தங்கள் மார்பிலிருந்து-வாராததால்
தகுமாணிக் கம்அவற்றில் கட்டியுள்ளேன்

இந்திரன் முதலானோர்-எனக்கு
ஏவல் பணியாளர் எனஅறிவாய்
அந்தமுள்ள விசிறிகொண்டு-வீசிட
அதிபல வாயுவென் பணியாளன்

இங்கிதமாய்ப் பன்னீர் தெளிக்க-எனக்கு
எழில் சூரிய பகவான் பணியாளன்
எங்கெங் குள்ளவர்களும்-எனக்கு
ஏவல்செய் பவரன்றி வேறல்லர்

தேவர்கள் எல்லோரும்-அதனால்
சேர்த்தீஸ் வரனென்னும் பட்டமதை
காவலன் ராவணேஸ்வரன்-என்று
கனவிந யத்துடன் உச்சரிப்பார்

நானுன்னை விரும்புவது-பெண்ணே
நலமாக நீசெய்த புண்ணியமன்றோ
ஏனுன்றன் கதியறியா-நீயும்
என்னை அலட்சியம் பண்ணுகிறாய்

என்னென்ன மோவிஜயம்-செய்துவரும்
இணையில்லா பலத்துடன் நான்இருந்தும்
கன்னல்வில் மதன்கணையின்-கொடுமையைக்
கடுகள வும்பொறுக்க முடியவில்லை

பெண்ணே இன்னேவா-அன்பு
பெருகி முத்தம் ஒன்று தந்திடுவாய் வா
என்றுரா வணன்சொல்ல-ஜானகி
எதிரில் கிடந்தவோர் துரும்பை நோக்கி

நாசமாங் காலம்உனக்கு-இப்போது
நண்ணிற்றால் இந்தவிப ரீதபுத்தி
ஈசர்க்கு நிகரான-என்நாதரின்
இணையில்லா வல்லமையைச் சொல்வானேன்

ஆனாலு மற்பத் துரும்பே-உனக்கு
அமைந்தவோர் புத்தியைச் சொல்லுகிறேன்
கோனாதும் என்நாதர்முன்-என்னைக்
கொண்டுபோய்ச் சேர்த்தவர் திருப்பாதம்

சரணா கதியாக-வீழ்ந்து
தாழ்ச்சியைப் பொருத்தருள்செய்யுமென்று
தரமாய்க் கெஞ்சிடிலே-பிழைப்பாய்நீ
தாழ்வென நீநினைப் பாயாகில்

வெற்பை யெடுத்த தோளும்-கஜங்களை
வீரமாய்த் தாக்கிய உன்மார்பும்
நற்றவன் போல நித்தப்-வேதங்கள்
நவின்றிடும் உன்றன் புலால்நாவும்

வெற்றி மாலை புனைந்து-விளங்கிடும்
வெறுமைச் சிரங்களாம் ஓர்பத்தும்
அற்பமாம் ஓர்பால்-என்நாயகர்
அறுத்துத் தொலைப்பாரென் றறிந்திடுவாய்

ராவணேஸ் வரனென்னும்-பட்டமும்
ராஜ்ஜியந் தன்னில்உள்ள பொருள்முற்றும்
காவலன் கைவில்லின்-ஓர்பால்
கழிந்து தொலைந்திடுமென் றறிந்திடுவாய்

என்று ஜானகி சொல்ல-ராவணன்
ஈரேழ் பதினொன்று லோகமெங்கும்
கன்றியே பேசியவர்-என்முன்பில்
கணப்பொழு தாகிலு முயிர் தரியார்

ஆனாலும் உன்பேரிலாம்-காதலால்
ஆற்றிய மாற்றங்கள் க்ஷமித்துக் கொண்டேன்
காணாள் உன் கணவன்-இலங்கைக்கு
கடல்தாண்டி வந்துன்னை மீட்டிடுவனோ

பெண்ணே நீயுன்றன்-பேதமையால்
பிதற்றுகிறாய்இந்த வார்த்தைகளை
இன்னும் பதினைந்துநாள்-கெடுவுக்குள்
எனக்குச் சரியேனேல் உயிர் துறப்பாய்

என்று ராவணன் சொல்லி-சூழவே
இருந்த அரக்கியரை எச்சரித்து
தன்னந் தனியாக-நள்ளிரவில்
தன்னரண் மனையே போய்ச்சேர்ந்தான்

## அனுமான் ஜானகிக்குத் தான் தூதன் எனக்காட்டல்

அரக்கியர் தூங்கிவிட்டார்-ஜானகி
அருமையாம் நாயகனை நினைத்தழுது
வரப்போகிறாரோ மன்னன்-இவ்விடம்
வந்தாலும் மனையாளெனைக் கொள்வாரோ

தன்னாலே தான்கெட்டேன்-நாயகர்
தடுத்துச் சொல்லியும்மானை நான்கேட்டேன்
மன்னரை வெல்பவரார்-எனச்சொன்ன
மன்னன் லக்குமணரைநான் உறுத்தோட்டினேன்

இன்னமும் உயிர்வைத்து-யானும்
இருப்பதில் ஏதேனும் பயன் இல்லை
என்று அழுது புலம்பி-ஜானகி
இசைவாமோ ரசோகந்தி னருகுசென்று

சடையைக் கயிருய்மாட்டி-ஜானகி
சாம்படிச் சுருக்கிவிடப் போகும்சமயம்
அடைவா யனுமாரும்-மாமிருந்து
அழகாய் ராம்ராம் ராமென்றார்

தட்சணம் ராமாருள்-போற்றவும்
தருமவர் பிரதாபம் சொல்லி யேற்றவும்
மட்டற்ற ஆச்சரியம்-ஜானகிக்கு
மகிழ்ச்சியும் ஓர்விதமாய் உண்டாகி

எதிது வெகு புதுமை-இங்கு
ஏது நரஜென்மமுங் கிடையாது
பாதி ராத்திரி வேளை-இங்கு
பார்த்திபன் புகழ்சொல்லி யேற்றுவதார்

என்று உயரப் பார்த்தாள்-மாத்தினில்
எழிலாக ஆஞ்சநேயர் இருக்கக்கண்டு
என்னைக் கெடுப்பதற்காய்-ராவணன்
இன்னுஞ்செய் சூத்திரம் ஈதோவென்று

அஞ்சி யொடுங்கிடவும்-அப்போது
அனுமந்தர் ராமரின் சரிதைமுற்றும்
எஞ்சிய அடையாளங்கள்-யாவையும்
இதமாகச் சொன்னதைநான் விளம்புகிறேன்

அனுமான் ஜானகிக்குச் சொன்ன ராமரின் அடையாளம்

நிறமோ குவளைபவளம்-பெருமான்
நீள்கரம் கரிக்கரம் ‡முழந்தாட்கீழ்
திறமாய் நீள்வதற்கு-ஏதேனும்
செப்பும் ஒப்பனையாவ தொன்றில்லை

நகங்கட்கு வச்சிரமும்-ஒவ்வாது
நல்லுந்தி மகிழம்பூ நீர்ச்சுழியாம்

‡முழங்காலுக்குக்கீழாக நீண்டவை

முகங் கமலத்தை யொக்கும்-அதனை
முழுமதி களங்கத்தால் ஒவ்வாது
கால்கள் கரிக்கரங்கள்-கனபுஜங்கள்
கனத்த மலைகளுக்கும் மேலேயென்னலாம்
பால் முத்து முளை முருந்து-பற்களாம் (முருந்து-மயிற்பீலி)
பவளவாய் இந்த்ரநீலம் மாந்தளிர்மேனி

முக்†கோதி ‡கோபத்தையுற்றல்-முன்புருவம்
மூதரக்கர் தொலைக்குங்கை வில்கோதண்டம்
மீக்குயர் நெற்றிக் கொப்பனை-எட்டாம்நாள்
மீன்சூழ் சோமன்களங்க மின்றேல்சொல்லலாம்

என்றிந்த அடையாளங்கள்—சொற்றபின்
எழிலா யனுமார்சொன்ன குறிப்புகளை
நன்னலமாய்ச் சொல்லுகிறேன்-ரகுநாதர்
நகர்நீங்கிக் காடுசெல்லும் விஷயமதை

தகுதியாய் இதமாய்ச் சொல்லி—ஜானகியை
தன்தா யிடமிருக்கச் சொன்னபொழுது
உகும்உயிர் உடல்விட்டு-என்நாதா
உடன்செல்வேன் என்றுடுத்த தோடேநின்றது

நீணகர் தன்னை விடுத்து-நகரின்
நெடுவெயில் வாயிலை அடைந்தவுடன் (எயில்—கோட்டை)
காணமுன் இருப்பதுவோ-அல்லது
கடும்வனம் எங்குளது என்றதுவும்

## கணையாழியைப் படைத்தல்

ஆன குறிப்புகள் சொல்லி-அனுமார்
அதுதகும் வேளையென்று கருத்துட்கொண்டு
மானவா பரணன்கையில்-தரித்திருந்த
மதிப்பிற் கணையாழியைக் கையிற்படைத்தார்

கண்களில் ஒற்றிக்கொண்டாள்-ஜானகி
கணையாழி யைப்பல தரமாக (கண்)
அண்ணல் லக்குமரின்-க்ஷேமத்தை
அதிக மான ஆவலாய்க் கேட்டதின்பின்னர்

உன்பெயர் என்ன என்றும்-நீயும்
ஒருவ னாகத்தான் இங்கு வந்ததோஎன்றும்
தண்கடல் கடந்ததுவும்—எனக்குச்
சரியாகச் சடுதியிற் சொல்லுவதோடு

---

†ஓதி—ஓணன். ‡கோபம்—வெற்றிலைத்தம்பலம்

என்னைப் பிரிந்த பின்னர்-இருவரும்
என்செய்தார்கள் எங்குச்சென் றார்கள்என்றும்
அன்னவ செய்தி யெல்லாம்-தூதா
அனுத்தவ றாதெனக்குச் சொல்லுவாய்என்றாள்

அன்னையுன்னைப் பிரிந்த பின்னர்-இருவரும்
அரக்கன் ராவணன்உனைக் கவர்ந்துதேரில்
தென்திசை செல்கிறான்என்று-ஜடாயு
தெளிவாய் விளம்பியபின் உயிர்நீத்தார்

அவர்க்கும் வீரசொர்க்கம்-அளித்தபின்
அந்தமிற் கபந்தன்வதை செய்ததுவும்
அவன்தெரி வித்தமூலம்-ரிஷிமுகத்தில்
அழகிய சுக்ரீவர் நட்புக்கொண்டதும்

கிட்கிந்தை மன்னன்வாலியை-வதைத்தபின்
கிரீடம் சுக்ரீவர்க்குத் தரிப்பித்ததும்
மட்டற்ற மழைகாலம்-கழிந்தபின்னர்
மன்னர்சொல் மேலனையைத் தேடிச்சென்றதும்

தெற்கே சென்றவரில்-ஜாம்புவான்
திறமாக யெனக்குப்பூர் வீகநினைப்பை
விற்பனமாய் ஊட்டினதும்-சம்பாதி
விரைவில் அசோகவனம் அன்னை கண்டதும்

தன்பெயர் ஹனுமானென்றும்-கடலைத்
தாண்டிய விதம்காட்டற்குப் பயம்ஒன்றின்றி
அன்னை அனு மதிவேண்டும்-தனக்கு
அகண்டா காரவிஸ்வ ரூபம்உண்டென்றும்

அணுவுந் தவறாமல்-அன்னைக்கு
ஆக்தனையுஞ் சொன்னதின்பின் உத்தரவின்மேல்
மணுவினும் அடங்காமல்-அனுமார்
மாட்சியுறு விஸ்வரூபம் காட்சியாகிட

ஜானகியாள் பிரமித்து-அனுமனிடம்
தன்சொரூபம் திரும்பக் கொள்களனவும்
ஆன பழைய குரங்காய்-அனுமார்
அனைத்துஞ் சுருக்கிக்கொண்டு அமர்ந்தபோது

ஜானகியாள் அழுதுகொண்டு-என்னை
தருமனை யில்என்நாதர் நினைத்திடினும்
வானபானு குலத்துக்குற்ற-நிந்தனையை
வல்லரக்கனைத்தொலைத்து நீக்குகவென்றும்

துணையாய் எனக்கு இருந்த-இளையவர்க்கே
சூழ்ந்தநிந் தனைநீக்கக் கடன்என்றும்
இணையில்என் மாமியர்க்கு-எளியேன்
இணைபாதம் தொழுததாய்ச் சொல்என்றும்

என்தந்தை தாய்உற்றுரை-எளியேன்
இறைஞ்சித் தொழுததாய்ச் சொல்என்றும்
மன்னர்க் கதிகத்துயரம்-தம்பியின்
மனத்துயர் நீக்கநகர் போகவேண்டும்

அன்னையர் துயர்நீக்க-அய்யோத்தி
அடைவாகச் சுகமாய்ப்போய்ச் சேரவேண்டும்
என்னை நினைப்பதற்கு-எளியாள்
என்னதவம் செய்துநான் இருக்கின்றேன்

மன்னனை அய்யோத்திக்கு-அனுமாரே
மகிழ்வாய் அழைத்துச்சென் றெல்லாருங்கூடி
நன்னலமாய்க் கிரீடஞ்சூட்டி-அய்யோத்தி
நகரை வளப்படுத்தச் செய்குவாயென்றும்

பதினான்கு வருஷம்சென்று-யானும்
பண்பாய் வருவேன்என்ற செம்மொழியை
பதிபதி தவறுமற்-குடிகளுக்கு
பார்த்திபர் வார்த்தையாய்க் காப்பாற்றவேண்டும்

ஆனாலும் ஒருதிங்களில்-நாயகர்
அன்பாக வந்தென்சிறை மீட்டிலரேல்
வானூர் கங்கைக் கரையில்-நீர்க்கடன்
வனப்பாய்ச் செயச்சொல்லிங்கு வரவேண்டாம்

யானுஞ்சில் அடையாளம்-ஜானகி
யானேயே கண்டதற்கு அறிகுறியாய்
கோனுக்குச் சொல்வதற்கு-அனுமந்தா
குறிப்பாகச் சொல்லுகிறேன் சிந்தையிற்கொள்வாய்.

ஜானகி அனுமானிடம் சொல்லியனுப்பிய அடையாளங்கள்

மன்னனும் யானுமாக-தனித்து
மாவளச்சித் திரகூட மலையிருக்க
மன்னன்என் மடிமேற்சிரம்-வைத்துமே
மகிழ்வாகப் படுத்திருக் கின்றகாலை

காகா சுரன்கண்டு-ஏதோ
கனியென்றென் ஸ்தனம்நோக்கிக் கொத்தவருங்கால்
வாகா யருகம்புல் லொன்றை-கணையாக்கி
வர்மித்தவன் மேல்நாதர் விட்டுவிடவும்

ஈரேழ் பதினான்கு-உலகமும்
ஏற்ற அபயம்ஒன்றுங் கிடையாமல்
நேரே என்நாதர் கால்களில்-வீழவும்
நினைப்புக்கோர் பார்வைநீத்த தடையாளம்

என்னையே ரகுநாதர்-கைபிடித்த
எழிற்சுய வரக்கொலு மண்டபந்தன்னில்
என்னையே அன்றிவேறே-ஸ்திரீமுகமும்
என்றும்பார்க் கிலேனென்ற தடையாளம்

கிள்ளையா னென்றுவளர்த்து-அதற்கு
கேண்மையாய் யாதுபே ரிடவென்ன
எள்ளருஞ் சிற்றன்னை-கைகேயியின்
எழிற்பே ரிடுவென்றதோர் அடையாளம்

மானவா பரணன்கொண்டு-கொண்டதால்
மாசிரஞ் சீவியாக இருப்பாயென்றும்
தானணி துகிலினிலே-உயிர்போலத்
தருபத் திரமாகக் கட்டியிருந்த

சூடாமணி கையிற் கொடுத்து-மன்னரும்
சொற்றபடி வரேனுயிர்க் கனர்த்தமென்றும்
வாடா முகத்தினோடு-ஜானகி
வரம்பில் ஆசிகள் சொல்லி அனுப்பும்போது

இன்னு மிங்கோர் நாளிருந்து-அன்னையே
இதமாங் கனிகள் வயிறார உண்டு
பின்னர்ச் செல உத்தரவு-கேட்டிடவும்
பின்னமில்லா தப்படியே ஆகுக வென்றாள்—தெங்

## அனுமார் அசோகவனத்தை அழித்தல்

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

ஜானகியை யசோகவனத் துன்முகா மரக்கியரின் நாப்பண்கண்டும்
தன்வரவு வேறொருவ ரறியாவண்ணம்
மாணறிவாற் றன்றாது முழுவதையும் மகிழ்விக்கக் குறிப்பாய்ச்சொல்லி
மற்றைநாள் அவ்விடத்தி லிருந்தும்பின்னர்
தானகல வேண்டுமென்றுந் தக்கபெருஞ் சிரஞ்சீவ வரமும்பெற்றுத்
தன்வலியை ராவணிக்குத் தகவாய்க்காட்ட
வானமுறுந் தருவினை வலிகொண்டு அழிக்குங்கா லரக்கன் சேய்தான்
வன்பிரமாஸ் திரங்கொண்டு கட்டல்சொல்வாம்

### நொண்டிச்சிந்து

அன்னை அனுமதிமேல்-அனுமார்
அடுத்தநா ளிலங்கையில் தங்கியிருந்து

தன்பலம் காட்டிடவும்-அனுமார்
தக்கதோர் உபாயஞ்செய்ய நிர்ணயித்து

அந்தமுள்ள அசோகவனம்-அழித்திட
ஆரம்பிக்கும் போதங்குள்ள காவற்கிங்கரர்
வந்தனர் அமர் செய்ய-அவர்களை
வதைத்திடத் தப்பிய சிலபேர்கள்

ராவண னிடம்சென்று-சொல்லவும்
ராக்கதரிற் சம்புமாலி தன்னையழைத்து
தாவிச்செல் அசோகவனம்-என்னவும்
தட்சணமே சென்றசம்பு மாலிமரணம்

ராவணன் கேட்டவுடனே-ஓர்சேனை
ராஜ்ஜியத்தின் மந்த்ரிபிர தானியின்மக்கள்
காவலன்றன் மகன்அட்சயன்-சேனாதிபதி
களிலைந்து பேர்களோடு அனுப்பிவைத்தான்

அவர்களை யுங்கொன்றார்-ராவணன்
அந்தச் செய்தியைக் காதிற் கேட்டிடவும்
தவஞ்செய்து பிறந்தமகன்-இந்த்ராஜித்தை
தகுதியாஞ் சேனையோடு அனுப்பிடவும்

பிரம்மாஸ் திரங்கொண்டு-இந்த்ராஜித்து
பிடித்தா னனுமாரை ஓர்முகூர்த்தம்
கரங்கால் கட்டுப்பட-அனுமார்க்கு
காரண மானஓர் சாபம் உண்டால்

இதுவுமோர் நல்லசமயம்-ராவணன்
எதிரில்நம் பலந்தன்னைக் காட்டுவதற்கு (இது)
கதுப்புக் கொழுப்புகள் எல்லாம்-தன்பலம்
கண்டவுடன் நாசமென் றனுமார்நினைத்தார்

இழுத்திட்ட படியெல்லாம்-ஆடியாடி
இராவணன் முன்பினிற் போய்ச்சேர்ந்தார்
கழுத்தில் தலைபத்துடன்-இராவணனின்
கர்வம்கங் காரமெல்லாம் கண்டுகொண்டார்

கோனரக்கன் குரங்கினிடம்-பேசினால்
குறையுந்தன் மதிப்பென்று கர்வங்கொண்டு
ஆனபிர தானிமந்த்ரிகள்-மூலமாய்
அநேக கேள்விகளனு மாரிடம்கேட்க

அதற்கொன்றுஞ் சொல்லாமல்-அனுமார்
அழகிய தன்வாலை ஆசனமாக்கி

# ஸ்ரீமத் இராமாயணச் சிந்து.

மதம்வெளித் தோற்றும்படி-ராவணன்
மாலைபுனை சிரங்கள் தாழ இருந்தார்

வாய்திறந் தாக்கன்யாரென-அனுமார்
வாயில்வந்த படியெல்லாம் அவனைவைது
தாய்சீதை யைக்கவர்ந்த-திருட்டாக்கன்
சாம்ராஜ் ஜியமெல்லாந் தொலைக்கவந்த

மராமரம் ஏழோர் அம்பினால்-தொளைத்து
மாண்பல வாலியைஓர் அம்பால் தொலைத்த
இராமரின் தூதுவன் யான்-என்பெயர்
இணையில்லா பலம்மிகு ஆஞ்சனேயர்

ராட்சதப் பதரேயுன்-விளங்கிடும்
ராஜ்ஜியமும் ராவணேஸ் வரன்பட்டமும்
ஆட்சே பனையின்றி-அழிப்பன்யான்
அதற்குமுன் யானுங்கண் அயர்வதில்லை

என்று அனுமார் தூஷிக்க-ராவணன்
இந்தக் குரங்கைச்சும்மா விடக்கூடாது
கொன்று விடுங்கள்என்று-ராவணன்
குறித்த சிலர்க்காஞ்ஞா பித்தபோது

கும்பகர் ணனுக்கிளையோன்-ராவணன்
கூடப் பிறந்தவிபீ ஷணனென்பவர்
வம்பாக் கியின்வயிற்றில்-பிறந்ததன்றி
வம்பேது மில்லாத மகாஉத்தமர்

சாட்சாத் பஹவத்பக்தி-மார்க்கத்தில்
சற்றேனும் விலகாத புருஷோத்தமர்
மாட்சியுள்ள தர்மச்செயல்-செய்வதில்
மகிழ்வாய் மனம்பொருந்தும் மகாஉத்தமர்

அரக்கர்கோன் ராவணனுக்கு-இவரும்
அனேக வேதநீதிகள் எடுத்தோதியும்
பரஸ்திரீகள் கமனமாகா-தென்றும்
பத்தினி சீதையை இன்னே விட்டுவிடென்றும்

அடிக்கடி சொல்லிவருவார்-இப்போது
அனுமன் தனைக்கொல்லென்று ஆக்ஞாபிக்கவும்
இடியுண்ட அரவுபோலே-விபீஷணர்
இந்த இலங்கைக்கிதென் அனர்த்தகாலம்

என்று மனதில் வருந்தி-விபீஷணர்
இராவண னிடம் சென்று தூதுவனை

கொன்றிடல் நீதியன்று-என்றும்
கோபிக்கேல் தண்டித்தே அனுப்புமென்றும்
கெஞ்சியே கேட்டதின் மேல்-ராவணன்
கெர்வ மாகத்தனக்கு முன்பாக
மிஞ்சிய ஆசனமாய்-அமைத்த
மிகைபெறும் வாலைக் கொழுத்தவென்றான்

## அனுமான் இலங்கையைக் கொழுத்தல்

கந்தைத் துணிகள்எங்கும்-இல்லாமல்
கணக்கில்லா அரக்கர்கள் கொண்டுவந்து
பந்தம்போற் சுற்றச்சுற்ற-அனுமாரின்
பாதி வாலுக்குக்கூடப் போதாமல்

அந்த அளவில் எண்ணெயில்-தோய்த்து
அதிக மகிழ்ச்சியுடன் தீயூட்டினார்
பந்தம்போல் வால்பிடிக்க-அனுமாரைப்
படர்ந்த தெருநெடுக இழுத்தார்கள்
சிந்தையில் ஜானகியின்-அருளையும்
ஸ்ரீராமர் மட்டற்ற கருணையையும்
வந்தித்துப் பெற்றதுடன்-அக்கினியின்
வாதையில் அருளுக்காய்த் தியானம்செய்தார்
அக்கினி வாயுவின் நண்பர்-அனுமாரும்
அதிபல வாயுவின் மகனல்லவா
தக்க நண்பர்கள் இயல்பும்-இடையில்
தளர்ந்த ஆடைதாங்கும் கைபோலாமால்
பொக்கென அருள்செய்தார்-அக்கினியும்
புலால்தின்னும் அரக்கர்கள் வைத்ததீயும்
பக்கம்உள்ளார் விழுவர் என்று-தோண்டிய
படுகுழி யிற்றானே விழுவதுபோல்
தண்ணென் றிருந்ததனால்-அனுமாரும்
தக்கபடி வாலைஅங்கும் இங்கும்ஆட்டி
மண்டிடும் நெருப்புப்பற்ற-வைத்திட்டார்
மாட்சியுறு மாடகூட கோபுரங்களில்
அக்கினியிற் பட்டஅரக்கர்-அனேகராம்
அகப்படா தோடிப்பிழைத் தவர்அனேகர்
சக்கிமுக்கி ராவினாற்போல்-இலங்கையைச்
சணப்பொழு திலனுமார் கரியாக்கினார்
ஆட்டின வர்களெங்கே-அனுமார்முன்
அதிகமாய்ப் பல்லிழித்து ஆடினரெங்கே

வீட்டிலுள்ள கந்தைகள் எல்லாம்-சேர்த்துக்கொண்டு
வெருசிக் கிரப்கொழுத்தச் சொன்னவர்எங்கே

ஆடை உலைக்குமேகோடு-அனுமாரின்
ஆட்டம்பார்க்க வந்தபெண்கள் பிள்ளைகள்எங்கே
மேடையில் நின்று கொண்டு-ஆட்டம்பார்க்க
மெதுவாய்க் கொண்டுபோவென்று சொன்னவரெங்கே

ஒருவரும் அனுமாரிடம்-இல்லாமல்
ஓட்டம் பிடித்திடவும் ஊரெல்லாம்
பெருமூட்ட மாகமூள-அங்கிருந்து
பெயர்ந்தார் அசோகவனம் ஜானகியிடம்

தண்டம் சமர்ப்பித்தார்-அனுமார்
சங்கதிகள் பூருவா யன்னைக்குவிண்டார்
கொண்டார் அனுமதியும்-வால்நனைத்துக்
குதித்து ஒரேக்ஷணத்தில் இக்கரைவந்தார்—தெங்

வானரர் காத்திருந்தார்-கடற்கரையில்
வனப்பாய் அனுமார்அவர் முன்ஆடி
ஜானகியைக் கண்டேன்நான்-என்றன்
சகலபா வங்களுமேஅகன்றதென்றார்

வானரர் சூழ்ந்துகொண்டு-அனுமாருடன்
வரம்பில் மகிழ்ச்சியுடன் ஆடிவந்திட
ஜானகியைக் கண்டான் போலும்-எனநினைத்து
சத்தத்தைக் கேட்டுச்சுக் கிரீவர்வந்தார்

சுக்ரீ வரைப்பணிந்து-அனுமார்
சுகமாக ஜானகியைக் கண்டதுவும்
தக்க சூடாமணியை-அம்மனிடம்
தகவுடன் கையினிற் கொண்டதுவும்

காவல் அரக்கிகளையும்-அரக்கரையும்
கணத்தில் தொலைத்திலங்கை சுட்டதுவும்
ஆவலாய்க் கேட்டிருக்கும்-சுக்ரீவர்க்கு
அணுவும் விடாதனுமார் சொல்லிநின்றார்

எல்லாரும் புறப்பட்டனர்-ராமரிடம்
இணையில்லா ஆடல்பாடல் செய்துகொண்டு
பல்விதக் கூச்சல்கேட்டு-ராமரும்
பார்ப்பதற் காய்வந்து நின்றார்அன்னே

கண்டேன் அம்மனைநான்-என்றும்
கனக சூடாமணியைக் கொண்டேனென்றும்

அண்ணலின் பாதங்களில்-அனுமார்
அழகாம் சூடாமணியைப் படைத்துநிற்க
ஐயன் சோர்ந்துவிட்டார்-அந்த
அழகாம் சூடாமணியைக்கண்டவுடனே
கையினாற்சுக் ரீவர்தாங்க-லக்குமரும்
கடுகித் தேற்றல்செய்யத் தெளிந்தபின்னர்

மன்னிய காவலரக்கர்-அரக்கியர்
மாண்டதும் இலங்கை தீப்பட்டதுவும்
இன்னமும் ஒருதிங்களில்-அம்மனை
எழுப்பிடேல் உயிர்இரா தென்றார் என்றார்

## சேதுபந்தனம்

தட்சணம் புறப்பட்டனர்-ராமரும்
தகுந்த வானரச்சேனைச் சுக்ரீவரும்
முட்டினர் தெற்குக்கடலின்-கரைவந்து
முழுச்சேனை யுங்கடலைத் தாண்டவேண்டுமால்

சமுத்திர ராஜனுக்கு-ராமர்
தகுதியாம் வேண்டுதல் செய்தபின்னும்
அமுது கடைந்தெடுத்தவர்-இவரொன்று
அணுவும் நினைக்காமற் சும்மாயிருக்க

விட்டனர் சரம் மாரியாய்-அப்போது
வேலை கொதித்துப்பொங்கித் தத்தளிக்க
கெட்டேன் மதிகெட்டேன்-என்றலறிக்
கெர்வம் நீங்கிக்கடல் ராஜன்வந்து

குறுக்கே அணை கட்டவும்-சிரமேற்
கொண்டு அதனைத்தாங்கிக் கொள்வதாகவும்
மறுயோஜனை வேண்டாம்-எனவும்
மனமகிழ் வாய்ராமர்க்குச் சொல்லிவிடவும்

சேது பந்தனம் செய்யச்-சேனையில்
சேர்ந்தவ ரொருவரும் பாக்கியின்றி
மாது சீதையை மீட்டப்-பொருள்களை
மகிழ்ச்சியாய்க் கொண்டுவந்து சேர்த்திடவும்

விச்சுவ கர்மாவின்-அம்சமாய்
விளங்கிடும் நளன்என்னும் வானரமே
கெச்சித மான அணையைத்-துரிதமாய்க்
கட்டிவந்து முடித்துக் கொண்டிருக்கின்றான்

இந்தச் சமயத்தில்-இலங்கையில்
இராவண னோர் மந்திரங்கூட்டி

சொந்தமா யுற்றோரை-வருவித்துத்
தோற்றுவ துரைமின்என இவைசொற்றான்

குரங்கொன் றிவ்விடம்வந்து-எழில்நகரைக்
கொளுத்தி யழித்துத் தப்பிப்போன விஷயம்
அரன் கயிலையை யெடுத்த-எனக்கு
அச்சங் கொடுப்பதினால் யோஜனைசொல்மின்

எழில்நகர் மயனருளால்-முன்னிலும்
எழுமடங் கணிபெற அமைந்ததன்றோ
கழிவுற அவனின்றேல்-மயானத்தின்
கடுந்துகட் சாம்பலா யின்றுமிருக்கும்

இனியென் செய்வது என்று-எனக்கு
இதமா யுங்கள்மனத்துள் ளாராய்ந்து
தனித்தனி உங்கள்நினைவை-இப்போதே
தகுதியாய்ச் சொல்லுங்கள் என்றுசொல்லவும்

சேனாதி பன்மகோதரன்-வச்சிரதந்தன்
செங்கட் டுன்முகன்பெரும் பக்கன்பிசாசன்
வானாகும் பானுகோபன்-யஞ்ஞவிரோதன்
வாட்டுமி ராட்சன்கும்ப கர்ணனிந்திரஜித்

ஆன அரக்க ரெல்லாம்-அதிகோபம்
ஆக உரக்கப்பேசி அக்கரை சென்று
வானர ரோடுநரரை-வதைத்தலே
வாளரக் கரின்முறை யாகுமென்றனர்

தம்பி வீடணனும் என்பவர்-எழுந்து
தாள்வ ணங்கிமுனி யேலென்றமர்த்தி
நம்பிஇந் திரஜித்துப்-சிறுவனால்
நவில்கிற விகதமொழி தெரியாமல்

உன்னைப்போற் கற்றறிந்திலேன்-மற்றும்
உற்ற பொருள்களோ டிவை உணர்ந்துமிலலேன்
மன்னிய மந்திரத்துக்கு-மாறாக
மன்னினுங் கடைசிவரை கேட்டுமுனிதி

இந்த இலங்கை முழுதும்-எரிபட
இயற்றி யதுவானர மென்றுநினையேல்
அந்தமுள்ள ஜானகியின்-கற்புத்தீயே
அழன்று கொளுத்தினதென் றறிந்திடுவாய்

பெண்ணாலும் மண்ணாலும்-அல்லாமற்
பேருலக [illegible]

அண்டிடும் என்றுநினையேல்-உன்சீர்த்தி
அழிந்த தின்றோடேஒரு நாமங்கையால்
தவஞ்செய்து வரங்கேட்டாய்-அப்போது
தக்கவர் நார்இல்லென்று தப்பவிடுத்தாய்
அவதி அந்நார் மூலமாய்-ஏற்படவென்றே
அந்தநார் உன்றன்வாயில் வரவில்லை

அரன் கயிலை யெடுத்தநாள்-அங்குள்ள
அழகாம் நந்தியார்சொன்ன பிரகாரம்
மாமேறுங் குரங்கால் நைவாய்-என்றது
மகாபல வாலிமூலம் அறிந்திலையோ

முன்னோ ளுன்னைச்சபித்த-அரம்பைசொற்போல்
மோகத்தாற் சிறைவைத்த சீதையென்பவள்
உன்னுயிர் வாங்கிடவே-பெண்ணாக
உதித்தனள் என்றுநீ அறிந்திலையோ

சம்பரனைமுன்னாட்-கொன்று
சகல வானவர்கட்கு மாசளித்த
உம்பரின் மேலாய-தசரதரின்
உரிமை மக்கள் நாரென் றறியாயோ

விராதன் கபந்தன் தூஷணன்-கான்வாலி
வீழ்த்தவ ரிவரெனநீ அறிகிலையோ
மராமர மேழோரம்பினால்-துளைத்திட்ட
மாவீரன் இவரெனநீ யறிகிலையோ

முன்னோ ரவதாரத்தில்-உன்னைப்போலாண்ட
முதிர்பல ஆடகனை நரசிங்கமாய்க்
கொன்றவன் மகனான-பிரகலாதன்
கொற்றவனாகச்செய்தது அறிந்திலையோ

என்றிவை வீடணன் சொல்ல-இராவணன்
எழிலிபோற் கர்ச்சித்து என்னிடத்தில்நீ
புன்னரப் பூச்சிகளைப்-பூகிக்கும்வகை
போற்றிச்சொன்ன நீயென்முன் நில்லாதேயென

## விபீஷணன் ராமரைக்காணச்செல்லல்

வேதத்தின் நீதி மார்க்கமும்-மற்றும்
வேண்டும் பக்தச்செயலின் மார்க்கங்களும்
ஆதரவாய்ச் சொல்லியும்-இவன்கேளான்
ஆதலால் இங்கிருக்கக் கூடாதென்று
மந்திரி மார்களுடன்-விபீஷணர்
மனங்கன்றிப் புறப்பட்டுக் ககனமார்க்கம்

வந்தார் சேதுஸ்தலம்-ராமரின்
வனப்புள்ள சேவடிகள் காண்பதற்கு

விடயங்கள் யாவுஞ்சொல்லி-விபீஷணர்
வேண்டும் அபயமெனச் சொல்லியனுப்ப
மடத்தனம் ஆகுஞ்செய்கை-சேர்த்திடல்
மட்டில்லாக் கேடுகள் வந்துசேரும்

ராவணன் தம்பியிவன்-நம்முடைய
நலம்பொலம் பார்ப்பதற்குத் தூதுவனாய்
ஆவலாய் வந்தவன்தான்-ஆதலால்
அண்டிட அனுமதி கொடுத்தல் குற்றம்

என்று வானரரெல்லாம்-ஏகமாய்
எடுத்தெடுத் துச்சொல்லும்போ தனுமார்வந்து
மன்னிஞர் அரக்கர்குலம்-முன்கர்மம்
மருவிய காரணமாய் நினைக்கின்றேன்

இன்னவர் போல உத்தமர்-அந்த
இலங்கை முழுவதிலுங் கிடையாது
தன்மனை வியைமகளை-அம்மனுக்குத்
தகுந்துணை யாகவும் அனுப்பியுள்ளார்

திரிச்சடை மகள்பெயராம்-அவள்தான்
தேறுதல் அம்மனுக்குச் சொல்லுகின்றாள்
பரிவுடன் அம்மனையே-அன்னையாய்ப்
பாவிப் பவர்பஹவத் பக்தியுள்ளவர்

இவர்சொல்வ தெல்லாம் உறுதி-என்றுமே
இங்கித மாய்அனுமார் சொல்லிடவும்
அவலமுற் றடைக்கலமாய்-வந்தவரை
ஆதரிப்பமே கோன்பால் வருகஎன்ன

உத்தர வளித்தார்ராமர்-முதலில்
உதவா தென்றுவானரர் சொல்லும்போது
மெத்தவியா குலப்பட்ட-விபீஷணர்
மேன்மையாய் அனுமார்சொல்ல ராமர்விண்டதை

கேட்டிட்ட விபீஷணரும்-உடனே
கிடைத்தது பெரும்பேறு என்றுமகிழ்ந்து
வாட்டமில் முகத்தினோடு-வானரர்
வந்தழைக்க ஆடித்திருப டாதத்தண்டினார்

விண்டனர் விபீஷணரும்-இலங்கையில்
வீணிரா வணன்எண்ணம் அம்மன் செய்திகள்

தொண்டன் அனுமந்தன் செய்கைகள்-யாவையும்
துரும்பத் தனைவிடாமற் சொல்லித்தீர்ந்தபின்

தான்கொண்ட கொள்கையினை-வானரர்க்குத்
தக்கபடி தெரிவித்தற் கறிகுறியாய்
யான்இலங் கையைஇன் று-தத்தஞ்செய்தேன்
எனவிபீ ஷணர்கையில் ராமர்நீரிட்டார்

இதுகண்ட வானரர்கள்-ராமரால்
இன்றைக்கே ராவணன் தொலைந்தானென்றும்
இதுதான் உறுதியென்றும்-எல்லாரும்
ஏகமாய் ஆர்ப்பரித்தே ஆடினார்கள்

முடிந்தது அணைவேலையும்-ராமரின்
முன்வந் தருள்பெற வானரர்நின்றார்
நொடியினில் அக்கரைபோங்கள்-எனவே
நோக்கம்போலே நீந்திப்பாய்ந்தக் கரைசேர்ந்தனர்

சிறுதிரு வடியாம்படி-ராமரும்
சிரேஷ்டின்ற அனுமாரின் தோளே யிருந்தும்
மறுவில் அங்கதன் தோள்மேல்—லக்ஷ்மணரும்
மகிழ்வா யிலங்கைக்கரை போய்ச்சேர்ந்தார்

போன வுடனே வானரர்-எல்லோரும்
போற்றியே இன்னேயுத்தம் செய்யவேண்டும்
மானவா பரனேஎன்ன-ராமரும்
மட்டில்லாமல அவசரப் படவேண்டாம்நீர்

பதறும் காரியமே-என்றும்
பக்குவ மாகமுடியும் சிதறுமென்று
இகமான மாறுவேஷம்-தரித்தே
இவ்விடம் நடப்பெல்லாம் அறிந்துவர

அரக்கன் அனுப்பிவைத்த-தூதர்கள்
அரக்கசா ரணசுக ரைக்கூவி
அரக்கர்கோ னிடஞ்சென்று-எனக்கு
அமர்செய்யச் சற்றும் மனமில்லைஎன்றும்

சீதையைக் கொண்டுவந்து-விட்டுவிட்டால்
திரும்பியே நாங்கள் போய் விடுவமென்றும்
வாதைப்பட் டழியவேண்டாம்-இல்லையேல்
வளநகர் அரக்கர்போர் குன்றுமென்றும்

சொல்லி யனுப்பிவைக்க-அவர்கள்
சொன்னபடி தேனுஞ்சண்டை செய்யாமல்

புல்லாய் நினைக்கின்றேன்-இந்தப்
புன்னரப் பூச்சிலையென் றிறுமாந்தான்
சங்கதி கேட்டபின்னர்-ராவணன்
தனதுப் பரிகைமேல் ஏறிநின்று
பொங்குகடற் கரைபார்க்க-அங்கே
புலனு மிடமெங்கும்வா னரச் சேனையாய்
கண்டான் அவர் கோஷ்டி-முழங்கும்
கடற்கோஷ டிக்குமிஞ்சி யிருந்ததினால்
எண்ணினன் மனதினுள்ளே-ராவணன்
இந்தநரர் இலங்கை வரமாட்டார்
என்றுநினைத் ததுவீணே-இவர்களும்
இவ்வளவாய் வந்துசும்மா திரும்பமாட்டார்
மன்னிய போர் நேரும்-அதிலே
மகிழ் ஜயம் அபஜெயம் யாரறிவார்
குலத்துக்குக் காவலன்ராமன்-என்று
குருக்கள் முதலியோர்முன் சொன்னதுமுண்டு
பலம்மிகும் என்மாமன்-ராமனென்று
பகரவும் உடல்நடுங் கிடவில்லையா
அவனும் ஓர்பாணம்-பட்டவுடன்
ஆவிதுறந் திவ்வுலகம் விடவில்லையா
அவமானம் பூச்சிபோலென்னை-வாலிற்கட்டி
ஆட்டின வாலியையிவன் கொல்லவில்லையா

ராமரின் பொய்ச்சிரசால் ராவணன் ஜானகியை ஏமாற்ற முயலல்

சண்டை துவங்கும் முன்னரே-ஒருபாயம்
சரியாகச் செய்துபார்த் திடுவேன்என்று
நண்பன்வித் யுஜிஹவனைக்-கொண்டுமே
நலமாய் இராமன்சிரம் போலோர்சிரம்
செய்துமே கையிற்கொண்டான்-அதனை
சீதைமுன்வைத் திதுராமன் சிரமென்றான்
மெய்நென்னல் ராமன்வந்தான்-இரவினில்
மெள்ள இந்த்ர ஜித்திருவர் சிரமறுத்தான்
லக்குமணன் சிரமெறிந்தான்-கடல்தனிலே
ராமன்சிரம் கையில்தாங்கிக் கொண்டுவந்தான்
பக்குவமாய் உன்முன் வைத்தேன்-ஜானகி
பரகதி யுனக்கெனை யல்லால் வேறுண்டோ
என்றிந்தப் பொய்க்கதையை-ராவணன்
இசைக்கவும் ஜானகி மெய்யென்று நம்பி

கன்றி அப்புறம் போடா-ராவணா
கடும்பாவம் பெண்பழிக் காளாவாய்

என்உயிர் நாதனிறக்க-இனிமேல்
இறைநேர மும்என் னுயிர் தரித்திடுமோ
மன்னிய கற்பினர்க்கு-இதுதான்
மாட்சியாம் அருங்குணம் அரக்கப்பதரே

உன்மாயம் எல்லாம் அறிவேன்-ராவணா
உலகில் எவரேனு மென்நாதரை வெல்ல
எண்ணும் பலமுள்ளவர்-இல்லைஇல்லை
இருந்திலர் இருக்கிலர் என்றுமறிவேன்

கண்முன் நில்லாதே-ராட்சதா
கடும்பழி இன்னேநான் நடத்திடுவேன்
மண்ணாய்ப் போய்விடுமே-உன்றனின்
மாணா சாட்சியும் பேரும் ஒன்றாய்

என்று ஜானகி யிகழ-ராவணன்
இன்னும் இறுமாப்புனக்கு இருக்கிறதா
என்றுமே மெட்டுவிடாமற்-போகவும்
எழிலாம் மாயச்சிரசும் மறைந்ததுகாண்

மன்னனின் சிரம்போற்றான்-இருக்கிறது
மடிந்திடு வேனென்று சீதை புலம்ப
மன்னிய மாயமே யென்று-விபீஷணர்
மனைமகள் ஸரமைதிரி சடைதேற்றினார்

மாயச் சிரமிதுதான்-ஆதலால்
மறைந்தது பார்த்தாயா ஜானகியே
காயம் உளம் வாக்கிற்-புனிதமில்லாக்
கர்மிகள் அவரையெங்ஙன் கொல்லலாகும்

இந்த மாயத்தைச் செய்தால்-நீயும்
ஏகதேச முடன்படக் கூடுமென்று
மந்தப் புந்தியால் நினைத்து-உன்னை
மருட்டச்செய் திட்டதிந்த மாயவேலை

ஆதலால் ஜானகியே-நீயும்
அழுது புலம்பவேண்டாம் அமர்ந்திடுவாய்
காதலன் ஜயங்கொண்டு-இந்த
காவளர் அசோகவனம் வந்து சேருவார்

பாரிந்த ராவணனும்-மக்களும்
பட்டமும் அரசம்இந்த வளநகரும்

பேரில்லாமல் தொலையும்-நீயும்
பெருமான் திருவடியே சிந்தை செய்வாய்

என்று அவர்கள் தேற்ற-ஜானகி
இதயக் கொதிப்புக்கிஞ் சித்துமாறி
மன்னிய மௌனத்துடன்-பெருமான்
மாண்திரு வடிசிந்தை செய்திருந்தாள்—தெந்

## ராவணனின் ஆலோசனை

ஆலோ சனையொன்று-இலங்கை
அரண்மனை தன்னிலே நிகழ்ந்ததுகாண்
பூலோ கந்தன்னிலே-ஈஸ்வரனும்
புயவலி ராவண னுக்ஞையினால்

மந்திரி பிரதானிகாள்-யான்கவர்ந்த
மானிடப் பெண்ணாகுஞ் சீதைதன்னை
வந்தது போலனுப்பவோ-அல்லது
வானரர் நரர்களுடன் அமர் செய்யவோ

என்றரக்கர் கோன் கேட்க-அவ்விடம்
இதம்சொல் பவர்எவ ரேனும்இன்றேல்
புன்னரரை வானரரை-நாங்களும்
பொன்றிடப்போர் செய்வதல்லால் யோஜனையில்லை

அன்னரரை வானரரை-அந்தகனே
அழகாம் இலங்கைக்கரை சேர்த்திருக்கிறன்
தன்மேல்என்றும் பழிகொள்ளான்-இந்தத்
தருமாக் கர்தலைமேற் போகவைத்தான்

இவ்விதமா யரக்கர்சொல்ல-அங்கு
இருந்த அவன்பேரன் மாலியவான்
பவ்வத்தைத் தாண்டிவந்தவர்-இலங்கையைப்
பாழாக் காமல்திரும்பப் போவதுமில்லை

ஒருகுரங் குன்னகரைத்-தீக்கொழுத்தி
ஒருகுப்பை மேடாகச் செய்திருக்க
ஒருகோடிக் குரங்கின்முன்னே-உன்சேனை
ஒருப்பட் டமர்செய்ய நினைக்கலாமா

மடியினில் நெருப்பைவைத்து-எவரும்
மதியுடன் இருக்கிற தாகநினைத்த
படியாகு துன்றன்செய்கை-இன்னொருவர்
பாரியைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு

அந்தகன் கொண்டு வந்தானும்-அரக்கரும்
அதிபலத்தால் அவரைக் கொல்லுவாராம்
சிந்தனை கெட்ட பேச்சிது-என்பேரா
சீர்கெடும் காலம்போல் தோற்றுகிறது

இராமரை லக்குமரை-ராவணா
எளிய நார்களென்று கருதவேண்டாம்
மாராமம் எழ்லோர் அம்பினால்-துளைத்ததாய்
மதியில்லாய் அக்குரங்கு சொல்லவில்லையா

எனக்குத் தெரிந்த மட்டிலும்-ராவணா
இவர்களெல்லாந்தேவ அம்சமாவார்
கனமுள்ள சீதா பிராட்டி-யானபெண்ணும்
கற்பிற் சிறந்தக்கினி போன்றவள் ஆவாள்

குரங்கின்வால் பொருத்தின தீ-இலங்கையில்
கூட கோபுர மெல்லாம் அழித்ததன்று
சரதமாய்ச் சொல்லுகிறேன்-ராவணாநீ
சங்கடப் படுத்தும்பெண்ணும் சீதையாக்கினி

என்றுமா லியவான் சொல்ல-ராவணர்க்கு
எல்லைக்குள் ளடங்காத கோபமாகி
அன்னவனை மிகநிந்தித்து-அச்சணமே
அவன்தானே சேனையணி வகுக்கச்சென்றான்

இலங்கைக்கரை வானரச்சேனை-சேர்ந்து
இருட்டவுங் கரையினின் ஓரமிருந்த
பொலங்கிரி சுவேதத்தினில்-இராமரும்
பொறுமையாய் அன்றிரவு கழிக்கும்போது

உப்பரிகை மேல்நின்று-ராவணன்
ஒப்பில்லாவா னரச்சேனை உற்றுநோக்க
குப்பென்று சுக்ரீவரும்-கோபங்கொண்டு
குதித்தவன் மேற்பாய்ந்து காலால்உதைக்க

தத்தளித்துச் சத்தமிடவும்-அண்டையுள்ள
தகுங்காவ லரக்கர்கள் ஓடியேவந்து
பற்றினார்கள் சுக்கிரீவரை-அவர்மேலே
பாய்ந்தவர் களையுதைத்துச் சுவேதமாயினர்

என்னவென்று ராமர்கேட்க-அவரும்
இதமாய் நடந்தவற்றைச் சொல்லிவிடவும்
என்ன ஆத்திரமப்பா-சுக்ரீவா
எந்தக்கார ணத்தையிட்டும் பதஷ்டம்வேண்டாம்

என்றுபல புத்திமதிகள்-சுக்ரீவர்க்கு
இதமுறச் சொல்லியனுப் பித்தபிறகு

நன்னலமாய்ச் சூரியனும்-தன்ராமர்
நலமில்லார் நிக்கிரஹம் பார்க்க உதித்தார்

இன்னமும் பார்ப்போமென்று-ராமரும்
எழிலான அங்கதனைத் தூதாயனுப்பி
கொன்னே அவர் அழிந்திடாமற்-கருணையாய்க்
குணமாந்தீனதயாளு வால்தெரிவித்தார் (தயாளுவால்—தயாளு

அந்தோ அதை அருள் என்று-ராவணன் (வானபடியால்
அறியாமல் ராமரை மிக நிந்தித்து
வந்ததூத னங்கதனை-அவனேவலால்
வளைத்த அரக்கரைநிர்த் தூளியாக்கினான்

## இந்திரஜித்தன் யுத்தம்

இந்திர ஜித்தனனும்-வானரர்
எதிரே நின்று போர்செய்தா லவமாகும்
தந்திரமாய் மறைந்து நின்றே-கொல்லவென்று
தக்க இருட் டாகும்வரை காத்திருந்து

மறைந்துவா னரச்சேனையில்-அனேகரை
மாய்த்துவிட்டுப் பின்னும்ராம லக்குமணனை
மறையணி நாகபாசத்தாற்-கட்டவும்
மாய்ந்தவர்போ லிருவருஞ்சோர்ந்துகிடக்க

இந்திர ஜித்தன்போய்த்-தகப்பனிடம்
எழில்ராம லக்குமரைக் கொன்றதாய்ச்சொல
மந்திர மாடமாளிகை—எங்கணும்
மகர தோரணங் கட்டி யலங்கரித்து

அந்தர துந்துமி போல்-வாத்தியங்கள்
அலங்க மதிரும்படி முழங்கிடவும்
சிந்தை யுவந்துமேதான்-தருமங்கள்
திரள்திர ளானவர்க்குக் கொடுத்திடவும்

இந்தவித மாகஅரக்கன்-அன்றிரவு
என்றுமில் திருவிழாக்கொண் டாடிக்கொண்டு
அந்தமுள்ள சீதைநாயகர்-தம்பியுடன்
அரும்போரில் அந்தகர்க் காளானவிந்தையை

சிந்தைநொந்து பார்க்கச்சீதையை-திரிசடை
சேரக்கூட்டி அனுப்பினான்பாவிராவணன்
இந்தவிதம் யாரனுப்பினர்-இவ்வுலகில்
இருட்டில் ராஜஸ்திரியைப் போர்க்களத்துக்கு

சொந்தத்தங்கை சூர்ப்பனகை-துஷ்டை துக்கம்
தூர்த்தன்கண் காணுதவளே ராஜஸ்தானத்தில்

பக்தோபஸ்தாய் வைத்தபாவி-சீதையின்
பரிதாபம் பார்க்கமிக்க ஆனந்தமானான்.
இந்தவிதம் இங்குநடக்க-கடற்கரையில்
இணையிற் பலவானரர் ஏங்கிப்புலம்ப
விந்தைதாக பாசமகிமை-இதுவும்
விலகிடும் இன்னுங்கொஞ்ச நேரத்தினில்
என்று விபீஷணர் சொல்ல-அதுபோலே
எழில்ராமர் சீக்கிரமாய் எழுந்திருந்து
மன்னன்லக்கு மணன்சோர்வைக்-கண்டவுடன்
மறுபடி ராமர்சோர்ந்து மயங்கிவிட்டார்

## இராம லக்குமணர்மயக்கத்தைச்சீதை கண்ணுறல்

இந்தச் சமயத்தினில்-சீதையும்
எழிலான இருவர் களையுங் கண்டு
அந்த மிலாத சாகரத்-துக்கத்தில்
ஆழ்ந்தவள் சோர்ந்துயிர் போனவள் போல்
தத்தளித் திடும்போது-திரிசடையும்
ஜானகியைக் கையால்தாங்கி மடிமேல் வைத்து
சித்தம் சற்றுத் தெளிந்த பின்ப-அம்மாசீதை
சிந்தைஎதற் காகவும்நீ கலங்கவேண்டாம்
அந்தோ எந்தன் தந்தை முகம்பார்-அங்குள்ள
அனைத்தும் வானரர்களின் முகங்களைப்பார்
சிந்தாகுலம் ஏதும் தோற்றுதோ-இவர்கட்குச்
சிறிது களைப்புப்போலே தோற்றுகிறது
இந்திர ஜித்தன் சொன்னதும்-அதைக்கேட்டு
இடும்பன் இராவணன் சொல்லிவிட்டதும்
முந்தினபொய் களைப்போன்றதே-நாளைப்போரில்
மூர்க்கன்குலம் அடியோடே நாசமாகும்
என்றுதிரி சடைசொல்ல-ஜானகியும்
இயல்பாய் மூர்ச்சைக்கிருக்கும் குணங்கள்கண்டு
சொன்னது உண்மையென்று-இருவரும்
துரிதமாய் அசோக வனம் சேர்ந்தார்
ஆனது அர்த்தஜாமம்-அப்போதும்
அவர்கள் இருவர்களும் எழுவேயில்லை
வானர வீரரெல்லாம்-இடையிடை
வருந்தியும் தரித்தும் இருந்தார்கள்
கான மரங்க ளெல்லாம்-வேரற்றுக்
கடுங்காற்றாற் கடல்வந்து விழுவதுபோல்

வானர வீரர் நடுங்க-அப்போது
வந்தார் கெருடாழ்வார் ராம சேவைக்கு

கெருடனைக் கண்டபாம்பு-தன்னாலே
கிடுகிடுத் துயிர்விட்டு இறப்பதுபோற்
கெருடன் செக்கை களாலே-ஆனகாற்றாற்
கெட்டது நாகபாச பந்தனம்முற்றும்

மன்னரும் இளையவரும்-எழுந்திடவும்
மாவீரர் ஆனந்தக் கடற்குளித்தார்
அன்று விடிந்த வுடனே-ராவணன்
அதிமகிழ் வோடுதன் மகனை வியந்து

சென்றனன் கொலுவினுக்கு-அப்போது
சேதிசொல்லும் ரெண்டுதூதர் ஓடியேவந்து
வந்த பயம் லங்கைக்கு-வானரங்கள்
வரம்பில்லா அனர்த்தங்கள் செய்கின்றன

என்றுமே சொல்லி விடவும்-அப்போது
இராவணன் இந்த்ரஜித் தேமாந்தோமென்று
சிந்தையில் நொந்துகொண்டு-சேனையைச்
சித்தப் படுத்துமுன்னர் வானரங்கள்

கொன்றன அரக்கர்களை-அப்போது
கோபம்மே லிட்டுஅந்தக் கோனரக்கனும்
இன்னுந்தான் சும்மாயிருத்தல்-கூடாதென்று
எதிர்த்தான் ராமரையுத்த சன்னத்தனாய்

வில்தொட்டார் அம்பொன்றெடுத்து-இராமரும்
வெகுசிறு நேரத்தில் லங்கையரசன்
விற்படை ஆட்கள் ஆயுதம்-ரதமுமின்றி
வெறுங்கையால் நின்றதனால் அவனைப்பார்த்து

இன்னேஉன் னுயிர்தொலைப்பேன்-ஆனாலும்
என்னிசைக் கருணைக்கது ஏற்காது
இன்னேயென் தேவியை யென்முன்-கொணர்ந்திடில்
இனியுன்னைக் கொல்லேன் ஆன போதும்இலங்கை

அரசை விபீஷணனுக்கு-அளித்திட்டதால்
ஆவியோ டிருப்பசேஎன் னருள்உனக்கு
காத்தி லாயுத மின்றேல்-அமர்செய்ய
கருதினு மின்றுபோவா நாளையென்றார்

இந்தச் செலவு கொடுக்க-ராவணன்
எள்ளளவும் வெட்கமின்றித் தலைகுனிந்து

அந்தராமன் விட்டதேபோதும்-என்று
அரண்மனை சென்றுதம்பி கும்பகர்ணனை

## கும்பகர்ணன் யுத்தம்

எத்தனையோ முயற்சி செய்து-எழுப்பிடவும்
எதிரிற் படைத்திருந்த மதுமாம்சத்தை
பத்திரமாய் அடைந்ததன்பின்-அண்ணனைப்
பார்த்தெனை யெழுப்பயேது காரணமென்றான்

நானமே செய்யப்போனவர்-நாறுகின்ற
நளிர்சேற்றைப் பூசிக்கொண் டதுபோல
ஆனதோர் காலமெல்லாம்-சிரஞ்சீவம்
அடையப்போய் அனந்தநித் திரைபெற்ற

தம்பிகும்ப கர்ணனைப்பார்த்து-வானரர்
தாங்கொ(ண்)டு உபத்திரவம் பொறுக்காமல்
வம்புசெய்யும் அந்தவானரர்-தொலைக்கப்பல
வகைதேடி யிப்போதுன்னை யெழுப்பப் பெற்றேன்

க்ஷணந் தரியாமல் இன்னே-நீயும்போய்ச்
சமர்செய்து அவர்களைத் தொலைத்திடுவாய்
கணம் கணமாய் அரக்கரைக்-கூட்டியே
கடுகியே போர்க்களங் குறுகிடுவாய்

என்றுரா வணன்சொல்ல-அப்போது
இகல்தொலை மிகுபல கும்பகர்ணனும்
அண்ணா ராவணேஸ்பரா-சீதையை
அசோக வனம்விட்டு அனுப்பும் என்ன

அந்தவிபீ ஷணன்போலத்-தம்பிநீயும்
அதிகம் புத்திசொல்ல வந்ததேதென
அந்தகன் வந்து விட்டான்-தன்னுயிர்க்கு
ஆனமுறை யாலொன்றும் பயனில்என்று

எழுந்தான் கும்பகர்ணனும்-*அவசத்தோடு(தூக்கமயக்கம்)
இராக்கத ரோடும்போர்க் களங்குறுகி
விழுந்தான்வா னரச்சேனைமேல்-அவர்களில்
வெகுபேரை மாய்த்துநீர்த் தூளியாக்கவும்

அந்தவா னரவீரரும்-இவனை
அடித்துப் பிடித்துஅவ மானப்படுத்தி
அந்தகன் கையிற் கொடுக்க-அவ்வமயம்
அடைந்து விபீஷணனை ஆதரியென்றான்

தம்பிமாய்ந்தசெய்தி யறிந்து-ராவணன்
தந்திரமந் திரஇந் திரஜித்தனை
வம்புவா னரரைக்கொல்ல—அனுப்பும்போது
வகைகெட்டு முன்போல்வ மாருதேயென்றான்

இந்திர ஜித்தன்போய்-வானாருடன்
எதிர்த்துப்போர் செய்யமுடி யாதெனக்கண்டு
மந்திர மாயாஸ்திரத்தால்-மன்னரையும்
மற்றும்பல வீரரையுங் கட்டிமறைந்தான்

ஜாம்புவ னருளினாலே-ஹனுமார்
தான்தெரிந்த சஞ்சீவித் தழையொன்றை
ஆம்படியே தேடநேரம்-ஆகுமென்று
அந்தமலை யைக்கொணர்ந்தே அவசம் தீர்த்தார்

இந்த்ரஜித்தன் இதையறிந்து-மனதினில்
இவர்கள் வெல்லமுடியா வீரர்களென்றும்
சொந்தநிகும் பலையாகம்-செய்துமே
சேரக்கொல்ல வேண்டுமெனத் தீர்மானித்து

சீதைபோலோர் உருவம்விட்டு—இருவர்முன்னும்
சீர்பெறும் வானரர்முன்னும் சிரம்அறுத்து
பாதையிதே அய்யோத்திக்கு-அங்குள்ள
பரதன் முதலியோரைக் கொல்லுவேன்என்றான்

மாண்டாள் சீதை யென்றும்-மற்றும்
மாண்அயோத்தி யுள்ளவரைக் கொல்லுவான்என்றும்
ஆண்டகையும் இளையவரும்-அங்கலாய்க்க
அந்தவேளை விபீஷணர்வந்துபணிந்து

இந்த்ரஜித்தன் மாயம் இதுவும்-எதுக்கும்
இதயங் கலங்காதீர் இந்தக்ஷணமே
தந்திடுங்கள் அனுமதியே-யானுமோர்
தகும்உரு வெடுத்தன்னை கண்டுமீளுவேன்

என்றுஇங் கிதமாய்ச்சொல்ல-ராமரும்
இதுவே தகுதியென்று உத்தரவிட
மன்னினன் வண்டாக-அசோகவனம்
மாண்அன்னை சுகமாய்க்கண்டு திரும்பும்போது

## இந்திரஜித்தன் நிகும்பலையாகம்

இந்த்ரஜித்தன் பரபரப்பாய்-வழிமேலே
யாகநிகும் பலைசெய்ய எத்தனிப்பதை
சந்தித்தே ஓடிவந்து-ராமரிடம்
தகுதியாய் அன்னைசுகம் சொன்னவுடனே

இந்த்ராஜித்தன் நிகும்பலையைச்-செய்கின்றான்
இன்னேதொலைக் கேல்அவனை வெல்லல் அரிது
என்றுவிபீ ஷணர்வேண்ட-ராமரும்
இளைய பிரானைக்கடைக் கண்ணாற் பார்த்திட

அண்ணாஇன்னே அவன்தலையைச்-சமர்ப்பிக்க
ஆகும்என்றால் என்றுசொல்லிப் புறப்படவே
மண்கொண்ட விபீஷணரும்-லக்குமரும்
மாணனுமர் மற்றுஞ்சில வீருமாய்ப்போய்

இந்த்ராஜித்தன் முன்பாகநின்று-அவனையே
இன்னேபோர் செய்யவா என்றுநிந்திக்க
மந்திரஞ்செய் வதைத்தொலைத்து-அவனுமே
மகாஉக்ர மாய்ப்போர்செய்யத் தொடங்கிடவும்

போர்வெகு நேரம்நடந்து-இருபக்கமுற்
பொன்றினோர் அனேகராகக் கடைசியிலே
ஓர்அம்பால் லக்குமணரும்-ஜித்தன்சிரம்
ஊடறுத்துப் பாதஞ்சேர்த்துப் பணிந்துநின்றார்

இந்த்ராஜித்தன் மாண்டசேதி-ராவணர்க்கு
எட்டிடவும் என்செயெனத் தோற்றமற்
சொந்தப்புத்தி தடுமாறி-அய்யய்யோ
சூழ்ந்ததே பழவினையும் புதுவினையும்

இந்த்ராஜித்தன் ஒருவனேனும்-இல்லாமல்
ஏற்பட்ட தெனக்குப்பெரும் அநியாயம்
அந்தமுள்ள இலங்கை முற்றும்-வாழ்ந்திருந்த
அடலரக் கரெலாம்போய் ஒண்டியானேனே

தம்பிவிபீ ஷணன்சொல்லும்-மற்றைத்
தகுந்தம்பி கும்பகர்ணன் சொல்லினையும்
கெம்பீரமாய் விலக்கினனே-கேடுசெய்யக்
கேடுகெட்ட முண்டைசூர்ப்பன் ணகைவந்தாளே

மாமனும் எனைத் தடுத்தானே-என்சொல்லை
மறுவிச் செயேல்அவனைக் கொல்வேன் என்றேனே
ஆமந்தத் தனிக்குரங்கும்-ராமனை
அடல்வலிவா லியைக்கொன்ற தாயிசைத்ததே

மாலியவான் சொன்ன சொல்லையும்-சற்றேனும்
மதியாமற் போரைநான் ஆரம்பித்தேனே
காலியாய் நிற்கும் வேளையும்-வருமென்று
கனவிலும் நினைவிலும் கொண்டதில்லேனே

சுகசார ணர்கள் கண்டதைச்-சொல்லவும்
சுத்தமாய்ப்பொய் யென்றதை அசட்டைசெய்தேனே
இகத்தி லிப்படி யோர்காலம்-எனக்கும்
ஏற்படுமென் றெள்ளளவும் நினைத்தில்லேனே

என்றுபல வாறுய்ப்புலம்பி-ராவணன்
எழிலாஞ் சீதையை இன்னே கொல்லுவேனென்று
கன்றிவாள் கையிலெடுத்து-எழுந்திடவும்
கண்டமந்தி ரியவரைத் தொட்டுஇருத்தி

ஏதய்யா ராவணேஸ்பரா-உமக்கும்
இந்தப்புத்தி வந்ததிது அழகாமோ
மாதர்களைக் கன்றிக் கொல்பவர்-எவரேனும்
மானிலத்திற் பேடியன்றி வேறேஆவரோ

இன்றுகொல்லக் கன்றுபவர்நீர்-இத்தனைநாள்
ஏனேபொறுத் தீர்அரக்கர் வீணைமாளவா
மன்னியவா னரரோடும்-நரரோடும்
மண்டுபோர் ஜெயித்தும்வீரங் காட்டலாகாதா

என்றுமதி பலசொல்லி-ராவணன்
இதுசரி சரியென்று இசைந்துகொண்டு
நன்னலமார் மூலபலத்தால்-நரர்களையே
நசுக்கிட வேண்டுமென்றோர் இசைவைக்கொண்டு

## மூலபலச்சண்டை

மூலபலந் தயாராக்கினன்-அந்த
மூலபலம் இன்னதென்றே உனக்குச்சொல்வேன்
மூலம்என்றால் ஆணிவேறன்றோ-அந்த
மூலமல்லால் ஓர்மரத்துக் குறுதியுண்டோ

இலங்கைக் கேதேனும் இடைஞ்சல்-மற்றும்
எவரேனுங் காக்கமுடி யாபடிவந்தால்
பலமுள்ள மூலபலத்தைக்-கொண்டுமே
பாதுகாத் திடும்படியாய் வைத்தனர்தளம்

இதுவரை யொருக்காலும்-ஏற்றமுள்ள
இந்தமூல பலத்துக்கோர் வேலையுமில்லை
இதுபோன்ற தானஇடைஞ்சல்-இலங்கைக்கு
என்றும்வர எவருமே கண்டதேயில்லை

இந்தக் தளத்திலுள்ளவர்-ஏற்றமுள்ள
இகல்வலி யுடையவ ராயிருப்பினும்

மந்திரம் மாயைகளிற்-சிறந்த
மகிமைபெற் றவர்கள் கணக்கில் அடங்கார்

மூலபலம் ஏவிவிட்டு-ராவணன்
மோதின வுடனேநார் வானரரெல்லாம்
காலன்வாயில் வசப்படுவர்-என்றுமே
களித்துக் கெக்கலிகொட்டி ஆரவாரித்து

தானுமோர் பக்கத்திற் சென்று-வானரரை
தடதட வெனக்கொன்று அழித்துவந்தான்
வானர வீரர்களும்—அரக்கனுலும்
வலிமூலத் தாலும்படை சாவதைக்கண்டார்

மூலபல வீரர்களுக்கும்-வானரர்க்கும்
மும்முரமாய்ப் போர்வெகு நேரம்நடக்க
சீலமுள்ள ராமர்கண்டார்-தம்சேனையில்
சிறந்த வீரர்அனேகர் மாண்டுபோவதை (சீல)

வானர வீரர்களும்-முதுகிட்டோட
வருந்திஅங் கதனனு மார்சுக்ரீவரும்
ஆன முயற்சிகள் செய்து-கொண்டுவந்து
அவர்க்குத் துணையாய்லக்கு மணைநிறுத்தி

இன்னுஞ் சும்மா இருப்பது-கூடாது
என்றுதம் மனதிலே நிர்ணயம் பண்ணி
முன்னர்உறு காட்சிபேதஞ்செய்-அஸ்திரமாம்
மோஹனுஸ் திரம்ஒன்றை மூலபலம்மேல்

விட்டவுடன் அவர்கட்குமுன்—ராமரன்றி
வேறுருவம் தோன்றுவதால் தன்னவனையே
மட்டமாகத் தலையைவெட்டி-ஒருவரின்றி
மட்டற்ற மூலபலம் ஒழிந்தசெய்தி

## இராம ராவண யுத்தம்

கிட்டின தாக்கர்கோனுக்கு-அப்போது
கிட்டிற்றேயிக் கேடெனக்கென் முன்வினையாலென்
அட்டகாசம் அதிகரித்துப்-போர்க்கோலமாய்
அமைந்தான்போர்க் களம்மீந்த அரக்கரோடு

இலக்கு மணன்மீது-ராவணன்
லக்குவைத்துவிட்டான் அம்புசரமாரியாய்
இலக்ஷ்மண ரத்தனையையும்-அழித்திட
இணையிலா மோஹனுஸ் திரத்தை யெடுத்து

இலக்கு மணர்மேல் விடவும்-விபீஷணர்
இணையில்லா ஆழியேவி அதைத்தொலைக்க

பலங்கொடுத்தான் விபீஷணன்-இனிமேல்
பாரில்அவ னேயிருக்கக் கூடாதுஎன்று

ஆக்ரோ ஷங்கொண்டு-அவன்மேல்
ஆரையுங் கொன்றுமீளும் வேலைக்கொண்டு
தாக்கவும இலக்குமணர்-தரியாமல்
தன்அபயத் தைக்காப்பாற்றத் தான்முந்துறவும்

வீடண னவரை முந்தவும்-இருவரையும்
விலக்கியே அங்கதன்தான் தான்முந்துறவும்
சாடிச்சுக் ரீவர்முந்தவும்-தரியாமல்
தக்கவனு மார்விரைந் தவரைமுந்தவும்

எல்லோர் களுக்கும்முந்தி-லச்குமணர்
ஏற்றிட்டார் பழிசெய்யு மந்தவேலை
பொல்லாத தண்டங் கொண்டு-ராவணனின்
போரஸ் வங்கள்அழித்தார் வீடணரும்

வீடணன்மேற் பத்துச்சரமும்-இணையில்லா
வீரன்அனு மன்மேலா யிரஞ்சரமும்
கேடன்இரா வணன்எய்து—இத்தோடு
கெட்டார் நரர்களென் றிலங்கையூர்புக

நொந்திளைத் தோடுகின்றாயோ-ராவணா
நொடிதனி லென்வலிபார் என்றுவீடணன்
நிந்தித்தும் லங்கை புகுந்தான்-ராவணன்
நினைத்த படிமுடித்த தாகநினைத்து (நிந்)

இலக்குமர் சோர்ந்து வீழ்ந்தார்-வேலினால்
இராமர் அதினால்மிகத் துயர்உறவும்
விலக்குவன் இந்தச்சோர்வை-அனுமனும்
வேண்டும் மருந்துகொண்டு என்றார்சாம்பவர்

அப்படி யேஅனுமான்-சஞ்சீவியை
அதுவுள மலையோடே கொண்டுவந்து
துப்புர வாகத்தீர்த்தார்-சோகத்தைத்
துணைவன் இலக்குமணன் உயிர்த்தெழுந்தான்

மூலபலச் சர்வநாசமும்-இலக்குமர்
முன்போல் பலத்துடனே எழுந்ததையும்
சீலமாய்த் தூதர்மூலம்-இராவணன்
தெரிந்தவன் திரும்பவும் போருக்கெழுந்தான்

இராவணன் போர்க்கெழுந்ததை-வீடணன்
இராமர்க் குரைத்திட அவருமெழுந்தார்

இராமரும் தெய்வஇந்திரன்-அனுப்பிவைத்த
எழில்தேரின் மேலேறிப் போருக்காயினர்

மகோதரன் ராவணனிடம்-தன்னை
மானிடரில் இளையவன் லக்குமனோடு
அகோரமாய் யுத்தஞ்செய்ய-அனுப்பென
அவனும் இராமனோடு போர்புரியென்ன

வந்தான் மகோதரனும்-ராகவர்
வனப்புத் தேரேறிவந்த அவன்சிரத்தை
சிந்தினர் ஓர்அம்பால்-அப்போது
சீதைக்கள்ளன் ராகவரின் நேர்நின்றான்

ராமரின் நேரில் நின்றான்-ராவணன்
ராஜ்ஜியம் தவத்தாற் பெற்றுத் துஷ்டம்செய்தவன்
காமர்ராமர் துஷ்டநிக்ரஹஞ்செய்வதற்காய் (காமர்-அழகிய)
கருணா கரனாய்அவ தாரம்செய்தவர்

தருமம்முன் பவம்போலும்-சுடரின்
தரும்ஒளி யின்முன் இருட்போலும்
நெருப்பின்முன் புழுப்போலும்-எதிரெதிரே
நிருப னரன்நிருப அரக்கன் நின்றார்

கண்டான் ராவணனும்-நேரினில்
கனஇந்த்ர ஜித்தைக்கொன்ற லக்குமனையும்
தன்னைக் குறைவுசெய்த-சுக்ரீவர்
தக்கஹனு மார்அங்கதர் முதலோரையும்

பொங்கிற்று ஆக்ரோஷம்-அவனுக்குப்
புத்திமுற்றுங் கெட்டுவிட்ட மத்தகஜம்போல்
சிங்கங்கள் எதிர்த்தனபோல்-இருவர்களும்
சேரவே கணைகள்விட்டார் மாறிமாறி

எத்தனை தரமோ ராவணன்-தசத்தலைகள்
இறுந்துபோ யுந்திரும்ப முளைக்கப்பெற்றான்
தத்தளித்தார் சற்றுநேரம்-ராமரும்
தாங்கருங்கோ தண்டத்தைத்தன் கையிற்பிடித்தார்

இருவர் ரதமும் மேலே-எழுந்து
எழிலாய்ச் சுழன்றுசுழன் றாடிநிற்க
இருவரும் போர்செய்தார்-இராவணன்.
இராமர்மேல் தாமதஅஸ் திரம்விட்டான்

இராமர்சி வாஸ்திரம்விட்டு-அதனை
இடருற வேசெய்து விட்டபடியால்

இராவணன் சூராஸ்திரத்தை—விடவும்
இராமரக்கினியாஸ் திரத்தாலழித்தார்

இராவணன் மாயாஸ்திரம்—விடவும்
இராமர்கந் தர்ப்பாஸ்தி ரத்தாலழித்தார்
இராவணன் தண்டாலெறிய—அதனை
இராமர்ஓர் அம்பேவி அழித்துவிட்டார்.

இராவணன் மாயாஸ்திரம்—விடவும்
இராமர்ஞா னஸ்திரத்தா லதையழித்தார்
இராவணன் மாயாஸ்திரத்தால்—இறந்தவரை
எழச்செய்ய அவரைஞா னத்தாலழித்தார்

இராவணனோர் சூலம்எவ—அச்சூலம்
இராமர்மார் புற்ருபிரஞ் சுக்கலாயிற்று
இராவணன் இவர்சிவனே—என்றேங்கி
இனியென் செய்வோமான தாகட்டுமென்று

நாகாஸ் திரம்விட்டான்—அதைக்கொல்ல
நாதன்விட்ட கருடாஸ் திரமெழுந்து
ஆகாயத் தினில்தூக்கி—அதையும்
அந்தநிமி ஷத்திலேயே கொன்றுவிட்டது

அரன்கயி லையெடுத்தவன்—அரண்டு
அடிமுதற் சிரம்வரை வெயர்வையுண்டாய்
காகாவென் சிரம்சுற்றி—அவனுக்குக்
கண்களும்பஞ் சடைந்தவன் தளருங்காலை

இராமருக்கு வீரம் மிகுந்து—ஓரம்பால்
இராவணன் சிரமறுத்துக் கீழேதள்ளவும்
இராம லெழும்பியுடலில்-ஒன்றியே
இராமரை மிகக்துறை வாயிகழ்ந்திட

இராமரும் இன்னுமோரம்பால்—காம்துணிக்க
இற்றகாம் கொண்டுமா தலிமேல்வீச
இராமரின் மாதலி வாயில்—ரத்தமொழுக
இராவணன் அவன்மேல்தோ மரம்எறிந்தான்

இராமாத் தோமாத்தை—ஓரம்பால்
இறுத்து மறுத்தும்ஓர் அம்பேவி
இராவணன் காம்சிரங்கள்—அறுத்திடவும்
இடியுண் டார்ப்போலெங்கும் நடுங்கிவிழ

சாரதி தேரைப் பின்னே—சற்றகற்றி
சாய்ந்தான் தலைவனென் றினையும்போது

சாரதியாய் ராமருக்கு—அமைந்தவன்
தக்கதென ராவணனைக் கொல்லத்துவங்க

தாசரதி சோர்ந்தவனைக்—கொல்லுவது
தக்கதல என்றவனைத் தடுத்திடவும்
ஆசறக் களைகெளிந்து—இராவணன்
அகன்றென்னை அவமரியாதை செய்திட்டாய்

என்று கனன்று வாள்கொண்டு—சாரதியை
இடருறச் செய்ய நினைத்தெழும்போது
மன்னவன் மாண்டு போனதாய்—நினைத்தல்லாமல்
மற்றவெண்ணம் ஏதும்மனங் கொண்டிலேனென

சீற்றத்தைச் சற்றுமாற்றி—இராவணன்
திரும்ப இராமரின்மேல் அம்பையேவிட
அற்றது ராவணன் வில்லும்—ராமர்விட்ட
அறிய கணையினுல் துகள் துகளாய் (அற்)

இராவணன் வேறோர்வில்லை—எடுத்திடவும்
இராமரதை யும்அற்று வீழச்செய்தார்
இராமர் இறுக்க இறுக்க—அவனும்
எத்தனையோ விற்கள் ஆயுதங்களுந்தீர்ந்தான்

பிரம்மாஸ் திரங்கொண்டு—இவன் ஆவியைப்
பிரித்திட வேண்டுமென்று ராமர்நினைந்து
பிரமாஸ்திரஞ் சக்கரத்துடன்—விட்டிட
பெலமாய் அவன்மார்பிற் பட்டிடவும்

முக்கோடியோ டரைஆயுளும்—எவராலும்
முடிவா காவகை பெற்றவரமும்
திக்கெல்லாஞ் செயித்துவந்த—புயவலியும்
சேரத் தொலைத்ததுரா கவன்வாழி

சென்றவாளி பாற்கடல்சென்று—நீராடி
திரும்ப ராகவன்புட்டில் வந்துசேர்ந்தது
மன்னுந்தவ முனிவர்களும்—தேவர்களும்
மகிழ்ந்துகூத் தாடித்தாண் டவமாடினார்

## இராவணன் மரணம்.

இடிவிழு வதுபோல—இராவணன்
எழில்மணி சிதறிய மகுடமொடு
அடிநிலம் தோர்நின்று—அப்படியே
அடியறு தருப்போல் சிரத்தால் விழுந்தான்

கனல்உகு கண்கள் அடங்க—அவன்செய்த
கடுந்தீ வினைகள் ஒருசேர அடங்க

மனத்துறு மையல் அடங்க—மகிதலத்தில்
மகரிஷி மற்றையோர் துன்பமடங்க

தசத்தலை ஈர்பத்துக்கை—எல்லாமே
தத்தளித்துக் கொக்கரிக்கும் சப்தமடங்க
விசங்கொண்ட அரவம்போலே—அவன்செய்த
வேதனைகள் உலகுக் கொருங்கே யடக்க

ஜானகிமுன் போய்நின்று-மிகவும்
தாஷ்டீகமாய்ப் பேசின நாவும் ஒடுங்க
மனதினில் ஜானகியை-நினைத்தவன்
மதிமுகம் மும்மடங்காய் ஜொலித்ததன்னே

தேரை யிறக்கச் சொல்லி-இராமரும்
தீரன்இரா வணனன்மலை போற்கிடப்பதை
சீராகக் கண்ணுற் பார்த்தார்-சற்று
சிந்தைநொந் தவன்வீரத்தைச் சொல்லியபோது

## விபீஷணர் புலம்பல்

வீடணர் பக்கம் நின்றார்-அப்போது
வீரவானரர் அரக்கன் மேலே குதித்து
ஆடினார் ஆர்ப்பரித்து-அன்றியும்
அங்கும் இங்கும் தாவினர் மலைக்குவடுபோல்

இராமர்க்குச் சமாதானமாய்-வீடணர்
இராவணன் தீரனென ஆட்சேபம்இல்லை
மராமரம் எழுதுளைத்த-உன்முனிவும்
மாதா ஜானகியாளின் கற்பு நெருப்பும்

தவமகர் கொடுஞ்சாபமும்-இல்லையானால்
தாணியில் அவனைவெல்ல யெவருண்டு
என்றுசொல்லி ராமர்சொல்மேல்-வீடணர்
இராவணன் மேல்விழுந் திவைபுலம்பினார்

என் அண்ணா உன்உயிரை-ஜானகியின்
இணையிலாக் கற்பாவின் விஷமூச்சு
உண்ணாதே பருகினது-யானும்
உனக்கென்னென்ன மோசொல்லிக் கேட்கவில்லையே

ஓராசை யுடைராகவன்-பேரிலேயே
உயிர் ஆசை யுடையஅக் குலமகள்மேல்
தீரா வாசையை யொழிப்பாய்-என்றுநான்
செப்பினதா லென்னைமுனிந் தகற்றினையே

உன் ஆசை யால்நம்குலம்-முழுவதுவும்
ஒழிந்து தனித்தும் மதியில்லாமற்போனாய்

அன்னவள் வேதவதி-அன்றியும்
அகிலத்துக் கன்னியாவாள் ஜானகியென்றும்

சொன்னதைக் கேட்காமல்-நீயும்
துரும்பாய் நினைத்தநார் வலிகண்டாயே
இன்றேனும் அறிந்தாயோ-அவர்நாட்டை
எட்டினபோ தேனும்அவர் இறையென்று (இன்)

வீரநா டுற்றாயோ-ராவணா
விரிசடைப் பிஞ்ஞகன் நாடுற்றாயோ
மாரன் கொடுமை நின்றதோ-இன்றுதான்
மதியும் உனக்குமிகக் குளிர்ந்ததுவோ

சூர்ப்பன் னகைக்கொடும்பாவி-இதழதக்கி
துணைவன் கொடும்பழியை இன்றெடுத்தாளோ
போர்மகளைக் கலைமகளைப்-புகழ்மகளை
பிடிகையால் பார்மகளைப் பிடித்தாயோ

ஏர்மகளாம் ஜானகியைத்-தழுவநினைந்
திக்கெதியாய்ப் பார்மகளைத்தழுவினையோ
ஆர்தானுனக் குறவாவார்-அய்யய்யோ
அனைவரும் பகையேயார் கண்ணில்விழிப்பாய்

நீநர கத்தாரேனும்-உன்னைச்
சேர்ந்தவ ரல்லர்அவரும் பகைதானே
மேனக ரத்திலேனும்-உன்மேல்
மிகவெறுப் புடையவர் கள்தானே

என்றென்று யேங்கியிருந்த-வீடணனை
எழிற்சாம்பு வன்தேற்றி யாற்றும்போது
மன்னிய கடல்ஏழும்-பொங்கியே
மகிடித்துப் பூமியின்மேல் வருவதுபோல்

கணக்கற்ற அரக்கியர்கள்-மண்டோதரியைக்
கைத்தாங் கலாய்அழுது கூட்டிவந்தனர்
பிணமலை மேல்விழுந்தனர்-ஆயிரம்
பெரும்மலை கள்போன்ற அரக்கியர்கள்

அழுதனர் ஆற்றினர்கள்-அங்குவந்த
அரக்கியர் இயக்கியர் உரகர்சித்தர்
விழுவிஞ்சை மாதர்புலம்ப-அவர்களோடு
விம்மிவிம்மி மண்டோதரி புலம்பலுற்றாள்

## மண்டோதரி புலம்பல்

என்அன்னை என்அன்னை-எனக்கு
இப்படிவந் துற்றதுவேபெரும் பாவம்

முன்னே முடிய நினைத்தேன்-எனக்கு
முன்னே போகும்பெருமா முகங்காட்டுவீர்
வெள்ளெருக்கஞ் சடைமுடியான்-வெற்பினை
வீரத்தோளில் தூக்கியஎம் பெருமானும்
உள்ளுளதோ சீதைகாதல்-என்றுமே
உட்புகுந்தேதடவிற்றோ ராகவன்வாளி

ஓர்அம்பா கொன்றதையா-உடலெல்லாம்
ஒப்பற்ற மலைமுழைகள் போலஆயிற்றே
வீரம்வரம் எல்லாம்குறைந்து-பெருமாநீர்
வீழ்ந்து கிடப்பதையான் பாவிகாணவோ

இந்திரன்செய் பெருந்தவமோ-கானிருந்த
ஏந்திழையாள் ஜானகியின் பேரழகும்
அந்தம்இல்லா அவள்கற்பும்-சூர்ப்பனகை
அறுந்தமூக் கும்இராமர் வனவாசமும் (இந்)

தேவர்க்கும் திசைக்கரிக்கும்-சிவனார்க்கும்
சிஷ்டிகர்த்தன் அயனார்க்கும் செங்கண்மாற்கும்
ஏவர்க்கும் மிக்கவலியார்-எம்பெருமானை
இந்நார் கொல்லுவரெனக் கருதிலனே

வரம்பெற்ற மூன்றரைக்கோடி-ஆயுளுக்கும்
வரையில்லா என்னையகர் ஆற்றலுக்கும்
தாங்கெட முறையுண்டோ-சீதையென்னும்
தயிர்த்துளி பாற்கடலில் விழாதிருந்தால் (தாங்)

ஆரா அமுதாகப்-பாற்கடலில்
ஆதிசேஷ சயனத்திற் கண்வளரும்
நாராயணன் என்றேன்-ராமரை
நம்பாம லிக்கெதி யானீரேநாதா

என்று யிவ்வாறு புலம்பி-நாயகனும்
இரும்மலைக் குவடிருந் துருண்டுவீழ்ந்து
மருகியே உயிர் துறந்தாள்-மண்டோதரியின்
மாண்புறு கற்பை வியவாதவரெவர்

முடிந்தது துஷ்ட நிக்ரஹம்-உடனே
மூர்த்திராமர் கட்டளையா லுத்ரகிரியை
முடிக்குமுன் விபீஷணரும்-ராவணன்
முன்பிறந் ததேவயிற்றில் தான்பிறந்ததால்

மாழ்கினர் அண்ணன் உயிர்க்காய்-மதிகேடாய்
மண்ணைத் தன்தலைமேலே தானுகையிட்டான்

மூழ்கினன் பாவக்கடலில்-என்உரைத்தும்
மோட்சம் விட்டு இவ்விதமாய்த் தாழ்ச்சியடைய (மூழ்)

இப்படிப் பாபிகட்கெல்லாம்-இராவணர்க்கு
இட்டகதி யேயவர்க்கும் கிட்டிடும்என்று
ஒப்பில்லா அத்தாட்சியாக-என் அண்ணன்
உலகுள்ள வரைக்கும்ஓர் பேரும்பெற்றான்

## விபீஷணர் செய்தஉத்தரகிரியை

என்றுசற்றே அழுதபின்னர்-விபீஷணர்
இஷ்டர்சகோ தரர்பந்து தநயர்கட்காய்
நன்னலமாய் உத்ரகிரியையைச்-செய்தபின்னர்
நாட்டமுடன் சென்றனர் இலங்கைநகர்க்கு-தெந்

## விபீஷணர் பட்டாபிஷேகம்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தாசரதி சேதுவினில் நீர்வார்த்து வீடணர்க்குத் தத்தஞ்செய்த
தசக்ரீவன் நாடதனை அரசேசெய்ய
ஈசனருட் பிரகாரம் இலங்கேசனழிந்தொழிய விலங்கைக்குள்ளே
இங்கிதமாய் வானரர்க ளோடே சென்று
ஆசனத்தி லழகுறவே யந்தண்மன வீடணரை யமரச் செய்து
அங்குள்ள வரக்கப்ரா மணரைக் கொண்டு
மாசனத்தி னிடையேபட் டாபிஷேக மங்கலமா முடியுஞ்சூட்டி
மகிழ்வாகச் சீதைசிறை மீட்டல் சொல்வாம்

நொண்டிச்சிந்து

இலங்கைக்கிரீ டாதிபதியாய்-விபீஷணர்க்கு
ஏற்றபட்ட அபிஷேகம் செய்துமுடிக்க
இலக்குமணர் வானருடன்-சென்றிட
இராமர்முன் விரதப்படி வெளியில்நின்றார்

வேதத்தின் விதிப்படியே-விபீஷணரை
வேத அரக்கர் கொண்டு விமரிசையாய்
காதலுடன் சுக்ரீவர்-அனுமார்
கனவய துள்ளஜாம்பு வான்அங்கதன்

வானர வீரருடன்-லக்குமரின்
வாக்குப் படிஒழுகிச் சிறப்புச்செய்ய
கோனமர் ஆசனத்தில்-இருத்திவைத்து
கோலா கலத்துடனே முடிசூட்டினார்

அனுமா அசோகவனம்-சென்று
அன்னைக்குச் செய்திமுற்றுஞ் சொல்லுவாயென்ன

அனுமோத் தினிற்சென்று-அன்னைக்கு
அதிபாவி ராவணன் மடிந்ததையும்
வீடண னரசுபெற்றதும்-தன்னை
விருப்பமாய் அன்னையிடம் போகச்சொன்னதும்
ஆடம் பரமாய்ச் சொல்லி-அடிபணிந்தான்
அதற்கன்னை யொன்றுஞ்சொல் லாமலிருக்க

காரணம் என்ன வென்முன்-அதற்குக்
கட்டழகி ஜானகி அதிகளிப்பினல்
வீர ஏதேனுஞ் சொல்ல-முடியாமல்
விம்மிதமா யிருக்கிறேன் என்றுசொல்லவும்

திரிச்சடை நீங்கலாக—மற்றத்
திறலாக் கியசொல் லாரையும் இன்னே
எரிக்கிறேன் என்றுசொல்ல-அரக்கியரும்
எடுத்து விழுங்கிடுவோம் இதோபார்என்ன

அனுமார் கோபித்திடவும்—அப்போது
அடலாக் கிகள்சீதை சரணமாக
அனுமானைச் சாந்தப்படுத்திச்-சீதையும்
அவர்கள் ஊழியர்தானே யென்செய்வர்

என்வினை யால்எனக்கு—இந்த
இடர்வந்த தென்றுநான் அறிந்திடுவேன்
மன்னன் அரண்மனையில்-வாழ்ந்திடும்
மந்திரைக் கூனியினும் பொல்லாரோ

என்றுமே சீதைசொல்லி-இவ்வாறிருக்க
இராமர் விபீஷணரை அசோகவனம்
மன்னிச் சீதையைக் கொணர்வாய்—என்னலும்
மன்னன்ராம ரின்சொல்லைச் சிரமேற்கொண்டு

## ஜானகி சிறை மீட்டல்

பட்டாபி ஷேகம்பெற்ற-லங்கேசன்
பாதப அசோகவனம் போய்ச் சேர்ந்து
மட்டில்லாத் தண்டங்கள்செய்து-அம்மனை
மகிழ்வாகக் கோலங்கொள் எனச்சொல்ல

சீதை தகாது என்ன—வீடணர்
ஸ்ரீராமர் கட்டளை யதுஎன்ன
சீதையுங் கோலங் கொண்டு-மகிழ்ச்சியுடன்
திரள்ஜனக் கூட்டத்தின் இறைச்சலுடன்

பாக்கியம் மன்னனைக் காணக்-கிடைத்ததென்றும்
பழிதீரும் சமயமும் வந்ததே யென்றும்

வீக்கமுடன் தலைகவிழ்ந்து-அண்டையில்
வீழ்த்ததலை நிமிராமல் வந்துநின்றிட

பார்த்தார் சீதைமுகம்-ஏதேனும்
பகர்ந்திடா மல்முகத்திற் களிப்புமின்றி
பார்ந்தார் மறுபக்கம்-ஏனையோர்
பரிதபித் தேங்கும் படியாக (பார்த்தார்)

இவ்வளவாய்க் கஷ்டப்பட்டு-நாமும்
எழில் அன்னையைச் சிறை மீட்டதின்பின்
இவ்விதம் பாராமுகமாய்-இருந்திட
ஏது காரணமோ யாம் அறிந்திலமே

என்று எல்லோரும் மாழ்க-இறைவன்
என்னநும் எண்ணம்என யான் அறிவேன்
தன்மனை சிறைமீட்க-வகையில்லாமல்
தனியே அலைகிறான்என் றியம்பாமலும்

என்குல இட்சுவாகுவின்-பெயரையும்
எழிற் க்ஷத்திரியகுல தர்மத்தையும்
மன்னிடச் செய்வதற்காய்-யானும்
மனசு கொண்டிவ்விதம் செய்துள்ளேன்

ஆனாலும் என்மனையை-மற்றொருவன்
அகற்றிட மற்றிடம் அவள் இருந்தும்
மானபரணன் என்று-என்பெயரை
மகிதலத் தில்எப்படி நாட்ட முடியும்

இப்படியே சேர்த்துக் கொண்டால்-எனக்கு
என்றுந் தீராத அப கீர்த்தியாகும்
அப்படி நான் அவமானமாய்ச்-சேர்ப்பதால்
அவட்கும் ஏதேனும்ஒரு சிறப்புமில்லை

என்று இராமர் சொல்லவும்-ஜானகி
என்னுயிர் நாதனுக்கு அவமானமாய்
இன்னுயிர் வைத்திருக்கேன்-என்றும்
இன்னே தீக்குளிக்கச்செல் கிறேன்என்றும்

இலக்குமர் முகத்தைப்பார்க்க-லக்குமர்
எழிலான ராமரின் முகத்தைப்பார்க்க
வலம்வந்து தீக்குளிக்க-நாதரின்
வார்த்தைப் படிநெருப்புக் குண்டம்வளர்த்து

ஜானகி அக்கினிக்குண்டத்திலிறங்கல்-அசரீரிவாக்கு

இறங்கினள் அன்னை குண்டத்தில்-அக்கினிக்கு
இணையில்லாக் கற்பைச் சுடப் பலம்உண்டோ

உறங்கி விழித்தவள் போல-ஜானகி
ஓர்சேத முமின்றி வெளியேவந்தாள்

அந்தரத்தில் ஓர்சப்தம்-ஜானகியாள்
அந்தக் காரணசுத்த முடையவள்தான்
சந்தேகம் ஏதும்வேண்டாம்-பத்தினியாய்ச்
சார்வதற் கென்றுரமாய்ச் சப்தித்தது

அகங்களித் தாடினார்கள்-வீரரெல்லாம்
அன்னைஜானகியே கண் கண்டதெய்வமென் (அகங்)
மகத்துவம் கொண்டார் சிரசில்-ரகுநாதர்
மானு பாணனென்னும் பேர்க்கிசைந்ததாய் (மக)

துட்டநிக் கிரகவேலை-முடிப்பதற்குத்
துட்டரிட மேயண்டியே செய்யவேண்டுமால்
மட்டில்லாத் துக்கசாகரத்-தழுந்தியவர்
மாளாமல் தாண்டி மகிழ்க்கடற் புகுந்தார்

சாவதான மாயிருந்தார்கள்-வீரரெல்லாம்
தாய்சொன்ன கணக்குப்பார்த்தார் ரகுநாதர்
ஆவது இன்றைத்தினமே-தாய்சொன்ன
ஆரண்யக் கெடுவுபதி னன்குவருஷம்

அய்யோத்தி போகவேண்டும்-அங்குள்ள
அருமைப் பாதனைநான் காணவேண்டும்
நைகின்ற தாய்மாரையும்-இளையோனையும்
நான்பார்த் திடவும்மிக ஆவலாகினேன்

அன்பால் அழுதார் குடிகள்-அவர்கட்கு
ஆகட்டும் போங்கள்பதி னன்குவருஷம்
சென்று வருவேன் என்றேன்-அந்தச்
செஞ்சொல்லா லவர்மேல்மிகத் தாபமாகினேன்

என்றுமே ஆக்ஞாபித்து-ராமரும்
எழிலாய்ச் சொல்விமுடித்த அந்தக்ஷணமே
மன்னன் லங்கேசன் வந்து-மன்னரிடம்
மகிமையாய்ச் சித்தஞ்செய்தேன் புஷ்பவிமானம்

## இராமர் அயோத்திக்குத் திரும்பல்

என்று லங்கேசன் வணங்க-ராமரும்
இசைந்து கொணர்வாயெனக் கொண்டுவந்தனர்
மன்னினர்கள் புஷ்பவிமானம்-மகிழ்ச்சியுடன்
மாதுடன் ராமரும்தம்பி லக்குமணரும்

வானரர்கள் மானிடர்களாய்-விமானத்தில்
வாழ்த்திப்பாடி யாடிக்கொண்டு வந்தனரே

தீனபக்தன் விபீஷணரும்-மானிடனைச்
சேவடி தொழுது கொண்டு வந்தனரே

இலங்கை வலஞ்செய் யென்ன-ராமரும்
எடுத்து நவிலுமுன் விமானங் கீழ்வாய்
இங்கித மாகச்சேரவும்-இங்கு
எழில் நீலனுற் சுபாரி சன் பட்டானென்றுர்

குடதிசை வாயில்வரவும்-அங்கு
குன்றறுத் தவனையன்று வென்றுகொண்ட
விடநிகர் மேகநாதனை-இளையோன்
வீழ்த்திய திவ்விடமென்று சுட்டிக்காட்டினர்

வடதிசை வாயில்வரவும்-அங்கே
வல்லரக்கன் ராவணனின் தலைபத்தும்
உடலமு மென்கையின்-ஓரம்பால்
ஒழிந்ததிவ் விடமென்று சுட்டிக்காட்டினர்

பின்னர் விமானத்திருந்து-ராமரும்
பிள்ளைகளாம் வானரர்கள்கட்டிமுடித்த
மண்அணை சேதுவைக் காட்டி-இதற்கு
மயன் ஆனன் நளன்என்பான் என்றுசொல்லி

## இராமர் ஜானகியிடம் சேது மான்மியங்கூறல்

சேதுவின் மகிமைசொன்னர்-ஸ்ரீராமர்
சீராம் இதன்மகிமை பிரமர்க்கெட்டா
தீதுறவே பெற்றோர்களையும்-தேசிகரையும்
திறம்படச் சுற்றத்தையும் பிழைத்தபேர்கள்

பாதக மெல்லாந் தீர்ந்து-சுராவர்
பண்பாங் கங்கையமுனை கோதாவிரியும்
கோதகல் காளிந்தியும்-படிந்தாலும்
குன்றிடாத பாவமெல்லாம் பொன்றிடுமித்தால்

ஆவினைக் கொன்றபாவம்-குரவரை
அரும்மறை முனிவரைக் கொன்றபாவம்
மேவிய அடைக்கலத்தைக்-கொன்றபாவம்
மெல்லியரைப் பாலியரைக்கொன்றபாவம்

இத்தலம் மிதித்தவுடன்-பறந்துவிடும்
எந்தப்பஞ்ச பாதகமும் நீங்கிவிடும்
நத்துவர் உம்பர் உலகம்-ஆகையால்
நாவாற் சொல முடியா திதன்மகிமை

சங்கரன் தலைமேலே-வீற்றிருக்கும்
தகுதியாங் கங்கையுஞ் சேதுவாக

புங்கவன் அருளுக்காய்-என்றுமே
புரிகின்றாள் நோன்பிதை நீயறிவாய்

கோதண்டக் கோடியினால்-இவ்விடத்தைக்
குடைகின்றேன் மாக்கலம் போகப்பஞ்ச
பாதகரானாலும்-இவ்விடம்வரின்
பல்பிறவி நீங்கியமரர்நிதியாவர்

என்றுதனுக் கோடியமைத்த-பின்னரே
எழிலான தன்புல்லணை தனைக்காட்டி
வந்தான் இங்கு வருணதேவன்-சரணமாக
வலுவொடு இந்தஅணை சிரந்தாங்க (வந்)

அந்தமிழ்க் குறுமுனி வைகும்-மலையிதென்று
அருகாம் மலையைக்காட்டி யதற்கப்பால்
மந்தமாருதம்வீசும்-மதங்கவெற்பை
மகிழ்வாக ஸ்ரீராமர் காட்டியபின்

அருமைந்தன் அனுமந்தன்-இருப்பிடம்
ஆவலுடன் யாதென ஜானகிகேட்க
நிருபன் ரிஷிமுகத்தையும்-கிட்கிந்தையையும்
நேராகக் காட்டி இங்கே வானரமாதர்

அடிதொழ இருக்கின்றார்-என்றுசொல்லி
அனுமந்தா எங்களின் அருமைமக்கள்
துடியிடைவானரமாதரை-அழையென்னத்
தொழுதகை சிரம்வைத் தனுமாரோடி

ஓர்நொடியில் அனுமந்தர்-அவர்களில்
ஒருவர்பாக் கியில்லாமல் அழைத்துவந்தார்
பார்தனில் விமானம்இறங்கப்-பணிந்தனர்
பார்புகழ் சீதைராமர் லக்குமரையும்

ஜானகி வெகு விருப்பமாய்-அவர்களையும்
தன்னொடு விமானம்ஏற்ற விரும்பியதால்
மாண விமானமும் இடங்-கொடுத்திட
மாதர்களெல் லோருங்கூட ஏறினார்கள்

விமானம் வருகின்றது-அந்தரத்தில்
விரும்பியே எதிர்வந்தார் பரத்துவாஜர்
விமானம் இறங்கவென்று-நினையாமுன்
விருப்பப்படி கீழேயே இறங்கினது

## இராமர் பரத்துவாஜர் ஆசிரமத்திற்றங்குதல்.

இறங்கியே அடிபணிந்தார்-ராமரும்
எல்லாரும் அப்படியே வணங்கினார்கள்

துறவியும் ஆசிசொல்லித்-தன்னுடைய
தூயவா சிரமத்துக் கழைத்துச் சென்றார்

விருந் தினிதாய் அளிக்க-எல்லோரையும்
விரும்பியன் றிரவங்கே இருக்கச் சொன்னார்
பரதனின் இயல்பை யெல்லாம்-பரத்துவாஜர்
பகரத் தொடங்கியிவை சொல்லலுற்றார்

அழுதழு தேயிருக்கின்றான்-பரதன்
அனல்உறும் மெழுகெனத் தினந்தவறு (அழு)
தொழுதகை யெடுக்காமல்-என்றும்
துன்பமே யுருவாய்த்தென் திசைபார்த்துள்ளான்

நந்திக்கிராமமே யுள்ளான்-இந்த
நான்கொடுபத் தாம்வரு ஷங்கள்முற்றும்
இந்திரியந் தன்னைவிடாமற்-பரதன்
இருடிபோல் மாவுரி யோடிருக்கின்றான்

அய்யோத்தி மிதித்திலனே-இன்னும்
அருந்தா னியபோஜனம் அருந்திலனே
பைம்புற் பாயலுளனே-என்றும்
பசுங்காய் கனிகிழங்கே யுண்டும்உள்ளனே

என்று துறவி சொற்றபின்-என்னிடம்
எந்தவா மேனும்வாங்கிக் கொள்ளுகஎன்ன
நன்றுபட வானரர் வாழ்க்கை-யெனராமர்
நவின்றிட அவ்வரம் உடன் ஈந்தார்

பரத்துவா ஜர்ஓர்ஓமம்-வளர்த்துமே
பண்பாய்ச் சுவர்க்கபோகம் வரவழைத்து
அரசர்கள் ஆதியாக-அனைவோரும்
அருஞ் சுவர்க்க போனகம் அருந்தியபின்

அனுமந் தனையழைத்து-ராமரும்
ஆபத் பாந்துவமா ருதியே நீ
இனும்ஒரு நிமிஷமேனும்-இங்கிராமல்
எழிற்பா தர்க்கென்வா விருக்கைசொல்வாய்

என்றுசொல்லிக் கணையாழியைக்-கைக்கொடுக்க
இதமாக வேஅனுமார் கைகளில்வாங்கி
நன்னலமாய்ப் பத்திரஞ்செய்து-உடனே
நல்விடை பெற்றுநந்திக் கிராமம்ஏகினர்

எல்லாரும் பரத்துவாஜர்-ஆஸ்ரமத்தில்
இராமரின் கட்டளையால் தங்கினர்கள்

நில்லாமல் மாருதிபட்டும்-ராத்திரியே
நிருபவேடன்குகற்குச் சொல்லிப்போயினர்

## பரதர் அக்கினிக்குண்டம் வளர்த்தல்

இங்கு இவ்வாறிருக்க-அயோத்தியில்
என்னநடப் பெனயான் சொல்லுகிறேன்கேள்
கங்குலோ டேதீர்ந்தது-பதினான்கு
காடுறை வருஷங்கள் ஆனதினாலும்

அண்ணன் இன்னும்வரவில்லை-என்ன
ஆபத்தோ எனத்தெரிய வில்லைஎன்றும்
கண்ணுற்றுச் சோதிடரிடம்-கேட்டுக்கொண்டும்
கனல் வளர்க்கப்பரதர் நினைந்துகொண்டும்

தம்பிசத் துருக்கருக்கு-அயோத்திக்குத்
தகுந்து தனுப்பியுடன் வரச்சொல்லி
தம்பிநீ அரசைக் கொள்வாய்-இனிமேல்
க்ஷணமும் உயிருடன் இருக்கமாட்டேன்

என்று பரதர் சொல்லவும்-சத்துருக்கன்
என்னஅண்ணா சொல்கிறீர் இதுஅழகு
மன்னன் இறந்துபோகவும்-மற்றைய
மாண்புறும் முதியர்கள் அரசொழியவும்

என்ன இருக்கை யெனக்கு-கனிட்டனென்றால்
இதமுறப் பணிசெய்யும் ஏவலாளன்றோ
மன்னர்கள் போகும் வழியே-யான்போக
மதியுண் டெனக்கண்ணாநீர் சொல்லவேவேண்டாம்.

என்றுசத் துருக்கன்கூற-அப்போது
எப்படி யாயினும்நான் இருக்கமாட்டேன்
இன்னே போய்க் கனல்வளர்க்க-என்னவும்
எழிற் கௌசலைக்குச்சொல்லிக் கனல்வளர்த்தான்

கௌசலை சொல்லிப் பார்த்தாள்-மேலும்
கனதவர் குடிபடை யெல்லோரும்
பவ்வியமாய்ச் சொல்லிப் பார்த்தும்-கேளாமல்
பரதர் பிடிவாதமாய் நிற்கின்றார்

தன்குலத்தின் நேர்மைபார்க்கத்-தபனனும்
சந்தோஷமாய்க் கைகளை வீசத்துவங்கும்
அன்ன சமய மாகும்-வேளையில்
அனுமார் நந்திக்கிராமம் போய்ச்சேர்ந்தார்

அங்கு பரதரில்லை-என்றதும்
அய்யோத்தி மூந்தினநாள்சென்றதாகவும்
தங்காமற் கேட்டுக்கொண்டே-அனுமார்
தக்கநல் லயோத்தியரண் மனைக்குச்சென்றார்

கண்டார்பர தரையனுமார்-கடுமையோடு
கணகண வென்றெரி யக்கினிக் குண்டத்தை
ரண்டுதரம் சுற்றிவந்து-மூன்றாந்தரம்
ரணபா தகிதன்தாயை நிந்தித்துக்கொண்டே

சுற்றி வரும்போது-பின்னாற்போய்
சுத்தநெஞ்ச ஆஞ்சநேயர் பரதர்காலை
பற்றினார்அந் தணர்உருவாய்-பரதரும்
பண்பான நண்பன்நீயார் அண்ணன் எங்கென

வந்துவிட்டார் ரகுநாதர்-என்றும்
வளப்பரத் துவஜனின் ஆஸ்ரமத்தில்
சிந்தைமகிழ்ந் திருந்தார்என்று-அனுமார்
சீக்கிரம் கணையாழியைக் கையிற்கொடுத்தார்

தன்வர லாறுசொன்னார்-பரதரின்
தமயன் ராமரின்கதை பூராவுஞ்சொன்னார்
தன்விஸ்வ ரூபங்காட்டினார்-பரதரின்
சம்மானம் எல்லாம் உவப்பாய்ப் பெற்றுக்கொண்டார்

## பரதர் ராமரை எதிர்கொண்டு செல்லல்

பரதர்சத் துருக்கருக்கு-ஆக்ஞையிட்டு
பட்டண முழுதும்மலங் காரஞ்செய்வித்து
அரசர்க் கிருப்பிடங்கள்-யாவையும்
அதிகத் தயாராக வைத்தது மன்றி

கொட்டுப் பறைசாற்றுவித்துச்-சீக்கிரத்திற்
குடிபடை பரிவாரங் குருக்களோடும்
மட்டற்ற பொருட்களோடும்-பரதர்
மன்னரைச் சந்திக்கப்போனார் வாசம்நோக்கி

வந்தது சந்தேகம்-பரதருக்கு
வானரர் எழுபத்து வெள்ளமென்றால்
சந்தடி ஒன்றுங் கேட்கிலேன்-என்னவும்
தட்சணம் ராமரைக்காண்பீர் என்றாரனுமார்

இவ்விதம்இங்கேஇருக்க-ராமரை
இகற்குகன் வேடராஜன் வந்துபணிந்தான்
செவ்விதாய் ராமர்கைளால்-தழுவியே
செம்மைகொலோ மக்கள்மனை யென்றுகனிந்து

சுக்ரீ வாதியார்க்குக்—குகனேடு
சுகமான நட்பையுண் டாகச்செய்து
தொக்களறி னர்கள்விமானம்-அய்யோத்தி
தோன்றிடக் குறிக்கவா னரர் பணிந்தார்

அனுமார் விமானங் குறிக்கப்-பாதரும்
அங்கிருந்த மற்றவர்க ளெல்லாரும்
அணுவள வேனும்ஸ்மரணே—அற்றவராய்
ஆனந்தக்கண் ணீர்சொரிந்து தொழுதுநின்ருர்

ஆஞ்சனேயர் ஓர்தாவில்—விமானமேறி
அன்புடன்ரா மர்க்குப் பாதர் திறங்கூற
கொஞ்சிடும் வண்ணமாக—அனுமனைக்
கூட்டிய கரங்களால் ராமர்புல்லினர்

உன்னுமுன் விமானங் கீழுற-ராமரும்
ஒவ்வொருவ ருக்கும்உரித் தாயவிதமாய்
மன்னினர் கண்ணின் முன்னே-அப்போது
மகிழ்ச்சிப் பெருங்கூச்சல் வானமெட்டிற்று

அண்ணனைக் கண்டவுடன்-பாதரும்
ஆனந்தக்கூத் தாடினர்தாண் டவமாடினர்
அண்ணனைத் தொழஅவரும்-ஆனந்தக்கண்ணீர்
அருவியாய் ஓடிட யிறுகப் பிடித்தார்

குருவாகும் வசிஷ்டர் பதம்-இராமருடன்
கூடவந்த எல்லோரும் பணிந்துகொண்டு
திருத்தவர் எல்லாரிடமும்—வேண்டும்மட்டும்
தீர்க்க வாசிகள்பெற் ருனதின்பின்னர்

அன்னையா ரைத்தொழுது—மூவரும்
அன்பாக அவர்களின் ஆசிகள் பெற்று
அன்பாகச் சத்துருக்கன்-அடிதொழ
அவனைத் தழுவியாசி சொற்றதின்பின்னர்

சுக்ரீ வாதியோர்கள்-அன்னையர்
சுத்தநெஞ் சப்பாதர் சத்துருக்கரை
மிக்கப்பணி வாகப்பணிந்தார்-ராமரும்
மிகுபுரா தனநந்திக் கிராமம் சென்று

பதினன்கு வருஷங்களாய்-வளர்த்த
பாரச் சடையையங்கு நீக்கி விட்டு
அதிபதி ஸ்நானமாடி—அரசர்க்கேற்ற
அலங்கார மானகோலங் கொண்டபின்னர்

எல்லாரும் விமானமேறி—ஏகமாய்
எழிலயோத்தி நகரி லிறங்கினார்கள்
எல்லா இடங் களுடை—அழகையும்
எழிற்சுக்ரீ வாதியர்கண் டகமகிழ்ந்தார்—தெங்

## இராமர் பட்டாபிஷேகம்

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

துட்டர்களை யதஞ்செய்துசிட்டர்பரிபவந்தீர்த்து ஜெகத்தினுள்ளே
திறம்படவே புகழ்படைத்த ஸ்ரீராமர்க்கு
மட்டற்ற கெம்பீரத்துடன்குடிகள் ஆர்ப்பரித்தும் மன்னரெல்லாம்
மாண்புறுசீ ரய்யோத்தி வந்தேகூடி
அட்டவித மங்கலமு மொருங்குசேரு மானவொரு நற்றினத்தி
லருந்தவசி ரேஷ்டவசிஷ் டரின்கைதன்னாற்
பட்டாபி ஷேகஞ்சே தார்நட்பு அனுமந்த னடிவருடல்
பழியில்லாச் செங்கோலின் பான்மைசொல்வாம்

### கொண்டிச்சிந்து

பரதர் தலைப்பாரம்-இறக்கிடப்
பதிலாள்வந் திட்டபின்னும் பொறுப்பாரோ
பரபரப்பாய் அங்குமிங்கும்-குருக்களிடம்
பண்பாகச் சொல்லிநற் றினம்பார்த்தார்

எங்கேபார்த் தாலும்மகிழ்ச்சி-அயோத்தியில்
எழில்ரகு நாதர்வந்து சேர்ந்தாரென்று (எங்)
மங்களப்பட் டாபிஷேகம்-செய்வதற்கு
மனம்ஒத்து எவருமே பாக்கியின்றி

சித்திரப்பந் தல்களமைத்து-எங்கேனும்
சிறந்தவா ழைகமுகு மரங்கள்நாட்டி
சுத்தமாய்ச் சித்திரக்கோலங்கள்-போட்டுமே
சுந்தர மகாதோ ரணங்கட்டினார்

பண்டிபண்டி யாய்த் தாம்பூலம்-சந்தனம்
பழவர்க் கங்கள்யாவும் வந்துசேர்ந்தது
எண்டிசையுந் தீபம்அமைத்து-அய்யோத்தி
எழிலம ராவதிபோல் இலங்கினது

ராஜர்கள்எல் லாரும்ஓர்பக்கம்-அமர்ந்தனர்
ராக்கதரும் ஓர்பக்கமாய் அமர்ந்தனர்காண்
ஆசனங்கள் அவரவர்க்கு-அமைத்ததிலே
அன்பாய் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தனர்

தவரிஷி கள்எல்லோரும்-தங்கள் தங்கள்
தவவேடக் கோலத்துடன் வந்தமர்ந்தனர்

தவஞ்செய்து காத்திருந்த-குடிகளெல்லாம்
தக்கபடி யோர்பக்கமாய் அமர்ந்திருந்தார்

வானரச் சேனை யெல்லாம்-ஓர்பக்கமாய்
வனப்பாம் முகப்பொலிவோ டேயமர்ந்தனர்
கானவேடர் குகன்குடிகள்-படைகளுடன்
கண்களிக்க ஓர்பக்கமாய் அமர்ந்தனர்காண்

சுக்கிரீவன் ஆக்ஞையினால்-வானரர்மூலம்
தூபதீர்த் தங்கள்எல்லாம் வந்துசேர்ந்தன
முக்கு மூலைகள் கூட-அயோத்தியில்
மிகவலங் காரஞ்செய்யப் பட்டிருந்தன

சீதநாண் மலர்எங்கணும்-சிறந்திருக்க
சிறந்தவாத் தியச்சத்தம் நிறைந்திருக்க
வேதப் பிராமணர்கள்-ஓர்பக்கமாய்
வேதங் கோஷித்துக்கொண்டு அமர்ந்திருக்க

காதலாய்ச்சுக் ரீவர்அங்கதர்-வீரருடன்
கனமுள்ள லங்கேசர் விபீஷணரும்
ஆதர வுடன் குகரும்-அவையினில்
அன்புடன் சிறப்புச்செய்ய அமைந்ததன்பின்

மேதகு வசிஷ்டர் சொல்மேல்-நால்வரும்
மைதிலியுந் தூபதீர்த்த ஸ்நானமாடி
ஆதர வுடன் வரவும்-வசிஷ்டர்
அன்புடன்ரா கவருடன் ஜானகியையும்

ரத்தினச்சிங் காசனத்தில்-அமரச்சொல
ராமரும் இடத்துடைமேல் ஜானகியுமாய்
சித்த முவந்து இருக்க-லக்குமர்
சிறந்த விருது கொண்டு சீதை பின்நிற்க

சுக்ரீவன் வடமேற்கு-மூலையிலும்
துணைவ னிலங்கேச னீசான்யத்திலும்
அங்கதன் றென்கிழக்கு-மூலையிலும்
அரண்போல் ஜாம்பவன்றென் மேற்கிலுமாய்

பாதர்குலக் கொற்றக்குடையைக்-கையினில்
பண்பாக ஏந்திப்பின்னால் வலமேநிற்க
அரசன் வலத்துடை யண்டை-சத்துருக்கன்
அன்பாக வெண்சாமரைக் கையுடன்நிற்க

சித்தமாய் அனுமார்வந்து-ராமர்தாள்
சிறப்பாய்த் தொழுதபின்னர் பக்கம்இருக்க

இத்தரையில் நற்றவமதாய்-வசிஷ்டர்
எழில்ராமர் சிரசினிற் கிரீடஞ்சூட்டினர்

மங்களம் பாடினர்கள்-மற்றுமுள
மகிழ்ச்சியாஞ் சோபனங்கள் பாடினர்கள்
எங்கும் நிறைந்த பெரியோர்-எழுந்துநின்று
இங்கித மனதுடனே ஆசிசொற்றனர்

தங்கள் தங்கள் திருப்தி போல-எல்லோரும்
தக்கமறி யாதைபெற்றுத்திரும்பினர்கள்
இங்கிதமாய் ராகவரும்-அனேககாலம்
என்றும் உன்னும் போதனுமார் சேவையுடனே

சற்றும்மனு தர்மமுறை—தவறுமல்
தம்பியர் சீதைசகிதம் அரசுசெய்தார்
சித்தமுடன் இக்கதையினைச்-சிந்தாகச்
செய்தவரும் சந்ததியும் சீருடன்வாழ்க

மற்றவர் களும்வாழ்க-இக்கதையினை
மானிலத்திற் படித்தவர் கேட்டவர்வாழ்க
நற்றவமே பெருகி யென்றும்-மாரியால்
நம்நாடு செழித்தோங்கி யென்றும்வாழ்க

புண்ணிய கதைகள் மூன்றென-நம்நாட்டிற்
புகல்வர் பெரியோர்கள் அவைகள் தாம்
பன்னிய யிக்கதையும்-பாரதமும்
பாகவதமு மென்றுநீயறிவாய்

உண்மையாய் விருப்பமுடன்-இவைகளை
உணர்பவர் அரசரின் நீதியறிவார்
தண்ணளி பொறுமை மற்றும்-நற்குணங்கள்
தகுதியா யடைவா ரிதுதிண்ணம்

இன்ன குணமுடைய—இவைகளை
எல்லோரும் அறிந்திடல் மிகநன்று
மன்னியநீதிகளை-அனுஷ்டானத்தில்
மாண்புறக் கொள்ளுதல் அதனின் நன்று—தெந்

மங்களம்

மங்களம் மங்களம் மங்களம்—ஜெயமங்களம்
மங்களம் மங்களம்மங் களம்மங்களம்

தன்மகன் காடேகும்—முன்னதாய்
தான்தென் புலஞ்சேரத் தீர்மானஞ்செய்து
விண்நாடு தனையடைந்த-வேந்தர்க்கு
வேந்தராகுந் தசரத ருக்குமங்களம் (மங்)

தண்மனப் பாதனுக்குப்-பட்டம்என்று
தான்கேட்ட மாத்திரத்தில் அகங்களித்து
தன்னிளையாள் மக்களையும்-தனதாய்க்கொண்ட
தண்ணளி யுடையகௌச லைக்குமங்களம் (மங்)

தன்தமையன் ஸ்ரீராமரைத்-தந்தையாயும்
தக்ககற்பி னள்ஜானகி யன்னையாயும்
பின்னமிலா துன்னும்வகையாய்ச்-சொன்னபெரும்
பீடுடை சுமித்திரையா ளுக்குமங்களம் (மங்)

சோதரர் வாஞ்சை யிவ்விதம்-என்பதாய்ச்
சுத்தமான அத்தாட்சியாய்க் காட்டியேவைத்து
பாதுகை யரியணை வைத்து-நந்திக்கிராமப்
பண்டார மானபர தர்க்குமங்களம் (மங்)

அந்தண்மனப் பாதருக்கு-அடிநிழலாய்
அழகாய்லக் குமர்ராமர்க் கமைந்ததுபோல்
எந்தநேர முமபரதரின்-இணைபிரியா
இளையோன்சத் துருக்கண ருக்குமங்களம் (மங்)

பெருமான் தொண்டுகொண்டு-சிரஞ்சீவியாய்
பேரணை மீதினிற் சுமந்துசென்று
அருமையாய் அடி வருடிக்-கொலுவினில்
அமர்ந்துள்ள அனுமா ருக்குமங்களம் (மங்)

துணையாகச் சேனைவகுத்து-இலங்கையிற்
சுத்தவீரன் ராவணனை மார்பில் உதைத்த
இணையில்லா வானரர்களின்-அரசான
எழிற்சுக் கிரீவ ருக்குமங்களம் (மங்)

வேத நெறிகள் கடந்து-நின்றிட
வியன்தசக் கிரீவனுதும் தமயன்தனை
பேதஞ்செய்து சீதைதுணையாய்-மகளைவைத்த
பீடுடை விபீஷண ருக்குமங்களம் (மங்)

அருமையாய் லக்குமணரைத்-தோளில்வைத்து
அணைகடந் தக்கரையிற் கொண்டுசேர்த்து
பெரும்வேல் இராவணன் விட்ட-போதினிற்
பெறமுன் ஓடினஅங்க தர்க்குமங்களம் (மங்)

மோனப் பாத்துவரஜர்-வரங்கேட்க
மூர்த்தியாகும் ராமருக்குச் சொன்னபொழுது
வானரர்கள் வாழ்ந்திடவென-வரங்கொடென்ற
வாறுபோல வானர்க ளுக்குமங்களம் (மங்)

அந்தமுள்ள அசோகவனம்-ஜானகி
அவல முறும்போதெல்லாம் தேறுதல்சொல்லி
சொந்தஅன்னை போலநினைத்த-திரிச்சடைக்கும்
தூய்மனச் சரமையம்மணிக்குமங்களம் (மங்)

அத்திரி ஸரபங்கர்-ஸுத்தீஷணர்
அருட்குரு வசிஷ்டர் கௌசிகர் கௌதமர்
மெத்தஇனி செந்தமிழ் முனி-சவரியுடன்
மேன்மையுறு தவரிஷி கட்குமங்களம் (மங்)

இருதரம் ராமர்லக்குமர்-சோர்ந்திட
இதமாக அனுமாரைச் சஞ்சீவியாய
மருந்து கொணரச் செய்த-ஜாம்புவார்
மாகாடி கட்குராஜ ருக்குமங்களம் (மங்)

வெகுநேரம் யுத்தமே செய்து-ராவணனின்
வில்சா ரதிபரி மணிகள் அழித்து
மிகுவீர சொர்க்க மடைந்து-மேன்மைபெற்ற
மிகுபல ஜடாயுரா ஜர்க்கு மங்களம் (மங்)

குஞ்சுபோல்ரெக்கைமுளைத்துக்-துணமாகக்
கோகஹ ஞந்தரமாய்ப் பறந்துநின்று
மஞ்சுநிகர்க் குழல்ஜானகி-அசோகவனம்
மன்னியதாய்ச் சொன்ன சம்பா திக்குமங்களம் (மங்)

பொங்குபுக ழயோத்திதன்னில்-தசரதர்க்குப்
புகழ்பெற்ற சிரேஷ்ட மகனும்ராமர்
பங்கமிற் கற்பரசிசீதை-லக்குமராம்
பாரினி லிவர்மூவர்க்கும் என்றும்மங்களம் (மங்)

இவ்விதமாய்த் துஷ்டர்களை-நிக்ரஹிக்க
இதமாய்க் காரியகார ணங்களமைத்து
செவ்விதா யவனியே யாகச்-செய்தருளும்
திருவுள்ள ஆதிமூலத் துக்குமங்களம் (மங்)

சுபம்!! சுபம்!! சுபம்!!!

## இந்நூலாசிரியர் இயற்றிய

## இதர நூற்கள்

| | |
|---|---|
| புதுக்கோட்டை கோயிற்றிருப்பதிகமும் நவமணிச் சிந்தும் | 0—0—6 |
| ஹெல்த் அன்பேபிவீக் சுகாதாரப்பாடல்கள் | 0—0—6 |
| இந்துதேச சரித்திரச் சிந்து ... | 0—4—0 |
| மஹாபாரதச் சிந்து ... | (அச்சில்) |
| பாஹவதச் சிந்து ... | (அச்சில்) |
| ஜானகி ராமர் சம்பவமாலை ... | (அச்சில்) |

---

விலாசம்:—

**பால் எதல்பட் கோனர்,**

தெற்கு வாணியன் விளைத்தெரு,

தூத்துக்குடி, (வடபாகம்).

மதராஸ் சதாசிவயோகி அவர்களின்

# அகஸ்தியர் குளிர்தாமரை

# தைலம்.

டிரேட் மார்க்.

ஜமீன்தார்கள், பிரபுக்கள், ஐகோர்ட் ஜட்ஜுகள் முதலிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாலும், இங்கிலீஷ் டாக்டர்களாலும், தமிழ் வைத்திய நிபுணர்களாலும், கோடிக்கணக்கான வியாதியஸ்தர்களாலும் புகழப்பெற்றது. கணக்கற்ற நற்சாக்ஷி பத்திரங்களும், "**தைலங்களின் அரசன்**" என்னும் சிறந்த பட்டமும், தூத்துக்குடியில் நடைபெற்ற சுதேச பொருட்காட்சியில் தங்க மெடலும், சர்ட்டிபிக்கேட்டும் பெற்றது.

12-அவுன்ஸ் தைலம் ரூ 1—4—0
6 ,, ,, ரூ 0—10—0

ஏஜெண்டுகள் தேவை. விபரத்துக்கு எழுதவும்.

**பூபதி & கோ.,**
பெரியகாட்டன் ரோடு,
**தூத்துக்குடி.**